செந்தமிழறிஞர்கள் 108

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

அம்பை





NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

ISBN : 978-81-686100-8-8

https://www.annacentenarylibrary.org/pages/view/168-%E0%AE%85%E0%AE%AE%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%88_1944

செந்தமிழ்சிற்பிகள்

அம்பை (1944)



அறிமுகம்

அம்பை (நவம்பர் 17, 1944) அம்பை தமிழில் சிறுகதைகளும், ஆய்வுக்கட்டுரைகளும் எழுதும் எழுத்தாளர். தமிழில் பெண்ணியம் சார்ந்து எழுதிய முதன்மைப் படைப்பாளி என விமர்சகர்களால் கருதப்படுபவர். பெண்ணியக் களச்செயல்பாட்டாளர். சமூகவியல் ஆய்வாளர். ஆங்கிலத்தில் C.S.Laksmi என்னும் இயற்பெயரில் ஆய்வுக்கட்டுரைகளை எழுதியவர். 1960களின் பிற்பகுதியில் எழுதத் தொடங்கியவர். காதல், திருமணம், அரசியல், இசை என்று பல்வேறு பரிமாணங்களைத் தொட்டவர். தமிழகத்தின் எல்லை கடந்த நிலப்பகுதிகளையும் களனாகக் கொண்ட இவரது கதைகளில் பெண்களின் உறவுச் சிக்கல்கள், பிரச்சனைகள், குழப்பங்கள், கோபதாபங்கள், சமரசங்கள் யாவும் கிண்டலான தொனியில் கலாபூர்வமாக வெளிப்படுகின்றன.

இவர் "SPARROW" (Sound and Picture Archives for Research on Women) என்ற அமைப்பை நிறுவி அதன் இயக்குநராக செயல்பட்டு வருகிறார். தி இந்து, தி எக்னாமிக்ஸ் அண்ட் பொலிடிக்கல் வீக்லி, தி டைம்ஸ் ஆஃப்

இந்தியா போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு அவ்வப்போது எழுதி வருகிறார். 1976இல் விஷ்ணுவைத் திருமணம் செய்துகொண்டார். திருமணத்திற்குப் பின்னர் கணவருடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி குழந்தை பெற்றுக்கொள்வதில்லை என முடிவு செய்தார். பொருளாதாரக் காரணங்கள் மட்டுமின்றி படைப்பு, மற்றும் தான் தேர்ந்தெடுத்த சமூகப் பணிகளுக்குக் குழந்தைகளை உள்ளடக்கிய குடும்ப அமைப்பு தடையாக இருக்கும் என்பது அவரது கருத்தாக இருந்தது. வரலாற்றில் எம்.ஏ பட்டமும் அமெரிக்கன் ஸ்டடிஸில் முனைவர் பட்டமும் பெற்றவர். தமிழ், ஆங்கிலம், இந்தி மற்றும் கன்னடத்தில் புலமை பெற்றவர். 'தங்கராஜ் எங்கே' சிறுவர் திரைப்படத்திற்கு வசனம் எழுதியுள்ளார். 'முதல் அத்தியாயம்' என்ற சிறுகதையைத் திரைப்படமாகத் தயாரித்துள்ளார்.

நூல்கள்

அந்தி மாலை (நாவல்), ஒரு கறுப்புச் சிலந்தியுடன் (1988), அந்தேரி மேம்பாலத்தில் ஒரு சந்திப்பு (2014), *சிறகுகள் முறியும்* (1976) - (முதலாவது தொகுதி - ஓர் பெண்ணின் வாழ்வில் ஏற்படும் பலவிதமான சம்பவங்களை சம்பிரதாயங்களை பேசும் கதைகள்), *வீட்டின் மூலையில் ஓர் சமையல் அறை* (1988), *காட்டில் ஒரு மான்* (2000), *சக்கர நாற்காலி, ஸஞ்சாரி, தண்ணியடிக்க, வற்றும் ஏரியின் மீன்கள்* (2007), *பயணப்படாத பாதைகள்* (ஓவியம், நாடகம், பாரம்பரிய நடனத்துறைகளில் ஈடுபட்ட பெண்களின் வாய்மொழி வரலாற்றுப்பதிவு), *சொல்லாத கதைகள்* (சுதந்திரப் போராட்டத்தில் பங்குபற்றிய பெண்கள், தலித்எழுத்தாளர்கள் ஆகியவர்களின் வாய்மொழி வரலாற்றுப்பதிவு)

ஆங்கில மொழிபெயர்ப்பில்


- *A Purple Sea* (1992), *In a Forest, A Deer* (2006), *The Face Behind the Mask of Women in Tamil literature and Society and Women Writers* (1984) - (ஆராய்ச்சி நூல்), Fragrance of Peace(இரோம் சர்மிளா)- தமிழில் "அமைதியின் நறுமணம்" (2010)

சாகித்திய அகாதமி விருது

இவர் எழுதிய *சிவப்பு கழுத்துடன் ஒரு பச்சை பறவை* என்ற சிறுகதை நூலுக்கு 2021 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதமி விருது அறிவிக்கப்பட்டது.

(😊)(😊)(😊)@@@@@@(😊)(😊)(😊)

படைப்புகள்



அம்பை முழுத்தொகுதி

நாவல்கள்

- அந்திமாலை (1966)

சிறுகதைத் தொகுப்புகள்

- சிறகுகள் முறியும் (1976)
- வீட்டின் மூலையில் ஓர் சமையல் அறை (1988)
- காட்டில் ஒரு மான் (2000)
- வற்றும் ஏரியின் மீன்கள் (2007)
- ஒரு கறுப்புச் சிலந்தியுடன் ஓர் இரவு (2013)
- அந்தேரி மேம்பாலத்தில் ஒரு சந்திப்பு (2014)
- ஸாரஸ் பறவை ஒன்றின் மரணம்-சுதா குப்தாவின் துப்பறியும் அனுபவங்கள்
- சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை (சாகித்ய அகாடெமி விருது)
- அம்பை சிறுகதைகள் முழுத்தொகுப்பு (1972-2014) (காலச்சுவடு பதிப்பகம்)

- இரு பைகளில் ஒரு வாழ்க்கை (2024) (காலச்சுவடு பதிப்பகம்)

சிறார் நூல்கள்

- நந்திமலைச்சாரலிலே (1960)

தொகுப்புகள்

- பயணப்படாத பாதைகள் (ஓவியம், நாடகம், பாரம்பரிய நடனத் துறைகளில் ஈடுபட்ட பெண்களின் வாய்மொழி வரலாற்றுப் பதிவு)
- சொல்லாத கதைகள் (சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்ற பெண்கள், தலித் எழுத்தாளர்கள் ஆகியவர்களின் வாய்மொழி வரலாற்றுப் பதிவு)
- செல்லம்மாள்-நினைவுக் குறிப்புகள் 1993

ஆய்வு நூல்கள்

- உடலெனும் வெளி-பெண்ணும் மொழியும் வெளிப்பாடும்
- The Face behind the Mask: Women in Tamil Literature
- Seven Seas & Seven Mountains series: (2 volumes)
- Volume 1: The Singer and the Song - Conversations with Women Musicians
- Volume 2: Mirrors and Gestures - Conversations with Women Dancers (ed.)
- The Unhurried City - Writings on Chennai.

மொழிபெயர்க்கப்பட்ட படைப்புகள்

- A Purple Sea (லட்சுமி ஹோம்ஸ்ட்ரோம்)
- A Deer In the Forest (லட்சுமி ஹோம்ஸ்ட்ராம்)
- Fish in a Dwindling Lake (லட்சுமி ஹோம்ஸ்ட்ரோம்)
- A Night with A Black Spider Stories (Aniruddhan Vasudevan)
- A Meeting on the Andheri Overbridge.

மொழியாக்க படைப்புகள்

- சைபீரியப் பனியில் நடனக் காலனியுடன்-ஸான்ட்ரா கால்னியடே

- அமைதியின் நறுமணம்- இரோம் ஷர்மிளா

https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-jun24/47021-2024-08-06-04-36-13

அம்பையின் படைப்பும் ஆளுமையும்

வெ.சந்தியா

அம்பையின் எழுத்துக்கள் மனித மனங்களில் மாற்றத்திற்கான தூண்டுதலாகவே இருப்பதை அவரது படைப்புகளான சிறுகதைகள் உணர்த்துகின்றன. சிறுகதை இலக்கியமானது இக்கால இலக்கிய வகைகளுள் தனக்கென தனி அடையாளத்தையும், தனித்துவத்தையும் உருவாக்கியுள்ளது. அம்பையின் சிறுகதைகள் கதையாக மட்டுமில்லாமல் படிப்போரின் வாழ்வியல் தடங்களை ஒருங்கிணைக்கும் நினைவுச் சின்னங்களாகவும் இருக்கின்றன. நம் சமூகத்தில் எந்த ஒரு இலக்கியம் படைக்கப்படும் போதும் அதன் படைப்பாளியும் அவ்விலக்கியத்தின் வழியே ஆராயப்படும் போது தான் அவ்விலக்கியத்தின் எதார்த்த நிலையை புரிந்து கொள்ள முடியும். இன்றைய சமுதாயத்தின் சிக்கல்கள் முதல் சவால்கள் வரை கதையின் மையப் பொருளாக்கப்பட்டு சிறுகதைகள் எழுதப்படுகின்றன. அவ்வாறு எழுதப்படும் சிறுகதைகளின் நோக்கம் நிறைவேறும் போது அந்தப் படைப்பானது வெற்றி பெறுகின்றது. தமிழ்ச் சிறுகதைகளில் அம்பையின் சிறுகதைகள் தனக்கென தனிப் பாதையை அமைத்துக் கொண்டு பயணித்திருக்கின்றன. அம்பையின் சிறுகதை உருவாக்கத்தில் கதைத் தலைப்பு, கதைத்திட்டம், கதாப்பாத்திரம் வழியே அவரது படைப்பாளுமையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கதைத் தலைப்பு:

சிறுகதைகளின் தலைப்புகள் படிப்போர்க்கு ஆர்வத்தைத் தூண்டுவதிலும்,கதையின் மையப் பொருளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதிலும், கதையின் நோக்கத்தை வெற்றி பெறச் செய்வதிலும்

முக்கியப் பங்கு வகிக்கின்றன. "பல்வகைப் பொருளையும் தன்னுட் செறித்து காட்டும் சிறிய கண்ணாடி போலத் தலைப்புகள் அமைய வேண்டும்" (தா.எ.பியூலா மெர்சி-1974,பக்-18,19). ஒரு கதையின் தலைப்பே அந்த கதையைப் படிக்கும் எண்ணத்தை வாசகர் மனதில் விதைக்கின்றது. அம்பையின் சிறுகதைகளில் கதைத் தலைப்புகள் கதாப்பாத்திரத்தின் ஆளுமையோடு தொடர்பு கொண்டும்,கதாப்பாத்திரத்தின் வாழ்வியலை மையப்படுத்தியும் அமைந்துள்ளன.



கதாப்பாத்திரத்தின் ஆளுமைத் தொடர்பான தலைப்பு:

சிறகுகள் முறியும் என்ற சிறுகதையில் கணவனால் மனதளவில் காயப்படுவது மட்டுமில்லாமல் பொருளாதார நெருக்கடிக்கு தள்ளப்படும் சாயாவின் வாழ்க்கை ஓட்டமானது அவளுக்கே புரியாத புதிராக உருவெடுக்கிறது. திருமணத்திற்கு முன்பு தன் ஆசைகளையும் கனவுகளையும் நிறைவேற்ற எவ்விதத் தடையும் இல்லாமல் சிறகுகள் முளைத்த பறவையாய் பறந்த சாயா திருமணத்திற்குப் பிறகு தன் சுதந்திரத்தை இழந்து சிறகுகள் முறிந்த பறவையாய் ஒடுக்கப்படுகிறாள். சாயாவின் ஆளுமை சிதையும் தருணமே “சிறகுகள் முறியும்” என

சிறுகதைக்கு தலைப்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது எனலாம்.(அம்பை-1972,பக்.80-112).

கதாப்பாத்திரத்தின் வாழ்வியலை மையப்படுத்திய தலைப்பு:

காட்டில் ஒரு மான் என்ற சிறுகதையில் தன் பெயருக்கேற்ற குணம் கொண்ட தங்கம் அத்தை தான் கூறும் கதையின் மூலம் அவளது வாழ்க்கையை விளக்க முறப்படுகிறாள். தண்ணீர் குடிக்கச் சென்ற மான் கூட்டத்தில் பாதை மாறி வேறு காட்டிற்குச் சென்ற ஒரு மானுக்கு ஏற்படும் வித்தியாசமான அனுபவமும், பயமும் ஒரு பௌர்ணமி நிலவொளியில் விலகிப் போவதும் அந்தப் புதிய காட்டிற்கு அந்த மான் பழகிப் போவதுமாக தன் வாழ்வோடு பொருத்தி தங்கம் அத்தை கதை கூறுகிறாள். காட்டில் தனியாக தவிக்கும் மான் குறிப்பிட்ட கட்டத்தில் வித்தியாசமான சூழலை ஏற்றுக் கொள்வதை தங்கம் அத்தையின் வாழ்வியலோடு ஒப்பிட்டு “காட்டில் ஒரு மான்” என சிறுகதைக்கு பெயரிடப்பட்டுள்ளது. (அம்பை-2000, பக்-76-82)

கதைத்திட்டம்:

கதை நிகழ்வுகளை கதை அமைப்புக்கு ஏற்றவாறு முறையாக வரிசைப்படுத்தி அமைப்பதே கதைத்திட்டமாகும். கதையின் கருவை மையப்படுத்தி கதைத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்."வாசகனின் உணர்வுகளைத் தூண்டி ஆழ்ந்த உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கும் கதைகளே வெற்றிகரமாக அமையக்கூடியவை" (ரா.ராஜதுரை - 1970, ப-118). கதையின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் கதைத்திட்டமானது ஒரே சீராக பயணிக்க வேண்டும்.அம்பையின் சிறுகதைகளில் கதைத்திட்டமானது ஒரு பெண்ணின் கதையாகவும், கதைக்குள் கதையாகவும் அமைந்துள்ளது.

ஒரு பெண்ணின் கதை:

ஒரு பெண்ணுக்கு பொருளாதார சுதந்திரம் மறுக்கப்படும் போது ஏற்படும் மன உளைச்சல்களையெல்லாம் சிறகுகள் முறியும் சிறுகதை வெளிப்படுத்துகிறது. தன் கணவன் பாஸ்கரனின் கஞ்சத்தனத்தால் வாழ்வின் வெறுமையை உணரும் சாயாவின் மனநிலை, அவளது கடந்த கால நினைவுகள் மற்றும் எதிர்கால வாழ்க்கை பற்றிய கவலைகள் என அனைத்து தருணங்களையும் கதை பதிவு செய்கிறது. திருமணத்திற்குப் பிறகு இல்லறப் பொறுப்பை ஏற்று வழிநடத்தும் பெண்களின் உழைப்பை

அந்தக் குடும்ப உறுப்பினர்களே உணர்வதில்லை தனக்கான கடமையை உணர்ந்து சரிவர ஆற்றினாலும் அவர்களின் உரிமை மறுக்கப்படும் உண்மையை இச்சிறுகதை உரக்கச் சொல்கிறது. திருமண வாழ்வில் சாயாவுக்கு ஏற்படும் சிக்கல்கள், அவளுக்கு பிறந்த வீட்டில் இருந்த சுதந்திரம் என்ற நோக்கில் கதை அமைக்கப்பட்டுள்ளது.(அம்பை-1972, பக்-80-112)

கதைக்குள் கதை:

சமூகத்தோடு சேர்ந்து கொண்டு பெண்ணுக்கென சில கட்டமைப்புகளை வகுத்திருக்கும் இயற்கையின் பிடியில் சிக்கிக் கொண்ட தங்கம் அத்தையின் வாழ்வியலை கதைக்குள் கதையாய் காட்டில் ஒரு மான் சிறுகதை பதிவு செய்கிறது. ஒரு பெண்ணுக்கு இயற்கையாக நடக்க வேண்டிய நிகழ்வுகள் தவறும்போது அந்தப் பெண் சமூகத்தின் பார்வையில் வித்தியாசமானவளாக உணரப்படுவதை கதையின் அடுத்தடுத்த நகர்வுகள் வெளிப்படுத்துகின்றன. பூக்காத உடம்பு என்ற பழியை ஏற்றிருக்கும் தங்கம் அத்தை அதிலிருந்து தப்பிப்பதற்காக சந்தித்த இன்னல்களையும் கதை பதிவு செய்துள்ளது. ஒரு கட்டத்தில் தனக்கான பாதை இது தான் என தேர்வு செய்து அதில் வாழப் பழகிக் கொள்ளும் தங்கம் அத்தையின் தங்கமான குணநலன்கள், அத்தையின் அரவணைப்பில் அழகான குடும்பம், குழந்தைகள் என கதை விரிவடைகிறது. (அம்பை-2000, பக்-76-82)

கதாப்பாத்திரங்கள்:

ஒரு கதைக்கு உயிரோட்டத்தை அளித்து கதைக்கு தலைமை வகிப்பவர்கள் கதாப்பாத்திரங்களே ஆவர். "பாத்திரப்படைப்பு என்பது ஒரு பகுதியே என்றாலும் அது ஓர் இன்றியமையாத பகுதியாகும்.சிறப்பு வரிசையில் முதலிடம் பெறும் பகுதி" (கரு.முத்தையா-1980, ப.21). கதாப்பாத்திரங்களைக் கொண்டே கதை நிகழ்வுகள் கட்டமைக்கப்படுகின்றன. அம்பையின் சிறுகதைகளில் முதல் நிலை மற்றும் முதன்மை கதாப்பாத்திரங்கள், துணைநிலை கதாப்பாத்திரங்கள், சிறு கதாப்பாத்திரங்கள் மற்றும் பிற கதாப்பாத்திரங்கள் என பாத்திரப் படைப்பை வகைப்படுத்தலாம்.

சிறகுகள் முறியும் சிறுகதையின் கதாப்பாத்திரங்கள்:

முதல் நிலை கதாப்பாத்திரங்கள்:

திருமண வாழ்வில் ஒரு பெண் தன் கணவனின் செயல்பாடுகளினால் சந்திக்கும் சிக்கல்களால் வாழ்க்கையை வெறுப்பவளாக சாயா கதாபாத்திரமும், மனைவியின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத கணவனின் பிரதிபலிப்பாக பாஸ்கரன் கதாபாத்திரமும் படைக்கப்பட்டிருக்கிறது. சாயாவின் பரிபூரண சம்மதத்துடன் பாஸ்கரன் - சாயா திருமணம் நடைபெற்றாலும் திருமணத்திற்குப் பிறகு தன் கணவனின் நிபந்தனைகளாலும், கஞ்சத்தனத்தாலும் அவள் அடையும் மன வேதனையை வெளிப்படுத்த முடியாமல் மனதுக்குள்ளே சட்டங்களை உருவாக்கிக் கொள்பவளாக அவளது கதாபாத்திரம் அமையப் பெற்றுள்ளது. திருமணம் நிச்சயம் ஆனவுடன் கடற்கரை, சினிமா என்று சாயா தோழிகளுக்கு செலவழித்ததையும், அவளது கற்பனைகளுக்கு மாறாக அமைந்திருக்கும் திருமண வாழ்வை வேறு வழியில்லாத காரணத்தினாலேயே தொடர்வதையும் கதையின் வழியே அறிய முடிகிறது. தன் மகன் சேகரின் தேவைகளை நிறைவேற்ற விரும்பும் பாசமிகு தாயாக சாயா இருப்பதையும் கதை உணர்த்துகிறது.

பிறந்த வீட்டில் அம்மாவை அலைக்கழித்ததற்குத்தான் இத்தகைய தண்டனையை அனுபவிப்பதாக நினைக்கும் சாயாவின் எண்ண ஓட்டங்கள் கதையில் எதார்த்தமாக வெளிப்பட்டுள்ளது. தையல் கலையில் ஆர்வம் கொண்டு அதன் மூலம் தனக்கான அடையாளத்தை உருவாக்கிக் கொள்ளும் சாயாவின் கடின உழைப்பையும் கதை வெளிக்கொணர்ந்துள்ளது. தன் தங்கை பூமாவின் பெண் பார்க்கும் சடங்கிற்கு அனுப்ப மறுக்கும் பாஸ்கரன், மீது சாயாவுக்கு ஏற்படும் வருத்தமானது அவனை விட்டு சென்று விட வேண்டும் என அவள் நினைப்பதாக சாயாவின் கதாபாத்திரம் அழுத்தமாக கட்டமைக்கப்பட்டுள்ளது. சிக்கனம் என்ற பெயரில் தேவையான செலவுகளுக்குக் கூட கணக்கு பார்க்கும் கஞ்சத்தனம் நிறைந்தவனாகவும், சாயாவின் சமையலை சாப்பிடுவதை ஹோட்டலில் சாப்பிடுவதை விட இலாபமாக பார்க்கும் மனைவியின் மன உணர்வுகளை புரிந்து கொள்ளாதவனாகவும் பாஸ்கரன் கதாபாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. சாயாவின் ஆசைகளை நிறைவேற்றுவதற்கும், அவள் தைப்பதற்காக வாங்கும் ஊசி நூல்களுக்குக் கூட கணக்குப் பார்ப்பவனாகவும் பாஸ்கரன் இருப்பதையும் கதை உணர்த்துகிறது. நண்பன் மகன் பூணூலுக்கு பரிசு அளிப்பதற்குக் கூட மனைவியிடம் வாக்குவாதம் செய்யும் கணவனாகவும், மனைவிக்கு வரும் கடிதங்களை

பரிசீலனை செய்பவனாகவும் பாஸ்கரன் இருப்பதை கதையின் வழியே அறிய முடிகிறது. பாஸ்கரனின் இத்தகைய குணாதிசயங்களுக்கு சின்ன வயதில் அவன் அனுபவித்த கஷ்டங்களே காரணமாகிப் போவதையும் கதை வெளிக்கொணர்ந்துள்ளது.(அம்பை-1976, பக்.80-112)

துணைநிலை கதாப்பாத்திரங்கள்:

சாயா - பாஸ்கரனின் மகனாக இடம்பெறும் சேகர் மூலம் தந்தை- மகன் உறவை விட தாய் - மகன் உறவானது வலுவாக கட்டமைக்கப் பட்டிருப்பதை கதையில் காண முடிகிறது. சேகருக்கு தந்தையிடத்தில் உள்ள பயமும், தாய் மீது இருக்கும் அன்பும், அக்கறையும் கதையில் தத்ரூபமாக வெளிப்பட்டுள்ளது. தன் மகளின் உள்ளார்ந்த உணர்வுகளை புரிந்து கொண்ட பெண்ணாக சாயாவின் தாய் கதாபாத்திரம் வெளிப்பட்டுள்ளது. பெண்ணுக்கென்றே தகுதிகளை நிர்ணயிக்கும் ஆணாதிக்க சமூகத்தின் வெளிப்பாடாக சாயாவின் தந்தை கதாபாத்திரம் இடம்பெற்றுள்ளது. தங்கையாக தன் அக்கா சாயாவின் சூழ்நிலையைப் புரிந்து கொள்ள முடியாத பெண்ணாக பூமா கதாப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. (அம்பை-1972,பக்.80-112)

சிறு கதாப்பாத்திரங்கள்:

சாயாவின் நாத்தனார் சரோஜா, எதிர்வீட்டு ரஞ்சிதம், அடுத்த தெரு மாலதி போன்றோர் அவளிடம் துணி தைக்கக் கொடுப்பவர்களாக இடம் பெற்றுள்ளனர். மேலும் கதைக்கு அழுத்தம் தராத கதாப்பாத்திரங்களாக சாயாவின் சித்தி, பூமாவை மணக்க இருக்கும் ஈஸ்வரன் போன்ற சிறு கதாப்பாத்திரங்களும் படைக்கப்பட்டுள்ளனர். (அம்பை-1972, பக்.80-112)

காட்டில் ஒரு மான் சிறுகதையின் கதாப்பாத்திரங்கள்:

தங்கம் அத்தை அழகுக் கறுப்பு நிறமுடையவளாகவும், நீவி விட்டாற் போல் ஒரு சுருக்கமும் இல்லாத முகம் கொண்டவளாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளாள். தங்கம் அத்தையிடம் ஆர்வத்துடன் கதை கேட்கும் குழந்தைகளுக்கு அவளைச் சுற்றியிருந்த மர்ம ஓட்டை புரிந்து கொள்ள முடியவில்லை. தங்கம் அத்தை பூக்காத உடம்பை பெற்றவள்

என்ற காரணத்தினால் அந்தக் குறையைச் சரி செய்ய அவள் உடம்பில் ஏற்றாத மருந்தில்லை மருந்துகள், பூசைகள் மற்றும் பிற முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போது அதை ஏற்றுக் கொண்டு தன்னை வருத்திக் கொண்டவளாக தங்கம் அத்தை இருப்பதையும் கதையில் அறிய முடிகிறது. தங்கம் அத்தையின் கைப்பட்டால் தான் மாட்டுக்குப் பால் சுரக்கும், அவள் நட்ட விதைகள் முளை வரும் என தங்கம் அத்தையின் மேன்மையையும் கதை சுட்டிக்காட்டியுள்ளது. மற்றவர்களின் அனுதாபங்களை ஏற்றுக் கொள்ளாதவளாய் இருக்கும் தங்கம் அத்தை தனக்கும் அனைவரையும் போல் பசி, வலி எல்லாம் சமம்தான் என அவளையே சமாதானப்படுத்திக் கொள்ளக் கூடியவளாக படைக்கப்பட்டிருப்பதையும் கதை உணர்த்துகிறது. தங்கம் அத்தையின் கணவர் ஏகாம்பரத்திற்கு வேறு பெண் பார்த்த போது அதை ஏற்றுக்கொள்ள முடியாதவளாக தற்கொலை முயற்சி மேற்கொண்டாலும் பின்னர் அவளே செங்கமலம் என்ற பெண்ணை தன் கணவருக்கு திருமணம் செய்து வைப்பவளாக தங்கம் அத்தையின் கதாப்பாத்திரம் கட்டமைக்கப்பட்டுள்ளது. தன் கணவனின் இளைய மனைவியின் ஏழு குழந்தைகளையும் தன் குழந்தைகளாகப் பாவிக்கும் தங்கம் அத்தையின் உயர்ந்த குணத்தையும் கதை பதிவு செய்துள்ளது. (அம்பை-2000, பக்-76-82)

தங்கம் அத்தையிடம் கதை கேட்பவர்களில் ஒருவராக கதை சொல்லியின் கதாப்பாத்திரம் படைக்கப்பட்டிருக்கிறது. தங்கம் அத்தையைச் சுற்றியிருந்த மர்ம ஓட்டை விளக்குபவளாக தாவணி போட்ட பெண்ணாக வள்ளிமுத்து மாமாவின் மகளாக கட்டமைக்கப்பட்டிருக்கிறாள். இது தவிர பெயரளவு கதாபாத்திரங்களாக தங்கம் அத்தையின் கணவர் ஏகாம்பரம், அவரது இளைய மனைவி செங்கமலம், அவர்களது ஏழு குழந்தைகள், கதை சொல்லியின் அம்மா போன்றோர் படைக்கப்பட்டுள்ளனர். (அம்பை-2000, பக்-76-82)

தொகுப்புரை:

* அம்பையின் சிறுகதைப் படைப்பில் கதைத் தலைப்பைப் பொறுத்த வரையில் கதாப்பாத்திரத்தை மையப்படுத்தியே தலைப்பிடப்பட்டுள்ளது.

* கதைத் தலைப்புகள் கதாப்பாத்திரங்களோடு தொடர்புகொண்டு இருப்பது மட்டுமில்லாமல், கதையின் கருவையும் வெளிப்படுத்து பவையாகவும் அமைந்துள்ளன.

* கதைத் திட்டமானது கதை பயணிக்கும் இடத்திற்கு தகுந்தாற் போல் நிகழ்காலம், கடந்த காலம் என கட்டமைக்கப்பட்டுள்ளது.

* கதையின் மூலம் நேரடியாக கருப்பொருளை வலியுறுத்துவது, கதைக்குள் கதையாய் கதைக் கருவை காட்சிப்படுத்துவதுமாகவும் கதைத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

* கதையின் நோக்கத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு முதல் நிலை மற்றும் முதன்மை கதாப்பாத்திரங்களாக படைக்கப்பட்டுள்ளனர்.

* முதல்நிலை கதாப்பாத்திரங்களுக்கு வலுச்சேர்க்கும் குடும்பம் மற்றும் சமூகம் சார்ந்த சூழலின் மனித உறவுகளாக துணை கதாப்பாத்திரங்கள் சிறு கதாப்பாத்திரங்கள் மற்றும் பிற கதாப்பாத்திரங்கள் இடம் பெற்றுள்ளனர்.

பார்வை நூல்கள்:

1. அம்பை - சிறகுகள் முறியும், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்,.
2. அம்பை - காட்டில் ஒரு மான், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்,.
3. பியூலா மெர்சி, தா.எ - இருபதில் சிறுகதைகள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
4. முத்தையா.கரு - ஜெயகாந்தன் நாவல்களில் பாத்திரப் படைப்பு,முத்து மீனாள் பதிப்பகம்.
5. ராஜதுரை.ரா - சிறுகதையின் கூறுகள், வளரும் தமிழ் இலக்கியம், கிறித்துவ இலக்கியச் சங்கமம்.

- **வெ.சந்தியா,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் - 632115

வல்லினம்
இருமாத கலை இலக்கிய இதழ்

https://vallinam.com.my/version2/?p=9774

எழுத்தாளர் அம்பை சிறுகதைகள்

by புஷ்பவள்ளி



சி. எஸ். லட்சுமி என்ற அம்பை தமிழின் முதன்மையான எழுத்தாளர்களில் ஒருவர். பெண்களின் உலகை வெளிக்கொணரும் வகையில் தன் படைப்புகளைப் பல்வேறு பரிமாணங்களில் படைத்துச் சென்றுள்ளார். அம்பையின் சிறுகதை உலகம் ‘கலைமகள்’ இதழில் தொடங்கியது. பெண்களின் மனநிலை, துயரங்கள், வாழ்க்கையை அவர்கள் எதிர்க்கொள்ளும் விதத்தை மையமாகக் கொண்ட சிறுகதைகளை எழுதினார். ‘அம்மா ஒரு கொலை செய்தாள்’ எனும் சிறுகதை மூலம் அம்பை வாசகர்களின் கவனத்தைப் பெற்றார்.

ஜூலை 20, மதியம் 3 முதல் மாலை 5 வரை மலாயா பல்கலைக்கழக நூலகத்தில் அம்பையின் சிறுகதைகள் குறித்த உரையாடல் நடைபெற்றது. அமர்வின் முதல் கட்டமாக, அம்பையின் படைப்புலக்கத்தில் உள்ள கலை நுட்பம், சிந்தனைகள் குறித்த அறிமுக உரை ம. நவீனால் வழங்கப்பட்டது. தொடக்ககாலத்தில் அவர் எழுதிய ‘தனிமையெனும் இருட்டு’ எனும் சிறுகதையைக் கூறி, ஒரு பெண்ணின் எதிர்ப்பார்ப்புகள் அனைத்தும் கனவில் இரசிக்க கூடியவையாக மாறி நிஜ வாழ்க்கையில் நிறைவேறாமல் உடைப்படுகிற தருணங்களைச் சித்தரித்தார். ‘உடம்பு’ எனும் சிறுகதையில் வரக்கூடிய ஆணின் உளவியலைப் பெண் எழுத்தாளராக அவர் எவ்வாறு சென்றடைகிறார் என்பது குறித்து விளக்கினார். அறிமுக உரையில் கூறப்பட்ட இவ்விரு சிறுகதைகள் வழி அம்பையின் புனைவுலகை ஓரளவு அறிய முடிந்தது. அந்தப் புரிதலோடு அம்பையின் ‘அம்மா ஒரு கொலை

செய்தாள்', 'காட்டில் ஒரு மான்', 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை' 'கறுப்புக் குதிரைச் சதுக்கம்' ஆகிய நான்கு சிறுகதைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அம்மா ஒரு கொலை செய்தாள்

முதல் சிறுகதையாக 'அம்மா ஒரு கொலை செய்தாள்' குறித்து தினேஸ்வரி தன் பார்வையை முன் வைத்தார். டிசம்பர் 1971ஆம் ஆண்டு வெளியான இச்சிறுகதை ஒரு சிறுமி பருவமடையும் போது ஏற்படும் தடுமாற்றத்தை முன்வைக்கிறது. இக்கதை சிறுமியின் பால்ய வயதிலிருந்து பருவமடைவது வரையிலான நிகழ்வுகளைக் காட்சிப்படுத்துகின்றன. சிறுவர்களுக்கே உரிய களங்கமின்மையுடன் சுதந்திரமாய் வளர்பவளுடன் அம்மா அணுக்கமாக இருக்கிறாள். தாய் தன் தங்கை மகளுக்கு மாப்பிள்ளைப் பார்க்கும் படலத்திற்குச் செல்லும் வேளையில் அச்சிறுமி பூப்படைகிறாள். உடல் ரீதியான மாற்றத்தோடு அவளது சுதந்திரமும் பறிக்கப்படும் வேளையில் அவள் தடுமாறுகிறாள். அம்மா பக்கத்தில் இல்லாதத் தனிமை அவளுக்குக் கொடுமையாக உள்ளது. அவளின் சுதந்திரம் பறிக்கப்பட்டுக் கூண்டில் அடைக்கப்படும் கிளியாக உணர்கிறாள். ஒவ்வொரு தருணமும் அம்மாவின் வருகைக்காகக் காத்திருக்கிறாள். தங்கையின் மகள் கறுப்பாக இருப்பதால் கைநழுவிப் போகும் வரண் குறித்த சஞ்சலத்துடன் வீட்டுக்கு வருபவளுக்கு மகள் பூப்படைந்திருக்கிறாள் எனத் தெரிகிறது. அம்மாவைக் கட்டித் தழுவி தன் கவலைகளைப் போக்கிக் கொள்ளலாம் என்று எண்ணியிருக்கும் சிறுமியின் உணர்வுகளை அம்மா எதிர்காலம் குறித்த பயத்தால் சுக்குநூறாக்குகிறாள். கனவுகள் அனைத்தும் கொல்லப்படுகிறது.

இக்கதையின் சுருக்கத்தைச் சொன்ன தினேசுவரி, தாயின் சொற்களால் இடிந்து உணர்வு அடிப்படையில் சிறுமி கொலை செய்யப்படுகிறாள் என்ற பகுதி இக்கதையின் மையம் என்றும் அவ்விடமே அக்கதைக்கான உச்சமாக மாறுவதையும் குறிப்பிட்டார். இந்த மையமே தலைப்புடன் சரியாகப் பொருந்தி அமைந்துள்ளது என்றார். இக்கதையில் வர்ணனை, உவமைகள், உருவகம் மற்றும் சிறுவர் உளவியலை ஆசிரியர் சிறப்பாகக் கையாண்டுள்ளார் எனக் கூறிய தினேசுவரி, சிறுமியின் ஆடையைக் கண்ணாடி பேழைக்குள் நீந்திக் கொண்டிருக்கும் மீனோடு ஒப்பிடும் காட்சியும் அக்கினி ஜுவாலைக்கும் அடுப்புத் தீக்குமான வேறுபாட்டையும் சிறுவர்களின் பார்வையில் வர்ணிப்பது சிறப்பாக இருந்ததாகவும் குறிப்பிட்டார். அத்தோடு சிறுமி பருவமடைவதற்கு

முன்பும் பின்பும் தாயின் உளவியலில் ஏற்படும் மாற்றத்தை வார்த்தெடுக்கும் எழுத்தின் ஆழம் குறித்தும் சிலாகித்தார்.



இக்கதையைச் சார்ந்து சக வாசகர்கள் தங்களின் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர். இக்கதையின் தொடக்கத்தின் தாயின் பார்வையில் சிலாகிக்கப்படும் அச்சிறுமியின் கருமை நிறம், பருவமடைந்த பின் சுமையாகக் மாறிவிடுகிறது. மகளின் கறுமை நிறத்தை உச்சி மோந்து கொஞ்சி அவளின் சுதந்திரத்தையும் அம்மா ஆராதிக்கிறாள். அதே அம்மா, மகள் பருவமடைந்ததும் தன் தங்கை மகளுக்கு நேர்ந்த துயரம் தன் மகளின் வாழ்க்கையிலும் துரத்தக்கூடும் என்ற அச்சத்தாலும் வெறுப்பாலும் தன் முந்தைய குணத்தைக் கொலை செய்து வேறொரு அம்மாவாகச் சிறுமியின் பார்வைக்கு வெளிபடுகிறார் என விவாதிக்கப்பட்டது.

அச்சிறுமிக்கு அணுக்கத்துணையாகத் தோன்றிய அன்னையின் பிம்பம் சமூக மதிப்பீடுகளினால் கொலையுண்டு, மாறுபடுவதைக் காண்கின்ற சிறுமியின் மனம் சிதைக்கப்படுகிறது. ஒரு மலர் மொட்டிலிருந்து ஒவ்வொரு இதழாக விரிகின்ற தருணத்தை ஒத்த பருவமெய்தும் நிகழ்வை மலர்வதற்கு முன்னரே கைகளால் பறித்தெடுத்துச் சிதைப்பதைப் போன்ற உணர்வையே சிறுமி அடைகிறாள். பெரும்பாலும் தந்தைக்குப் பெண் பிள்ளைகளின் மீதும் தாய்க்கு ஆண் பிள்ளைகளின் மீதும் அதிக அன்பும் அணுக்கமும் இருக்கும் பொதுவான மனநிலைக்கு மாறுபட்டு, தாய்க்கும் மகளுக்கும் இடையே உள்ள உறவைப் பற்றிய மாறுபட்ட பார்வையை இக்கதையில் காண இயலுகிறது என்றும் சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

மகளின் பார்வையில் தெய்வத்திற்கு நிகராக இருந்தவள் தன்னைத் தானே கொலை செய்துகொண்டு சராசரி பெண்ணாக உருகொள்ளும் சிறுகதை இது எனச் சிலரது வாசிப்பு அமைந்தது.

காட்டில் ஒரு மான்

'காட்டில் ஒரு மான்' எனும் சிறுகதை குறித்து அபிராமி தன் பார்வையை முன்வைத்தார். இக்கதை வயதாகியும் பருவமடையாமல் இருக்கும் தங்கம் எனும் பெண்ணின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் கதையாக அமைகின்றது. தங்கம் அத்தை குடும்பத்தின் சிறுவர்களுக்குக் கதை சொல்லி தூங்க வைக்கும் ஒரு நபராக இருக்கிறார். தான் சொல்லும் கதைகளில் அசுரர்களை நல்லவர்களாக மாற்றுகிறார். தங்கம் அத்தையின் வாழ்க்கையில் உள்ளடங்கிய துயரங்களைச் சித்தரிக்கும் வகையில் அவர் சொல்லும் கதைகள் அமைந்துள்ளன.

தங்கம் அத்தையின் கணவன் அவள் மீது அதீத அன்பு கொண்டவர். ஆனால் இரண்டாவது திருமணம் செய்துக்கொண்டவர். தங்கம் அத்தை பூப்படையவில்லை என்பதை வள்ளி கதைச்சொல்லியிடம் சொல்கிறாள். ஆனால், அச்சிறுமிக்கு அதற்கான தெளிவு இல்லாமையால் தங்கம் அத்தையின் மீது அதீத அன்புடையவளாக இருக்கிறாள். அத்தை அவள் அம்மாவின் மீது அரவணைப்பைக் காட்டுவதையும் அவள் தொட்டது அனைத்தும் துலங்குவதையும் கொண்டு எந்தக் குறையையும் காணாதவளாக இருக்கிறாள். தங்கமும் தன்னிடம் எந்தக் குறையும் இல்லை என்பதையும் தான் மகிழ்ச்சியாகவே இருப்பதையும் தனக்கு வேண்டியதைத் தாமே செய்து கொள்ள இயலும் என வெளிபடுத்துகிறாள். தன்னால் குழந்தை பெற்றுக் கொள்ள முடியாததை ஒரு பிரச்சனையாகக் கொள்ளாமல் கணவனின் இரண்டாவது மனைவின் குழந்தைகளுக்குத் தாயாக வாழ்க்கையை நகர்த்துவதை எண்ணி மகிழ்பவளாகக் காட்டிக் கொள்கிறாள். ஆனால், இவற்றை தாண்டி அவள் மனத்தில் உள்ளூர அரித்துக் கொண்டிருக்கும் துயரின் வெளிப்பாடாகத்தான் தன் வாழ்க்கையைக் காடாகவும் தன்னை மானாகவும் உருவகித்துக்கொண்டு சிறுவர்களிடம் கதை கூறுகிறாள்.

இக்கதையையொட்டி சக வாசகர்கள் தங்களின் விரிவான கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர். இக்கதையில் தங்கம் அத்தை பூப்படையாததால் எதிர்கொள்ளும் துயர்கள் ஒரு பெண்ணுக்கான உளவியலை எடுத்துரைக்கும் வகையில் உள்ளதாகக் கருத்துரைத்தனர். அதே வேளையில்

சமூகக் மதிப்பீடுகளுக்காகப் போலியான வாழ்வையொன்றை அமைத்துக் கொள்வதைக் காட்டுவதாகச் சுட்டிக்காட்டினர்.

பூப்படையாமலேயே தாய்மைக்கான குணத்தைக் கொண்டிருக்கும் தங்கம் அத்தையின் கதாப்பாத்திரம் சிறப்பாக இடம் பெற்றுள்ளது. கதையில் வேறொரு காட்டுக்குள் வழிதவறிச் செல்லும் மான் மெல்ல சூழலுக்குப் பழகியும் உள்ளூர வேடனின் ஆபத்தையும் அழகையும் ஒருசேர அனுபவிக்கும் நிலையைச் சித்தரிக்கும் பகுதிகள், தங்கம் அத்தை வாழ்க்கையில் கடந்து வரும் தருணங்கள்தான்.



இக்கதையில் ஒவ்வொரு காட்சியிலும் தங்கம் அத்தையின் செயல் தாய்மையைப் பூர்த்தி செய்யும் இடங்களாகவும் தனக்கான அடையாளத்தையும் வெளிகொணரும் வகையில் உள்ளது. தங்கம் அத்தை வாழும் வாழ்க்கை ஒரு போலியானதாகவும் அதில் ஆனந்தத்தை வலுகட்டாயமாக தேடிக்கொள்வதாகவும் காண இயல்கிறது. இந்தச் சமூகம் கட்டமைப்புக்குள் பெண்கள் மகிழ்ச்சியாக வாழ்வதைப் போல் உட்புகுத்தி பாவனையாகக் காட்டப்படுகிறது என்றும் சில கருத்துகள் பதிவு செய்யப்பட்டன. மானுக்கு அந்தப் புதிய காடு பழக்கமாகினாலும் ஒரு நாள் வேடனின் அம்புக்குப் பழியாகுவது உறுதி என்பதைப் போல தங்கம் அத்தையின் வாழ்க்கையில் சமூகத்தால் எய்யப்படும் சொல் அம்பாகி மனதைத் தைத்துக் கொண்டேதான் இருக்கும் என்றும் கருத்துகள் பகிரப்பட்டன.

வீட்டின் மூலையில் ஒரு சமையலறை

சண்முகா 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை' எனும் கதையை விவரித்தார். ராஜஸ்தானில் கூட்டுக் குடும்பமாக வாழும் வீட்டின் வரவேற்பு அறையைக் காட்டிலும் சமையலறை குறுகலாகவும் எந்த வசதியின்றியும் ஒரு மூலையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கதையின் வழி சமூகத்தில் நிலவும் ஆணாதிக்கப் போக்கை அந்த வீட்டின் அமைப்பே பிரதிபலிப்பதாகக் குறிப்பிட்டார்.

இக்கதையின் மூலம் குடும்பத்தில் நிகழும் ஆணாதிக்கம் எவ்வாறு அது ஆணாதிக்கம் என்றே மறக்கப்பட்டு இயல்பாக்கப்படுகிறது என்றும் பெண்களும் அதற்குப் பழக்கப்படுத்தப்படுவதையும் சுட்டிக்காட்டுகிறது.

பெண்கள் தங்களின் வாழ்நாள் முழுவதையும் சமையலறையிலே முடித்துக் கொள்கின்றனர். மேலும், விதவையான பெண்ணுக்கு ஏற்படும் துயரங்களையும் அவளிடமிருந்து பறிக்கப்படும் உரிமைகளையும் குறித்தும் இக்கதையில் பேசப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டினார்.

ஆணாதிக்கச் சமூகம், குடும்பம், பண்பாடு ஆகியவற்றைக் கொண்டு பெண்களை அடிமைபடுத்தி வைத்திருப்பதை இக்கதையின் ஊடே காண இயலுகின்றது. பெண், அந்தச் சமையல் அறையின் உரிமைக்காகப் போராடுவதன் பின் இருக்கும் ஆணாதிக்க வெற்றியும் பலராலும் எடுத்துக்கூறப்பட்டது.

கதையை ஒட்டி ஒட்டிய விமர்சனமும் எழவே செய்தது. இக்கதையில் நோய்படுக்கையிலும் சமையலறை ராஜ்ஜியத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கும் ஜிஜியிடம் மருமகள் அவளுக்கான தனித்த வெளியைப் பற்றி சிந்திக்கச் சொல்லிப் பேசும் உரையாடல்களைக் குறைத்திருந்தால் கதை இன்னும் கூர்மையடைந்திருக்கும் என அரவின் தன் பார்வையை முன் வைத்தார்.

வீட்டில் சமையலறையின் அளவை ஒப்பிடும் போதும் ஒரு குடும்பத்தில் பெண்களுக்கான முக்கியத்துவம் அதே நிலையில் உள்ளதை இக்கதையின் வழி அறிய முடிந்தது. தங்கள் அதிகாரம் அந்தச் சின்ன அறையில் உள்ளது எனும் பெண்களை நம்ப வைக்கும் குடும்ப அரசியலை அம்பை தன் கதையில் சுட்டிக் காட்டுகிறார். தன் குழந்தை இறந்த பிறகும் பூரி பொரிக்கச்

சென்றதாகச் சொல்லும் ஜிஜியின் அனுபவம் பெண்களின் அவல நிலையைக் காட்டும் வகையில் அமைந்திருந்ததாக ம. நவீன் குறிப்பிட்டார்.

கறுப்புக் குதிரைச் சதுக்கம்

அம்பையின் 'கறுப்புக் குதிரைச் சதுக்கம்' என்ற கதையையொட்டி மோகனா தன்னுடைய விமர்சனத்தை எடுத்துரைத்தார். இக்கதை அறிக்கை மொழியில் அமைந்துள்ளது. ஒரு பெண்ணுக்கு இழைக்கப்படும் பாலியல் வன்மத்தை அம்பை பல கிளைக்கதைகளையும் கதாபாத்திரங்களையும் கொண்டு சித்தரித்துள்ளார்.

அம்பை இக்கதையில் ரோசா எனும் களப்போராளிக்குக் காவல்துறையால் நேர்ந்த பாலியல் வன்கொடுமையை, அவளுக்கான நீதியையும் மையமாகக் கொண்டு நகர்த்திருப்பதை உணர இயல்கிறது. இக்கதையில் ரோசாவுக்கு நேரும் பாலியல் வன்முறையைத் தங்கள் அரசியல் சித்தாந்தங்களுக்கான கருவியாகப் பயன்படுத்தும் மார்க்ஸியவாதிகளை ஆசிரியர் சாடியிருப்பார் எனக் கருத்துப் பகிரப்பட்டது.

இக்கதையின் ஒவ்வொரு காட்சியை வாசிக்கும்போதும் தனக்கு ஏற்பட்ட மன கணத்தை விவரித்தார். அதே வேளையில் தனக்கு நேர்ந்த அநீதிக்கு எதிராகப் போராட்டம் நடத்த முன்வருபவர்களிடம் இருக்கும் மறைமுக அரசியல் கனவுகளுக்கும் அரசியல் நிலைப்பாடுகளையும் உணர்ந்து இருப்பதாலே ரோசா மரத்துப் போனவளாகத் தன் துயரைச் சொல்லிக் கடக்கிறாள் என எழுத்தாளர் ஸ்ரீதர் குறிப்பிட்டார். அதே சமயத்தில் சமூகத்தில் நடக்கும் வன்முறை நிகழ்வுகளுக்குப் பெண்களே அதிகமும் பலிகடாவாக ஆக்கப்படுவதை 'ஒரு கிராமத்தில் பலவீனமானவர்கள் தாக்கப்பட்டால் முதலில் அந்த வீட்டின் பெண்கள் பகடைகாய்' என்று சொல்லி செல்கிறார்.

இக்கதை வடிவ ரீதியில் சிறுகதைக்கான தன்மை இல்லாமல் இருப்பதையும் இயல்பான மொழி நடையில் அனைவரும் வாசித்துப் புரிந்து கொள்ளும் வகையிலும் சினிமா குறியீட்டையும் இறைவன் சார்ந்த பிம்பங்களையும் உள்ளடக்கி எழுதியுள்ளார். அம்பை இரு பெண்ணுக்கான இருக்கும் அன்பைக் காட்டும் தருணத்தில் இக்கதையை உச்சமாக்கியுள்ளார். 'கறுப்புக் குதிரைச் சதுக்கம்' என்ற இக்கதையை

‘பொய்கை’ என்ற கதையுடன் தொடர்புபடுத்தலாம் என மோகனா தன் வாசிப்பை முன்வைத்தார். ‘பொய்கை’ கதையில் ஓர் ஆண் குளத்தில் நீராடிய பின் பெண்ணாக உருமாறுகிறார். அந்த இரவிலே அவருக்கு வன்புணர்ச்சி நேருகிறது. மறுநாள் தனக்கான நீதி கேட்க காவல் நிலையத்திற்குப் போகும் முன் மீண்டும் குளத்தில் நீராடி வெளியேரும் போது ஆணாக மாறுகிறார். அத்தருணத்தில் அவருக்குத் குடும்பத்தின் நினைவு தோன்றி மனைவியைக் கட்டித் தழுவும் எண்ணம் உதிக்கும் தருணத்தை மீட்டியுள்ளார் அம்பை.

காசிபாயுடன் பெண்கள் எந்த அசைவுமின்றி பாடையைத் தூக்கி ஊர்வலமாகச் செல்லும் காட்சியைக் கடத்துச் செல்ல கடினமாக இருந்ததாக ம.நவீன் குறிப்பிட்டார். அதே சமயத்தில் ரோசாவுக்கு உதவிக் கரம் நீட்ட வருபவர்களின் சுயநலம் அப்பட்டமாகத் தென்படுவதையும் அவளின் வலியை உணர்ந்தவர்களாக முன் வராததையும் உணர முடிகிறது. இக்கதையில் விளிம்பு நிலை மனிதர்களுக்காகப் போராடும் மார்க்ஸியப் பின்னணி அரசியலில் ஆர்வமுள்ளவர்களாகவே ரோசாவும் லெனினும் படைக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால், மார்க்ஸியப் போராட்ட பின்புலத்தில் மறைமுகமாகச் செயற்படும் குறிப்பிட்ட சாதியினரின் ஆதிக்கத்தையே கதையில் எழுத்தாளர் சாடுகிறார் என எழுத்தாளர் ஸ்ரீதர் குறிப்பிட்டார். கதையில் தலித் பெண்ணாகச் சித்திரிக்கப்படும் ரோசாவுக்கு நேர்ந்திருக்கும் பாலியல் வன்புணர்வை எதிர்த்துப் போராட்டம் நடத்துவதில் மார்க்ஸிய அமைப்பினரிடம் இருக்கும் அலட்சியம் என்பது அதில் செயற்படும் மறைமுக சாதி ஆதிக்கப் போக்கைக் காட்டுவதாகவே புரிந்து கொள்ள முடியுமெனத் தன் வாசிப்பை முன்வைத்தார்.

ஒரு பெண் தன் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் நுண்மையான உளப்போராட்டங்களை அவளின் உளவியலோடு ஆழமாகச் சித்தரிக்கும் படைப்புகளாகவே அம்பையின் படைப்புலகம் அமைந்திருப்பது எனக் கலந்துரையாடலின் வாயிலாக அறிந்து கொள்ள முடிந்தது.

சி. எஸ். லட்சுமி



பிறப்பு	1944 கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா
புனைபெயர்	அம்பை
தொழில்	எழுத்தாளர், ஆய்வாளர்-பெண்களின் கல்வி
மொழி	தமிழ், ஆங்கிலம், இந்தி, கன்னடம்
தேசியம்	இந்தியர்
கல்வி	முனைவர்
கல்வி நிலையம்	ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம், புது தில்லி
காலம்	1962 – தற்போது வரை
வகை	சிறுகதை, புதினம், குறுநாவல்
கருப்பொருள்	பெண்கள், பெண்ணியம்
குறிப்பிடத்தக்க படைப்புகள்	*சிறகுகள் முறியும்* *வீட்டின் மூலையில் ஒரு சமயலறை* *காட்டில் ஒரு மான்*
குறிப்பிடத்தக்க விருதுகள்	சாகித்திய அகாதமி விருது (2021)
துணைவர்	விஷ்ணு மாத்தூர்

சாகித்திய அகாதமி விருது

1960-ஆண்டிலிருந்து எழுதி வரும் அம்பையின் “சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை” என்ற சிறுகதை நூலுக்கு 2021-ஆண்டிற்கான சாகித்திய அகாதமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.2019 ஆண்டு வெளிவந்த இந்நூல் 244 பக்கங்களையும் 13 சிறுகதைகளையும் கொண்டுள்ளது.சாகித்திய அகாதமி விருதுடன் ரூபாய் 1 இலட்சம் மதிப்புள்ள காசோலை வழங்கப்பட்டது.

இலக்கிய வாழ்க்கை

அம்பை அப்பெயரைச் சூட்டிக்கொண்டதைப்பற்றி 'அமுதசுரபி' 2013 தீபாவளி மலரில் ஒரு கட்டுரையில் இவ்வாறு கூறுகிறார். "லக்ஷ்மி என்னும் புனைபெயரைச் சூட்டிக்கொள்ள விரும்பவில்லை. ஏனென்றால் வெள்ளிக்கிழமை பிறந்த எல்லா குழந்தைகளுக்கும் லக்ஷ்மி என்றுதான் பெயர் சூட்டுவார்கள். 'தேவன்' எழுதிய பார்வதியின் சங்கல்பம் என்னும் நாவலில் கணவனால் கைவிடப்பட்ட பெண்ணாகிய பார்வதி 'அம்பை' என்ற பெயரில்தான் எழுத ஆரம்பிப்பாள் என்பதாலும் மற்றும் மகாபாரத அம்பையின் ஆணுமற்ற பெண்ணுமற்ற ஆண் பெண் இரண்டுமான பால் விளக்கமற்ற தன்மையை விரும்பியதால் அப்பெயரையே தனக்குச் சூட்டிக்கொள்ள முடிவெடுத்தேன்"

அம்பையின் முதல் படைப்பு நந்திமலைச்சாரலிலே (1960) என்ற சிறுவர்களுக்கான துப்பறியும் சாகச நாவல். குழந்தைகள் பத்திரிகையான "கண்ணன்" பத்திரிகையில் வெளியானது. பிறகு ஆனந்த விகடன் பத்திரிகையில் சில சிறுகதைகளை எழுதினார். அம்பையின் இரண்டாவது நாவலான அந்திமாலை கலைமகள் நாவல் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றது. இந்தச் சிறுகதைகளும், அந்திமாலை நாவலும் அன்று ஆணுக்கு உதவியாக இருப்பவளே லட்சியப் பெண் என்ற பிம்பத்தை ஒட்டியே அமைந்திருந்தன என்று அம்பை குறிப்பிடுகிறார். அதற்குப் பிறகு 1967-ல் கணையாழி பத்திரிகையில் வெளியான சிறகுகள் முறியும் என்ற சிறுகதையே அவரது முதல் சிறுகதையாக அவரால் முன்வைக்கப்படுகிறது

அம்பையின் சிறுகதைகள் அனேகமாக பெண்களின் பார்வையிலிருந்து எழுதப்படுபவை. ஆனால் அவை பிரச்சாரக் கதைகள் அல்ல. பாரம்பரியமும், பண்பாடும் பெண்களை காலம் காலமாக எப்படி நேர்முகமாகவும் மறைமுகமாகவும் ஒடுக்கி வந்திருக்கின்றன என்பதை சுட்டிக் காட்டுகிறார். பெண்களின் வாழ்க்கையில் உள்ள சமூக ஆதிக்கம், கருத்தியல் ஆதிக்கத்தையே முதன்மை பேசுபொருளாக அம்பை கொண்டிருக்கிறார். தொடக்ககாலக் கதைகளில் மார்க்சியச் செல்வாக்கும் உண்டு. அண்மையில் துப்பறியும் கதைகளின் பாணியிலும் கதைகளை எழுதியிருக்கிறார்.

இலக்கிய இடம்

அம்பையை இந்திய இலக்கியத்தில் வங்காளப் படைப்பாளியான மகாஸ்வேதா தேவியுடன் ஒப்பிட முடியும். சமூகக்கோபமும் தனிப்பட்ட உணர்வுகளும் இணைந்து கலையாகும்போது சற்றே தூக்கலான குரல் இக்கதைகளில் உருவாகிறது "அம்பையின் சிறுகதைகளை பெண் கோபத்தின் முதல் வெளிப்பாடு என்று சொல்லலாம். வாழ்வின்மீது கவியும் துன்பங்களை தன்மீது கவியக் கூடியவையாகக் கண்டு வருத்தம் கொள்ளும் பெண்மையின் உலகம். நுட்பமும் கலை அழகும் கொண்டவர் என்றாலும் வாழ்வு பற்றிய இவரது அறிவுப்பூர்வமான புரிதல்கள் அனுபவங்களை வழிநடத்துவதில் கதைகளின் உணர்வு நிலைகள் பாதிக்கப்படுகின்றன" என்று சுந்தரராமசாமி குறிப்பிடுகிறார்.

வெகுஜனப் பெண்களுள் ஒருவராக இந்தச் சமூக அமைப்பை அணுகுவது, இவற்றிலிருந்து விடுபட்டவராக இந்தப் பிரச்சினைகளுக்குள் குறுக்கீடுசெய்வது என அம்பையின் மொத்தச் சிறுகதைகளையும் இருவிதமாகப் பிரித்துப் பார்க்கலாம். இந்த இரு தன்மைகளும் அவர் கதைகளுக்குள் இருக்கின்றன என்று விமர்சகர் மண்குதிரை குறிப்பிடுகிறார்



வீட்டின் மூலையில் ஒரு சமையலறை, அம்மா ஒரு கொலை செய்தாள், கறுப்பு குதிரை சதுக்கம், ஆகிய சிறுகதைகளை தமிழின் சிறந்த சிறுகதைகள்

பட்டியலில் விமர்சகர் ஜெயமோகன் சேர்க்கிறார். விமர்சகர் எஸ். ராமகிருஷ்ணன் அம்மா ஒரு கொலை செய்தாள், காட்டில் ஒரு மான் ஆகிய சிறுகதைகளை தமிழின் 100 சிறந்த சிறுகதைகள் பட்டியலில் சேர்க்கிறார்.

பெண்கல்வி, பெண் விடுதலைக்கான குரல்கள் தமிழில் நவீன இலக்கியம் தோன்றிய காலம் முதலே இருந்து வருகின்றன. வை.மு.கோதைநாயகி அம்மாள் முதல் தொடர்ச்சியாக பெண் எழுத்தாளர்கள் எழுதி வருகிறார்கள். அவர்களில் ஆர்.சூடாமணி முக்கியமானவர். அம்பை, ஆர்.சூடாமணியை வாழ்க்கை குறித்தும் இலக்கியம் குறித்தும் திறந்த மனதுடன் உரையாடும் நல்ல தோழியாக கருதுபவர். (மனதுக்கினியவள், அம்பை)[6]. ஆனால் பெண்ணியக் கொள்கைகள் பற்றிய புரிதலுடன், உலகளாவிய வரலாற்று அணுகுமுறையுடன் பெண்விடுதலை பற்றி தமிழில் பேசியவர் அம்பை. களச்செயல்பாட்டளராகவும், பெண்விடுதலைக்காகப் பணியாற்றியவர். அவருடைய படைப்புகளில் பெண்மைய நோக்கு ஒரு முன்சட்டகமாக அமைந்து கலைக்குறைபாட்டை உருவாக்குகிறது என்னும் விமர்சனம் விமர்சகர்களிடம் இருந்தாலும் அவருடைய படைப்புகள் ஆழமான உரையாடலை உருவாக்குபவை, அறிவார்ந்த நெருக்கடிகளை அளிப்பவை என்பதனால் அம்பை தமிழின் முக்கியமான முன்னோடி இலக்கியவாதியாகக் கருதப்படுகிறார்.

அம்பை தன் பார்வையை இவ்வாறாக முன்வைக்கிறார் "என்னைப் பொறுத்தவரை வாழ்க்கையில் உள்ள 'உண்மைகளை' பற்றியது அல்ல இலக்கியம். உண்மை என்று நாம் உணர்வதற்கும் நமக்கும் இடையே உள்ள உறவு பற்றியது இலக்கியம். இந்த 'உண்மை'யின் தன்மை மாறியபடி இருக்கிறது நம் வாழ்வில் என்பதுதான் உண்மை. வாழ்க்கையின் போக்குக்கு ஏற்ப இதை நாம் பல்வேறு கட்டங்களில் பல வகைகளில் உணருகிறோம். அதை நாம் எப்படி மொழியாக்குகிறோம் என்பதுதான் இலக்கியம்." (இயல்விருது ஏற்புவிழா)

சொல்வனம்

https://solvanam.com/2019/04/26/%e0%ae%b5%e0%ae%bf%e0%ae%b0%e0%af%81%e0%ae%a4%e0%af%87%e0%ae%b1%e0%af%8d%e0%ae%aa%e0%af%81-%e0%ae%89%e0%ae%b0%e0%af%88/

விருதேற்பு உரை

அம்பை

ஏப்ரல் 26, 2019



தமிழ் இலக்கியத் தோட்டத்தின் விருது பெறும் இந்தத் தருணம் என்னைப் பொறுத்தவரை ஓர் அபூர்வமான தருணம். காரணம் இதுவரை தமிழ் இலக்கியத்துக்காக இந்தியாவில் நிறுவப்பட்ட விருதுகள் எதுவும் நான் வாங்கியதில்லை. சமீபத்தில் வெளியிடப்பட்ட என் கதைத் தொகுப்பின் முன்னுரையில் கூட நான் எழுதியிருந்தேன்: எங்கள் குடியிருப்பில் உள்ள ஆல மரத்தில் வந்தமரும் நீள்வால் கிளிகள் என் கதைகளைக் கேட்டால் கூடப் போதும்; கதை சொல்ல நான் தயார் ஏனென்றால் கதைசொல்லிகள் வெட்கங்கெட்டவர்கள் என்று. இப்படிப்பட்ட எனக்கு வாழ்நாள் இலக்கிய விருது என்றால் வாழ்க்கை பற்றியும் இலக்கியம் பற்றியும் சற்று யோசிக்க வேண்டியிருக்கிறது. அதுவும் நடமாடிக்கொண்டு, விரைந்து இயங்கிக் கொண்டிருக்கும்போதே கிடைக்கும் விருது என்பதால் அதிகமாகவே சிந்திக்க வேண்டியிருக்கிறது என்னைப் பற்றியும் இலக்கியம் பற்றியும்.

சமீபத்தில் வெளிநாடு சென்றிருந்தபோது ஓர் இந்திய எழுத்தாளர்—ஆண் எழுத்தாளர்—அங்கு வந்திருந்ததாகவும் அவர் கதைகள் உருவாவது பற்றி மிகவும் கவித்துவமாகப் பேசினார் என்றும் கூறினார்கள். காலையில் எழுந்து சன்னலைத் திறந்ததும், காலைப் பறவைகளாய் கதைகள் அவரிடம் வருகின்றன என்று அவர் கூறியிருந்தார். இது பற்றி என் கருத்தைக்

கேட்டார்கள். காலைப் பறவைகளாய் கதைகள் அவரிடம் வருவது பற்றி எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. நல்ல உருவகபூர்வமான விளக்கம்தான். ஆனால் திறக்க ஒரு சன்னல் வேண்டும்; காலையில் அதைத் திறக்க நேரம் கிடைக்க வேண்டும்; சன்னல் பக்கம் நின்றுகொண்டு கதைப் பறவைகளை எதிர்பார்த்து நேரம் போக்குவதை வீடு ஒப்புக்கொள்ள வேண்டும். மேலும் சன்னல் தோட்டத்தைப் பார்த்தபடி இருக்க வேண்டும். சன்னலைத் திறந்தவுடன் குப்பையும் கூளமும், சாக்கடை மணமும் கமழும் நகர்ச்சூழலில் வாழ்பவர்களைக் கதைகள் எப்படி வந்து அடையும் போன்ற கேள்விகள் எழுகின்றன. இன்னொரு எழுத்தாளர் வானில் மேகங்கள் திரண்டெழுந்து “எழுது, எழுது” என்று அவரிடம் கூறியதாகச் சொல்லியிருக்கிறார். இப்படிப்பட்ட அற்புதங்கள் ஏதும் நிகழாத வாழ்க்கையில் கற்றுக்குட்டி வித்தை காட்ட வருவதுபோல்தான் நான் எழுத வந்தேன் என்று நினைக்கிறேன்.



பதினாறு வயதில் முதல் நாவலை எழுதியபோது அது சாகசங்கள் நிறைந்த, சிறுமிகள் மற்றும் சிறுவர்களுக்கான ஒரு தொடராகத்தான் இருந்தது. இரண்டொரு ஆண்டுகளுக்குப் பின் எழுதி கலைமகள் பத்திரிகையின் பரிசு பெற்ற நாவலில் பெரியவர்களுக்கான உலகில் தாவும் வித்தை இருந்தது. ஆனால் எழுதிய நபரின் வாழ்க்கையில் பெரியதாக எதுவும் நடக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது கதையில். ஏனென்றால் கதை உடல் சம்பந்தப்படாத ஆத்மாவின் காதல் பற்றியது. ஆத்மா பற்றி எழுத ஒன்று உடலைத் தாண்டி வந்திருக்க வேண்டும் அல்லது உடல் பற்றிய அறிவு ஞானம் இல்லாமல் இருக்க வேண்டும். இரண்டாவது நிலைதான் என்னுடையது. ஐம்பதுகளில் வளர்ந்த என்னைப் போன்றவர்கள் மனத்தில் சமூகசேவை என்ற சொல் மிகவும் புனிதமாகப் படிந்திருந்தது. தியாகம் என்ற சொல் எங்களை வெகுவாக ஈர்த்தது. சுதந்திரம் கிடைத்த பின்

வந்த தசாப்தத்தில் நாங்கள் வளர்ந்தோம் என்பதை மறக்கக் கூடாது. தொண்டு, சேவை, தியாகம், நாடு போன்ற சொற்கள் எங்கள் வாழ்க்கையுடன் பின்னிப் பிணந்திருந்தன. வாழ்க்கை பற்றிய எண்ணங்கள், கற்பனைகள் இதை ஒட்டியதாகவே இருந்தன. எங்கள் கனவுநாயகன் அப்போது தாகூர், ராமகிருஷ்ணர், விவேகானந்தர் இவர்களின் கலவை. நியாயமான கோபம், கனிவு, மென்மை, கலை இவற்றின் மொத்த உரு. அவன் பெங்காலி. கலைஞன். கவிஞன். நாட்டுக்காக உழைப்பவன். இந்தக் கற்பனைகளில் உடல் இருக்கவில்லை. உடலே இல்லாத ஒரு வெளியில் மிதந்து கொண்டிருந்தோம். கலைமகளில் வெளி வந்த நாவலும் அப்படி உடலே இல்லாத நாவல்தான். மேலும், உடல் மனம் என்றெல்லாம் தனித்தனியாகப் பிரித்து செய்த விளயாட்டுக்கள் அதில் இருந்தன. பல ஆண்டுகளுக்குப் பின் என்னை வந்து சந்தித்த ஓர் ஆண் எழுத்தாளர் இந்த நாவலை எழுதிய அம்பைதான் நிஜமான அம்பை என்றும் இப்போது எழுதும் அம்பை ஒரு போலி என்றும் என்னிடம் கூறினார். அவர் வெளியிடும் ஓர் பத்திரிகையில் என்னை எழுதுமாறு கூற அவர் வந்திருந்தார். தஸ்தாயெவ்ஸ்கி பற்றிய விசேஷ இதழுக்கு எழுதுமாறு கூறினார். எனக்குக் குழப்பமாக இருந்தது. தஸ்தாயெவ்ஸ்கி பற்றி அவர் கூறும் “நிஜ” அம்பைக்குத் தெரியாது. “போலி” அம்பைக்குத் தெரியும். எந்த அம்பை எழுத வேண்டும் என்று சொன்னால் உதவியாக இருக்கும் என்று கூறினேன். அவருக்கும் குழப்பமாகப் போயிற்று போலும். அவர் பதில் போடவில்லை.

எழுத்தில் எது உண்மை எது போலி என்று பாகுபடுத்துவது எளிதான காரியம் இல்லை. மேலும், உண்மை என்றால் என்ன என்ற கேள்வி எழுகிறது. எதற்கு உண்மையாக இருப்பது எழுத்து? எண்ணங்களுக்கா, வாழ்க்கைக்கா, சுற்றியுள்ள யதார்த்தத்துக்கா, எதற்கு? எழுத்து என்பது இதற்கு எல்லாம் உண்மையாக இருப்பதுதானா? என்னைப் பொறுத்தவரை வாழ்க்கையில் உள்ள ”உண்மைகளை”ப் பற்றியது அல்ல இலக்கியம். உண்மை என்று நாம் உணர்வதற்கும் நமக்கும் இடையே உள்ள உறவு பற்றியது இலக்கியம். இந்த “உண்மை”யின் தன்மை மாறியபடி இருக்கிறது நம் வாழ்வில் என்பதுதான் உண்மை. வாழ்க்கையின் போக்குக்கு ஏற்ப இதை நாம் பல்வேறு கட்டங்களில் பல வகைகளில் உணருகிறோம். அதை நாம் எப்படி மொழியாக்குகிறோம் என்பதுதான் இலக்கியம். நம் உணர்வுகளின் வெளிப்படை சில சமயங்களிலும், அவற்றின் மறைப்பு சில சமயங்களிலும்,

உணர்வுகளை இலக்கியமாக்குகிறது. இந்த வெளிப்படை-மறைப்பு இவற்றின் கண்ணாமூச்சிதான் இலக்கியம்.



தான் நினைப்பதை, உணர்வதை அப்படியே வெளிப்பாடாக்கலாம். ஆக்கியிருக்கிறார்கள் சிலர். அதைப் படிக்க முடியவில்லையே! அனுபவத்துக்கும் வெளிப்பாடுக்கும் இடையே, அனுபவத்திலிருந்து பிறந்த, அதன் பொழிவாக, ஆனால் முற்றிலும் வேறு தோற்றத்தில் மாறும் ஓர் உரு மாற்றம் நேர்கிறது—நவீன ஓவியம் மூலத்தைச் சுட்டிக்காட்டி ஆனால் மூலத்தினின்றும் முற்றிலும் மாறுபட்டு இருப்பதைப் போல. அதை அவரவர் புரிதலுக்கு ஏற்ப அர்த்தப்படுத்திக் கொள்கிறோம். அத்தகைய அனுபவத்தை 'உண்மையான" இலக்கியம் என்று நாம் அடையாளம் காட்டும் இலக்கியம் செய்யும். நவீன ஓவியத்தில் நுழையப் பல கதவுகள் இருப்பது போல இதற்கும் உண்டு. வண்ணம், கீற்று, கோடு எதையாவது ஒன்றைப் பற்றிக்கொண்டு ஓவியத்தினுள் நுழைந்துவிடலாம். இசையிலும் அப்படித்தான். ஆதார ராகம் பற்றி எதுவும் தெரியாமலே கூட அதனுள் முங்கலாம். சுருதியின் சுத்தம், ஸ்வரங்களின் விஸ்தரிப்பு என்று பல உண்மைகளை அது உருவாக்கிக் கொண்டே போகிறது. இலக்கியமும் அதைச் செய்கிறது. இபடித்தான் நான் அதைப் புரிந்துகொள்கிறேன்.

இதனால்தான் இலக்கியத்தில் பெண் எழுத்து ஆண் எழுத்து என்று சிலர் குறிப்பிடும்போது அவர்கள் மனத்தில் இருப்பது பால் நிலை பற்றிய விளக்கம் இல்லை என்பது புரிந்துவிடுகிறது. அவர்கள் பெண் என்று கூறும்போது அது இலக்கியத்தரம் பற்றியது. அது ஓர் அளவுகோல். பெண் என்ற அடிப்படை ஒன்றை உருவாக்கி அதில் ஏற்றப்பட்ட தர அளவுகோல். அடிப்படை என்பது நேராக உடலைப் போய் முட்டும் ஒன்று. ஒரு வகை உடல் இருப்பதால் ஒரு வகை மொழி பிறக்கிறது என்று வலியுறுத்துவது.

இவைதான் வித்தியாசங்கள் என்று நாம் பட்டியலிட்டால் அந்தச் செயல் இரு வகை வெளிப்பாட்டை மட்டுமல்ல, இரு வகை உடல்களையும் குறுக்குகிறது என்றே நினைக்கிறேன். ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தில், ஒவ்வொரு காலத்தில் வேறுவேறு வகையில் உணரும் உடல் என்ற ஒன்றை, ஓர் இலக்கணத்திற்கு, ஒரு விளக்கத்திற்கு உட்படுத்துவது எனக்கு உடன்பாடில்லை. ஆனால் பெண்ணாக வாழ்வதால், பெண் என்ற நிலையிலிருந்து உலகை எதிர்கொள்ள நேர்வதால் ஒரு வித மொழி, ஒரு வித வெளிப்பாடு உருவாகலாம். அது உடல் சார்ந்த்து அல்ல. உடல் பற்றிய பட்டுணர்வைச் சார்ந்தது. உடல் சமுதாயத்தில் ஆக்கிரமிக்கும் இடத்தைச் சார்ந்தது. காலம், சரித்திரம் இவற்றால் தொடப்படாத உடல் இல்லை. ஒற்றை விளக்கம் உள்ள உடல் இல்லை பெண் உடல். பெண் உடலை மறுவாசிப்பு செய்வதும் அவரவர் பட்டுணர்வை ஒட்டியே இருக்கும். பல்லாயிர யோனிகளிலிருந்து வந்தவள் நான் என்று அக்கமகாதேவி கூறும் போது, பல்லாயிரப் பிறவிகளை மட்டுமல்ல பல்லாயிர உடல்களுக்கு அவர் அர்த்தமூட்டுகிறார். யோனி என்பது ஒரு ஜனனத் துளை மட்டுமல்ல பல்வேறு சரித்திர கால கட்டங்களில் பல அர்த்தங்களைப் பெறும் ஓர் அங்கம். உடலை அதன் விளக்கங்கள், குறுகல்கள், இலக்கணங்கள் இவற்றிலிருந்து வெளியே எடுத்து ஒரு வெளியாக்கி, அதன் மேல் நின்று எழுதும்போது வரும் இலக்கியம் எல்லாவித அடிப்படையையும் மீறியதாக இருக்கும். உடலை ஓர் இயற்கைக் காட்சியாகத் தீட்டி அதை விஸ்தரிப்பதுதான் அதன் லட்சக்கணக்கான அர்த்தங்களையும் அழகுகளையும் மட்டுமல்ல அவலங்களையும் வெளிக் கொண்டுவரும்.

கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுக்காலம் எழுதியிருக்கும் போது எழுத்து பல வெளிகளைக் கடக்கிறது. பல மலைகளைத் தாண்டி, பல கடல்களில் முங்கி, பல அரக்கர்களைக் கடந்து, பல போர்க்களங்களில் வென்றும் தோற்றும் அது உருப்பெறுகிறது. ஒரு ஜென் முனிவர் பல ஆண்டுகள் குகை ஒன்றில் இருந்துவிட்டு வந்தார். அந்த ஊர் அரசன் அவர் பெற்ற ஞானம் பற்றி அறிய விரும்பினான். அவரை சபைக்கு அழைத்து அவர் உணர்ந்த உண்மை பற்றிக் கூறுமாறு வேண்டினான். அதற்கு அவர் தன் இடுப்பில் இருந்த புல்லாங்குழலை எடுத்து ஒரு சின்னஞ்சிறு ஸ்வரக்கோர்வையை வாசித்துவிட்டுப் போனார். இலக்கிய வாழ்க்கை பற்றிய உண்மையும் அவ்வளவு எளிதானது; அவ்வளவு சிக்கலானது. என்னிடம் ஒரு புல்லாங்குழல் இருந்து, வாசிக்கவும் தெரிந்திருந்தால் நானும் ஒரு சில ஒலிகளை எழுப்பி விட்டுப் போயிருப்பேன். ஆனால்

அப்படிச் செய்பவர்களுக்கு விருதுகள் கிட்டுமா என்று தெரியவில்லை. எல்லாவற்றையும் சொற்களில் கட்ட வேண்டியிருக்கிறது. காலத்தால் அழிக்க முடியாத இலக்கிய உண்மைகள் இருக்கலாம். அது பற்றி எனக்குத் தெரியாது. அது எனக்குப் பரிச்சயம் இல்லாத பிரதேசம். அதற்கான கடவுச் சீட்டும் என்னிடம் இல்லை. இந்தக் காலகட்டத்தில் கட்டப்பட்டச் சொற்கள் இவை. இன்றைக்கு, இப்போதைக்கு, இவைதான் நான் உணர்ந்த உண்மை.

[காலம்: மே, 2009 இதழில் பிரசுரமானது.]



PERUMAL MURUGAN

https://perumalmurugan.in/ambai80-2/

அம்பை 80 :

2 'கொஞ்சம் இடம் போதும்'



எண்பது வயதில் அடி எடுத்து வைத்திருக்கும் அம்பை அம்மாவுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள். என் அம்மாவின் இறப்புக்குப் பிறகு 'இனிமேல் நான்தான் உனக்கு அம்மா' என்று சொல்லி என்னை மகனாக அம்பை ஏற்றுக்கொண்டார். அதனால் உரிமையோடு 'அம்மா' என்றழைத்து வாழ்த்துச் சொல்கிறேன்.

அம்பை எழுதிய கதைகள் குறித்து நாள் முழுக்கப் பலர் பேசியுள்ளனர். அவற்றை எல்லாம் கடந்து புதிதாக என்ன பேசுவது என்று தெரியவில்லை. அம்பையின் கதைகள் எதையும் வெளிப்படப் பேசுபவை. தோண்டித் துருவி நுட்பங்களை எல்லாம் கண்டெடுத்துக் கதைப் புதிர்களை விடுவிக்கும் கருவிகள் வேண்டியதில்லை. உருவகம், குறியீடு முதலிய உத்திகளை எல்லாம் நாமாக வலிந்து தேடியெடுத்தால் தான் உண்டு. விடுகதை வேறு; சிறுகதை வேறுதானே? கதையை வாசித்த பின் அதைப் பற்றிப் பேசுவதற்கு நிறைய விஷயங்கள் இருக்கும். இத்தனை வெளிப்படையாகக் கதை பேசிய பிறகும் அதைப் பற்றி உரையாடும் சாத்தியத்தை எப்படிச் சாதிக்கிறார் அம்பை? அதுதான் எனக்கு விடை தெரியாத கேள்வி.

அவர் கதைகளைப் போலவே அம்பையும் வெளிப்படையானவர். அல்லது அம்பையைப் போலவே அவர் கதைகளும் வெளிப்படையானவை என்று சொல்வது இன்னும் பொருத்தமாக இருக்கும். ஒவ்வொரு சந்திப்பிலும் அவர் வருகையை நினைவு கொள்வதற்கு ஏதாவது சம்பவமோ அவர் சொற்களோ எஞ்சி நிற்கும். அவருக்குச் சாகித்திய அகாதமி விருது கிடைத்தபோது கூடு அமைப்பு சார்பாக நாமக்கல்லில் பாராட்டுக் கூட்டம் நடத்தினோம். அதில் பேசிய நண்பர் ஒருவர் 'அம்மா ஒருகொலை செய்தாள்' என்று சொல்வதற்குப் பதிலாக 'அம்பை ஒருகொலை செய்தாள்' என்று வாய் தவறிச் சொல்லிவிட்டார். உடனே 'இன்னும் கொல ஒன்னுதான் செய்யல. அதயும் செஞ்சிருவன் பாத்துக்க' என்று அம்பை சொன்னார். இன்றைக்கு வரைக்கும் அந்த நண்பர் அம்பையைப் பார்ப்பதற்கு அஞ்சிக் கொண்டுதான் இருக்கிறார்.

இன்னொரு முறை நாமக்கல் கோயில்களுக்குச் சென்றுவிட்டு அப்படியே வீதிகளில் நடந்து வந்தோம். அம்பையோடு இப்படி வெளியே போய்ச் சுற்றுவது என் மனைவிக்கு ரொம்பவும் பிடிக்கும். நகரத்தின் நடுவில் ஒரு மாரியம்மன் கோயில் இருக்கிறது. அதற்குப் பெயர் 'பலபட்டரை

மாரியம்மன்.’ பலபட்டரைக்கு அர்த்தம் என்ன என்று அம்பை கேட்டார். இது மாதிரியான சந்தர்ப்பங்களில் எனக்கு உற்சாகம் வந்து விரிவுரையாற்றத் தொடங்கிவிடுவேன். பலபட்டரை என்னும் சொல் எந்த அகராதியிலும் இல்லை. அது வட்டார வழக்குச் சொல்லா பொதுச்சொல்லா என்பதில் ஐயம் இருந்ததால் கொங்கு வட்டாரச் சொல்லகராதியில் அதைச் சேர்க்கவில்லை. ஆனால் கொங்கு வட்டாரச் சொல் போலத்தான் தெரிகிறது. அடுத்த பதிப்பில் இந்தச் சொல்லையும் சேர்க்க வேண்டும்.

கிராமத்தில் ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு மாரியம்மன் கோயில் இருக்கும். ஒருசாதிக்கு உரிய கோயிலுக்கு இன்னொரு சாதியினர் போக முடியாது. ஒவ்வொரு கோயிலுக்கும் தனித்தனித் திருவிழா; கொண்டாட்டம். நாமக்கல் கடந்த ஐம்பது அறுபது ஆண்டுகளில்தான் நகரமாக உருமாறிற்று. அதற்கு முன் கொஞ்சம் பெரிய கிராமம், அவ்வளவுதான். நகரமாக உருவான போது வெவ்வேறு சாதியினர் வந்து குடியேறினர். எல்லாச் சாதியினருக்கும் பொதுவான மாரியம்மன் கோயில் ஒன்று கட்டினர். அதை அடையாளப்படுத்த மக்கள் வழக்கில் ‘பலபட்டரை மாரியம்மன்’ என்று பெயராயிற்று. பெருந்தேவியின் ஆய்வுக் களங்களில் இக்கோயில் முக்கியமானது. இதை ஆய்வு செய்து ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்.

பலபட்டரை என்றால் ‘பலசாதி’ என்று பொருள். தம் சாதியல்லாத பிற சாதிகள் என்பதைக் குறிக்கும். அதை வசைச்சொல்லாகவும் பயன்படுத்துவது உண்டு. குழந்தைகளைத் திட்டும்போது ‘பலபட்டரைக்குப் பொறந்தது’ என்பார்கள். கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களை ‘அது ஒரு பலபட்டர’ என்று கீழ்மைப்படுத்திப் பேசுவார்கள். எங்கள் ஊரில் அரசு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு வந்தபோது ‘அதெல்லாம் பலபட்டரைங்க குடியிருக்கற எடம்’ என்று சொல்லி வீடு வாங்க மறுத்தவர்கள் உண்டு. அக்குடியிருப்பு வீடுகளின் மதிப்பு பல மடங்கு உயர்ந்து ‘வாங்காமல் விட்டுவிட்டோமே’ என்று பிற்காலத்தில் புலம்பியோர் பலர். பலபட்டரை என்பதைப் பற்றி இதையெல்லாம் நானும் என் மனைவியும் (அவரும் ஆசிரியர் ஆயிற்றே) சொல்லிக் கொண்டு வந்தோம்.

வழியில் ஐஸ்கிரீம் கடை ஒன்றைப் பார்த்தோம். ‘ஐஸ்கிரீம் சாப்பிடலாம்’ என்றார் அம்பை. எதையும் குறைவாகவும் அளவாகவும் சாப்பிடுபவர்

அவர். விருந்தோம்பல் செய்கிறோம் என்னும் பெயரில் அவரை வற்புறுத்த முடியாது. 'போதும்' என்றால் போதும்தான். அவரே ஐஸ்கிரீம் சாப்பிட ஆசைப்படுகிறார் என்றால் எங்களுக்கு என்ன? ஐஸ்கிரீம் வாங்கிக்கொண்டு அம்பையும் நானும் வாசலில் நின்று பேசிக் கொண்டிருந்தோம். என் மனைவி பணம் கொடுத்துவிட்டு வந்தார்.

அப்போது கடைக்காரர் ஏதோ கேட்க என் மனைவி பதில் சொல்வது தெரிந்தது. வந்ததும் 'என்ன?' என்று அம்பை கேட்டார். 'கடக்காரரு உங்களக் காட்டி அவுங்க பிராமினான்னு கேக்கறாரு. எப்பிடிக் கண்டுபிடிச்சாருன்னே தெரியல' என்றார் என் மனைவி. 'ஆமா. பெருசாக் கண்டுபிடிச்சிட்டாரு. அவுங்க ஒரு பலபட்டர பிராமின்னு சொல்லிட்டு வந்திருக்கலாமுல்ல' என்றார் அம்பை. எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தோம். அம்பை சொன்னதற்குள் நகைச்சுவையைக் கடந்து பேச நிறைய இருக்கின்றன.



சென்னைக்கு இடமாறுதலில் சென்று கிட்டத்தட்ட ஓராண்டு காலம் திருவல்லிக்கேணியில் வசித்தோம். அது பொந்துகளைக் கொண்ட சிறுவீடு. பெருங்குடியில் பெரிய அடுக்குமாடி வீடு ஒன்றில் குடியிருந்துவிட்டுப் பயணம் செய்வதில் உள்ள சிரமத்தால் அப்போதுதான் திருவல்லிக்கேணிக்கு மாறினோம். பொருள்கள் எல்லாம் பரவிக் கிடந்தன. சென்னைக்கு வந்திருந்த அம்பை எங்களைப் பார்க்க வீட்டுக்கு வருகிறேன் என்றார். எங்களுக்குத் தயக்கமாக இருந்தது. வீட்டுக்கு வேண்டாம், கடற்கரையில் சந்திப்போம் என்றேன். அதெல்லாம் முடியாது, நான் வீட்டுக்குத் தான் வருவேன் என்றார். நிலைமையை எடுத்துச் சொன்னேன். உடனே 'உங்களத் தவிர ஒராளு உக்கார எடம் இருக்குமில்ல? எனக்குக் கொஞ்சம் இடம் போதும் நான் வந்து பாத்துட்டு ஒரு டீ சாப்புட்டுட்டு அப்படியே கடற்கரைக்குப் போயிரலாம்' என்றார். அவர் சொன்னது

எங்களை நெகிழ்த்தியது. அப்படி உரிமை பாராட்டுவதுதான் அம்பையின் இயல்பு.

அதே போல வந்தார். வீட்டில் சற்று நேரம் இருந்துவிட்டு மூவரும் நடந்து கடற்கரைக்குச் சென்றோம். கண்ணகி சிலைக்கு அருகில் இருக்கும் சுரங்கப்பாதையைக் கடந்து கடற்கரைக்கு இறங்கும்போது காரை போட்ட சரிவான பகுதி ஒன்று இருந்தது. பொதுமக்கள் பலர் கடக்கும் அவ்விடத்தில் அப்படி ஒரு சறுக்கல். பளபளவென்ற கற்கள் பதித்திருந்தனர். அம்பைக்கு அதெல்லாம் ஒன்றும் பிரச்சினையில்லை. கடந்து சென்றுவிட்டார். என் மனைவிக்கு இத்தகைய இடங்களைப் பார்த்தால் கொஞ்சம் பயம். ஏற்கனவே அடிபட்ட கால் வேறு. பயந்த மாதிரியே லேசாக வழுக்கிக் கீழே விழுந்துவிட்டார். நான் கை கொடுத்துத் தூக்கினேன்.

அப்போது எதிரில் இருந்த திட்டு மேல் உட்கார்ந்திருந்த இருவர் இதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். 'கெழவி பாரு என்ன வேகமாப் போவுது. இந்தம்மா இப்படிச் சறுக்கி உழுவுதே' என்றனர். அம்பைக்குக் கோபம். 'கெழவியாம் கெழவி. கெழவி வேகமாப் போகக் கூடாதா?' என்று சொன்னார். நல்லவேளை அவர்களிடம் சண்டைக்குப் போகவில்லை. ஆனால் கடற்கரை விஜயம் முழுவதுமே இந்தக் கிழவிப் பிரச்சினைதான் அம்பையின் பேசுபொருளாக இருந்தது. அறுபது வயது ஆகிவிட்டாலே நாம் முதுமை என்று உணர்கிறோம். அதன் பிறகு செய்வதற்கு ஏதுமில்லை என்கிற மனநிலைக்கு வந்துவிடுகிறோம். அம்பையை நானறிந்த வரையில் அந்த மனநிலை அறவே இல்லை. உடலைப் பேணுவதிலும் உற்சாகமாகச் செயலாற்றுவதிலும் அவருக்கு நிகர் அவரேதான்.

நாகர்கோவிலில் இருந்து நாமக்கல்லுக்கு ஒருமுறை ரயிலில் வந்தார். அந்த ரயில் விடிகாலை இரண்டரை மணிக்கு நாமக்கல் வந்து சேரும். இப்போது இரவுப் பயணத்தைப் பெரும்பாலும் தவிர்த்துவிடுகிறார். அவர் வந்தது 2018ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். 'அந்நேரத்திற்கு விழித்து விடுவீர்களா? தவறாமல் வந்து கூட்டிப் போய்விடுவீர்களா?' என்று கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டுதான் வந்தார். நாமக்கல் வர அந்த ரயில் மட்டும்தான் இருந்தது. ரயிலில் இருந்து இறங்கினார். என் இடுப்புக்கு மேல் உயரமாக இருந்த பெரிய பெட்டி ஒன்று. கைப்பை ஒன்று.

‘என்னங்க அம்பை, இவ்வளவு பெரிய பெட்டி?’ என்று உடனே கேட்டுவிட்டேன். அம்பை தமிழ்நாட்டுக்கு வரும்போது யாரையெல்லாம் சந்திக்கத் திட்டமிட்டிருக்கிறாரோ அவர்களுக்கு எல்லாம் ஏதேனும் பரிசுப்பொருள் கொண்டு வருவது வழக்கம். எனக்கு ஆச்சரியமாக இருக்கும். தம் பயணத்தை எப்படி இவ்வாறெல்லாம் திட்டமிட முடிகிறது? நடைமேடையில் அந்தப் பெட்டியை இழுத்து வருவதே பெரும்பாடாக இருந்தது. சுரங்கப் பாதையில் இறங்கும்போது தூக்கிக்கொள்ள வேண்டும். மீண்டும் ஏறி வெளியே வரவும் தூக்கிக் கொள்ள வேண்டும். என் இருசக்கர வாகனத்தில் அதை எப்படி வைத்துக்கொள்வது? இவற்றை எல்லாம் யோசித்துக் கொண்டிருந்தேன்.

என்னை அறியாமலே மேலும் இரண்டு மூன்று முறை ‘இவ்ளோ பெரிய பெட்டி’ என்று குறிப்பிட்டுப் பேசிவிட்டேன் போல. சுரங்கப் பாதைக்குள் இறங்கியதும் ஒருமுறை சொல்லியிருக்கிறேன். உடனே கோபமாக ‘நீ எங்கிட்டக் குடு. நானே கொண்டு வந்திருவேன்’ என்று பிடுங்கினார். பிறகுதான் உணர்வு வந்து ‘நானே கொண்டு வர்றன்’ என்று சொன்னேன். வண்டியில் எப்படியோ வைத்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தேன். பயணத்தின் போது மிகக் குறைவான பொருள்களையே எடுத்துச் செல்லும் வழக்கம் உடையவன் நான். பொதிகள் இருந்தால் பயணம் எளிதாக இருக்காது என்பது என் எண்ணம். சில சமயம் அவசியமான பொருள்களைக்கூட எடுக்க மறந்துவிடுவேன். அம்பை ஒருபயணத்திற்குத் தயாராவதை உடனிருந்து பார்க்க வேண்டும் என்னும் ஆவல் எனக்குண்டு.

எவ்விடத்திலும் எளிதாகத் தம்மைப் பொருத்திக் கொள்ளும் இயல்பும் அம்பைக்கு உண்டு. பயண அலுப்புக்கூட இல்லாமல் தம் வேலைகளைச் செய்யத் தொடங்கிவிடுவார். சரோஜா ராமமூர்த்தி சிறுகதைத் தொகுப்புக்கான முன்னுரையை எங்கள் வீட்டுக் கணினியில் தான் எழுதி முடித்துக் காலச்சுவடுக்கு அனுப்பினார். அந்த வேலை செய்துகொண்டிருக்கும் போது உணவுக்காகவோ வேறு எதற்காகவோ அழைத்தால் ‘அரைமணி நேரம் கழித்து வருகிறேன்’ என்பது போல நேரம் சொல்லிவிடுவார். எல்லா வேலைகளையும் இப்படி முறை வைத்துச் செய்யும் இயல்பு அவருக்குண்டு.

‘சாதியும் நானும்’ நூலை அவர்தான் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். நூலை வாசித்துவிட்டுத் தாமே மொழிபெயர்ப்பதாகச் சொல்லி விரும்பிச் செய்தார். ‘தமிழ்நாட்டில் இவ்வளவு சாதிகள் இருப்பது எனக்குத்

தெரியாது. ஒவ்வொன்றுக்குள்ளும் எத்தனை எத்தனை பிரிவுகள்' என்று ஆச்சரியப்பட்டார். தமிழ்நாட்டுச் சாதியமைப்பு பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம்கூட அவரை இப்பணியில் ஈடுபடத் தூண்டியிருக்கலாம். அந்நூலை மொழிபெயர்த்துக் கொண்டிருக்கும்போது ஒருமுறை நாமக்கல்லுக்கு வந்து ஒருவாரம் தங்கினார். கட்டுரைகளில் தமக்கு இருந்த சந்தேகங்களைக் குறித்து வைத்துக்கொண்டு கட்டுரையாளர் ஒவ்வொருவரையும் நேரில் சந்தித்து விளக்கம் கேட்க வேண்டும் என்பது அவர் நோக்கம்.

பெரும்பாலான பேர் வந்து சந்தித்தனர். அம்பையைச் சந்தித்ததும் பேசியதும் எல்லோருக்கும் மகிழ்ச்சி. ஆனந்தன் என்னும் மாணவர் எழுதிய கட்டுரையில் தம் கிராமத்தில் உள்ள சலூனுக்குச் சென்று சக்கர நாற்காலியில் உட்கார்ந்து முடிவெட்டிக் கொள்ள இயலாத சாதிக் கட்டுப்பாட்டு நிலை குறித்து எழுதியிருந்தார். அவருக்கு 'நான் ஒரு சக்கர நாற்காலி வாங்கித் தருகிறேன்' என்று அம்பை சொன்னார். அம்மாணவருக்கு அது பெரிய மகிழ்ச்சி. 'இப்போது என் நிலை கொஞ்சம் பரவாயில்லை அம்மா. சக்கர நாற்காலி வாங்கிக் கொள்ளும் அளவு நல்ல நிலைமையில் இருக்கிறேன்' என்று சொன்னார்.

'சாதியும் நானும்' மொழிபெயர்ப்புக்காக அவர் தங்கியிருந்து வேலை செய்தது, எங்கள் வீட்டுக்கு வரும்போது முறை வைத்து எழுத்து வேலைகளைப் பார்ப்பது, நேர ஒழுங்கு ஆகியவை எல்லாம் எனக்கும் நல்லது செய்தன. அவ்வளவு திட்டமிடல் எல்லாம் இல்லாதவன்; உடல்நலத்தில் அக்கறையின்மை, நினைத்த போது எழுதுவது, எழுதாமல் இருப்பது, சோம்பல் எல்லாம் இணைந்த குழப்ப வடிவம் நான். அம்பையைப் பார்த்துச் சிலவற்றைக் கற்றுக்கொள்ள முயல்கிறேன். என் குடும்பத்தாருக்கும் 'எழுத்தாளர் என்றால் இப்படியெல்லாம் வேலை செய்ய வேண்டும் போலிருக்கிறது' என்னும் எண்ணம் தோன்றியது.

(28-11-24 அன்று மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நடைபெற்ற 'அம்பை 80' கருத்தரங்கில் ஆற்றிய உரையின் ஒருபகுதி எழுத்து வடிவம்.)

– 09-12-2024

https://neeli.co.in/1881/

நீரெல்லாம் கங்கை: அம்பை

பகுதி 3: அம்பையின் படைப்புலகம்: கமலதேவி

(காட்டில் ஒரு மான் சிறுகதை தொகுப்பை முன் வைத்து.)



அவள் எந்தச் சேறும், சகதியும்,பாசியும் சேர்க்காமல் ஓடிக்கொண்டே இருப்பவள். தொடக்கம், முடிவு இல்லாதவள்

-அம்பை

[பிரசுரிக்கப்படாத கைப்பரதி கதையில் இருந்து]

அம்பையின் காட்டில் ஒரு மான் என்ற சிறுகதைத் தொகுப்பு பரவலாக வலுவான பெண் கதாப்பாத்திரங்களை கொண்டுள்ளது. இந்தத்தொகுப்பின் பெரும்பாலான கதைகள் அடுத்தடுத்த வாசிப்புகளிலும் வாசிப்புசுவை குறையாதவை. இதில் உள்ள சில கதைகளை வெவ்வேறு வயதுகளில் தொடர்ந்து வாசிக்கிறேன். பிளாஸ்டிக் டப்பாவில் பராசக்தி முதலியோர், அடவி, பிரசுரிக்கப்படாத கைப்பிரதி போன்ற கதைகள் முக்கியமானவை.

இந்தத்தொகுப்பில் அம்பையின் மொழி வசீகரமான ஒரு இறகைப்போல இயல்பாக பறக்கிறது. அம்பையின் ஆழ்உள்ளத்தை கட்டமைக்கும் புராண இதிகாச கதைகள் மற்றும் கதைமாந்தர்கள், மரபிசை, தமிழ் இலக்கிய பாடல்கள்,வடஇந்திய இசை போன்றவை கதைப்பின்னலில் இணைந்து கொள்கின்றன. அம்பை நம் மரபில் வேர்விட்டு எழுந்த கேள்விகளை

உடைய இலக்கியவாதி என்பது இந்தத்தொகுப்பில் ஆழமாக வெளிப்படுகிறது.

பாரதியாரின் வரிகளைப் பாடும் பெண்கள் தொடர்ந்து கதைகளில் காணக் கிடைக்கிறார்கள். தீக்குள் விரலை வைத்தால் நின்னை தீண்டுமின்பம், பட்டுக்கருநீலப்புடவையில் பதித்த நல்வைரம் என்று பெண்கதாப்பாத்திரங்களின் பேச்சின் நடுவே பாரதியின் வரிகளும்,திருமூலரின் வரிகளும் இயல்பாக வருகின்றன. வள்ளித்திருமணம் நாடகத்தின் ஆயலோட்டும் வள்ளி வெள்ளை வெள்ளை கொக்குகளா என்று பாடுகிறாள். சுதந்திர போராட்டக்காலத்தின் நினைவும் இவரின் கதையில் உள்ளது.

இரவுகளில் பெண்கள் திருச்சதகம் திருப்புலம்பல் வரிகளை முணுமுணுப்பவர்களாக இருக்கிறார்கள். [பிரசுரிக்கப்படாத கைப்பிரதி] ‘உற்றாரை யான் வேண்டேன், ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்’ என்று ஒரு நடுவயதுப் பெண் பாடுவதின் துக்கம் அடிநாதமாக கதைகளில் ஓடுகிறது. ‘அவலக்கடலாய வெள்ளத்தே’ என்று பாடும் பெண் கோவிலுக்கு சென்று நிற்காதவளாக இருக்கிறாள். இந்திய உளவியல், சமூகக்கட்டமைப்பில் ஒரு பெண் தன் நடுவயதில் உற்றாரும்,ஊரும் வேண்டாம் என்று சொல்வதில் உள்ள திசைதிரும்பல் கவனத்திற்குரியது. பெண்ணுக்கு துறவில்லை என்று சொல்லக்கூடியவர்கள் நாம். மரபில் விடுதலைக்கான வழியாக பெண்ணுக்கு தாய்மை, ஆணுக்கு துறவு என்று சொல்லப்படுகிறது. ஆனால் அம்பையின் படைப்புலகில் ‘ப்ளாஸ்ட்டி டப்பாவில் பாராசக்தி முதலியோர்’ கதையில் வரக்கூடிய, அக்மார்க் லௌகீக தாயான குமுதாம்மாவுமே தன் பிள்ளை என்ற எல்லையை கடந்து சென்றே பேரன்னையாக வெளிப்படுகிறார். அம்பை கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே இந்தக்கதைகளை எழுதியிருப்பது வியப்பை ஏற்படுத்துகிறது.

பிரசுரிக்கப்படாத கைப்பிரதி கதையில் வரும் பதின்வயது செந்தாமரையின் கனவுகள் குறிப்பிடத்தக்கவை. ஒரு நாள் ஔவையாராக இருப்பவள் மறுநாள் பாரதியாகிறாள். அடுத்தடுத்த நாட்களில் நக்கீரர்,வீணை தனம்மாள்,அக்கமா தேவி, பேகம் அக்தர்,ஸில்வியா ப்ளாத், பாரி என்று வெவ்வேறுஆளுமைகளாக தன்னை மாற்றி கண்ணாடி முன் நின்று கனவு கண்பவள். தன் உடலில் அரும்பி எழும் சிறு முலைகளுக்கு அங்கவை, சங்கவை எனப்பெயரிடும் விளையாட்டுப்பெண். வயதடைவதை

எதிர்கொள்ள அச்சப்படும் பதின் வயது பெண்களில் இருந்து மாறுபட்டவள்.

இவர் கதைகளின் பெண்கள் 'துன்பம் நேர்கையில் யாழெடுத்து இன்பம் சேர்க்க மாட்டாயா என்று ஆண் பெண்ணிற்காக பாடக்கூடாதா?' என்று கேட்பவர்கள். பெண் மட்டுமே துக்கநிவாரணியாக இருக்க வேண்டுமா? ஏன் பெண் துன்பத்திற்காக ஒரு யாழ் இசைக்கப்படவில்லை என்று கேட்பவர்கள். அம்பை மறுபடி மறுபடி பெண் ஒரு சகஉயிர்,தனி உயிர் என்று நம் சமூகப்பிரக்ஞையை தட்டிச்சொல்கிறார். விஷ்ணுவின் காலடியில் அமர்ந்திருப்பதை அன்றி அவளுக்கும் கனவுகள் உண்டே என்கிறார். காசியின் கங்கைக்கரையில் உள்ளத்தை உருக்கும் தும்ரிப்பாடல்களை பாடும் வயோதிக பாடகிகளுடன்,பைராகிகளுடன்,சாவை நோக்கியிருக்கு வயதான விதவைகளுடன் கங்கை இவர் கதைகளில் நகர்கிறாள். இந்த கங்கை தன் குழந்தைகளை ஆற்றில் பலி கொடுப்பவள் அல்ல. இவள் எமனை ஏய்ப்பவள்.

'விஷ்ணுவின் காலடியில் அமர்ந்திருக்கும் திருமகள்' அம்பையை தொந்தரவு செய்யும் முக்கியமான மரபுப்படிமம். அம்பைக்கு சகமனிதர்களிடமிருந்து தெய்வங்கள் வரை மாற்றில்லாமல் உன்சகி உனக்கானவள் மட்டுமா? அவள் உனக்கு வேலை செய்பவள் மட்டுமா? என்ற கேள்வியை கேட்கிறார். நவீனவாகனத்தை பற்றி பேசுவதென்றால் சிம்மவாகினியிலிருந்து, பிள்ளையாரின் சுண்டெலி, அன்னபட்சி, புஷ்பகவிமானம் வரை இயல்பாக செல்கிறார். அம்பையின் படைப்புமொழியானது இந்திய ஆழ்மனப்படிமங்களால் ஆன தனித்துவமான மொழி.

அம்பையின் கதைகளில் உள்ள பெண்களின் தந்தைகள் முக்கியமானவர்கள். பிரசுரிக்கப்படாத கைப்பிரதி கதையின் நாயகியான திருமகளின் தந்தை ராமசாமி முக்கியமான கதாப்பாத்திரம். கணவனை இழந்த பெண்ணை திருமணம் செய்து கொள்ளும் அவர் பெண்ணுக்கு வாழ்க்கை கொடுப்பதாக சொல்லும் பிரச்சாரவாதிகளை 'அது என்ன வாழ்க்கை கொடுப்பது' என்று கேள்வி கேட்பவராக இருக்கிறார்.

சமையல் வேலைகளை, வீட்டுவேலைகளை இயல்பாக பகிர்ந்து கொள்ளும் ஆண் கதாப்பாத்திரங்கள் அம்பையின் கனவு. அம்பை சமையலை பற்றி எழுதும் பொழுதே அது எவ்வளவு நேரத்தை

பெண்களுக்கு இல்லாமல் ஆக்குகிறது என்ற ஆதங்கம் தெரிகிறது. ஆண்கள் எவ்வளவு சாமார்த்தியமாக அதில் இருந்து ஒதுங்கிக் கொள்கிறார்கள் என்று காட்டிக்கொண்டே இருக்கிறார்.

அடவி என்ற கதையில் வரும் அப்பா தன் மகளின் விருப்பத்திற்கு மதிப்பு கொடுப்பவராக இருக்கிறார். சென்ற கட்டுரையில் அம்பையின் கதைகளில் குழந்தைகள் நிறைந்திருக்கிறார்கள் என்று எழுதியிருந்தேன். அதே போலவே கதைகளில் அங்கங்கே தென்படும் பெண்களின்அப்பாக்கள் நிதானமானவர்களாக, தங்கள் பெண்களை அறிந்தவர்களாக இருக்கிறார்கள். தந்தைகள் இவரின் மொத்த படைப்புலகையும் சமனமாக்குவதை தொடர்ந்து வாசிக்கும் போது உணரமுடிகிறது. உதாரணமாக பிரசுரிக்கப்படாத கைப்பிரதி கதையில் பதிப்பாளர் மற்றும் எழுத்தாளரான திருமகள், முத்துக்குமரன் என்ற கவிஞரை காதலித்து திருமணம் செய்துகொள்கிறார். கவிஞர் போதைப்பழக்கங்கள் உடையவர். வழக்கமாக நம் சமூகத்தின் ஆண்மனநிலையின் பிம்பமாக இருக்கிறார். சொல்லாலும், செயல்களாலும் வன்முறை படிந்த அந்த கதாப்பாத்திரத்தை,அன்பும் மென்மையும் உள்ள திருமகளின் தந்தை கதாப்பாத்திரம் ஈடுசெய்கிறது. கதையின் உணர்வுநிலையை, பேசுபொருளை சமனமாக்குகிறது. நீயெல்லாம் ஒரு பொம்பளையா என்று ஒவ்வொரு முறையும் அந்தக்கதாப்பாத்திரம் கேட்கும் போதும் ,வாசிக்கும் நமக்கு நம் சமூகத்தின் ஆழ்மனநிலை என்ன என்பது தெளிவாகிறது. குழம்பை சூடு செய்யாததில் இருந்து, ஒரு பெண் தனியாக தனக்கு ஒரு டைப் ரைட்டர் வைத்துக் கொண்டு எழுதுவது வரை பெண்ணின் தனித்துவமான எதையும் ஏற்கமுடியாத ஆண்மனநிலை அல்லது சமூகத்தின் மனநிலை கொண்ட கதாப்பாத்திரம் இது. இந்தக்கதாப்பாத்திரம் நம் சமூகத்தின் ஒட்டுமொத்த மனநிலையின் சாரம்.

மேலும் நமக்கு இன்னொரு சிக்கல் உண்டு. ஒரு பெண்ணிற்கு திருமணமாகிவிட்டால் கணவனைத்தவிர யாரும் அவள் மீது அதிக அக்கறை எடுத்துக் கொள்ளக்கூடாது. பெற்ற தந்தையாக இருந்தாலும் ஒதுங்கிக்கொள்ள வேண்டும். இதன் அடிப்படை என்ன என்பதை அம்பை தன் கதைகளில் தொடர்ந்து விசாரிக்கிறார். யாரும் எந்த கேள்வியும் கேட்கவிடாது விலைக்கு வாங்கிய பசுவை கொட்டிலில் அடைக்கும் உரிமையாளரின் மனோபாவத்தை எடுத்துக்காட்டுகிறார். இவரது படைப்புலகில் ஒரு எல்லையில் சீதைக்கு ராவணன் கூட நண்பனாக, இசைகுருவாக மாறமுடிகிறது. ஆனால் கணவனான ராமனால்

அது ஒருபோதும் முடிவதில்லை. அது ஏன்? என்பது அம்பையின் படைப்புலக கேள்விகளின் முக்கியமான சரடுகளில் ஒன் று.

அம்பை பெண்அரசியலை பேசியவர் என்ற பொதுவான பிம்பம் உண்டு. அதையும் மீறி அவர்கதைகளில் சமூக அரசியலின், பண்பாட்டு அரசியலின் அடர்ந்த நிறங்கள் உள்ளன. உதாரணமாக கடற்கரையில் ஒரு காவிப்பிள்ளையார், திக்கு போன்ற கதைகளை சொல்லலாம். ஒரு பெண் நடைப்பயிற்சி செய்யும் சாலையில் ஏற்படும் தடைகளை மையமாகக் கொண்ட கதையில் மதம் சார்ந்த அரசியலில் இருந்து சுற்றுபுறம் சார்ந்த அரசியல், பேச்சு உரிமை என்ற பொய் அரசியல் வரை அனைத்தையும் எழுதிவிட அம்பையால் முடிகிறது. அதே கதையில் பாபர் மசூதி இடிப்பு வருகிறது. வடகம் பிழியும் மாடியில் காக்கையை விரட்ட அமர்ந்திருக்கும் சிறுமிகளின் அம்மா 'இந்தியாவில் குந்தி தின்னும் கொக்குகளா...' என்ற வெள்ளைக்காரர்கள் பற்றிய பாடலை பாடிக்காட்டுகிறார். அவர்கள் பின்னாளில் உலகவங்கியையும், அனைத்துலக ஸ்தாபனங்களையும் நினைத்தும் இந்தப்பாடலை பாடலாம் என்கிறார்கள். இயல்பாக தன் படைப்புலகில் பெண்களின் அரசியல் பிரக்ஞையை கையாண்டுள்ளார். பெண் ஆணை பெயர் சொல்லி அழைப்பதால் ஏற்படும் ஈகோ நுணுக்கமாக அம்பையின் கதைகளில் வெளிப்படுகிறது. மறுபடியும் பிரசுரிக்க முடியாத கைப்பிரதி கதையை சொல்ல வேண்டியிருக்கிறது. அந்த கதைநாயகரான கவிஞர் மனைவியிடம் 'பேர் வச்சி கூப்பிடாதேடி...மரியாதை இல்லாம..நீயெல்லாம் ஒரு பொம்ளையா' என்கிறார். இந்தக்கதையில் அவர் நீயெல்லாம் ஒரு பொம்பளையா? என்று எதற்கெல்லாம் கேட்கிறார் என்று பட்டியலிடலாம். அந்தப்பட்டியல் ஒட்டுமொத்த சமூகமும் பெண்ணிற்கு வகுத்தளித்த பட்டியல். அந்தப்பட்டியலை நாம் இன்னும் விரித்தால் கிட்டத்தட்ட ஆணிற்கு கீழே,குடும்பத்திற்கு கீழே,பிள்ளைகளுக்கு கீழே அமர்ந்து ஒரு பெண் செய்ய வேண்டிய சேவகங்கள் அனைத்தும் வரும். நம்முடைய இந்த வாழ்க்கை முறையை அச்சாகக் கொண்டு அம்பையின் எழுத்துலகம் சுழல்கிறது.

பிளாஸ்ட்டிக் டப்பாவில் பராசக்தி முதலியோர் என்ற கதை அம்பையின் கதைகளில் முக்கியமானது. தனி ஒரு சிறுகதை என்ற அளவிலேயே ஒரு கலைப்படைப்பு. அதில் வரும் அம்மா தனி ஒருத்தி இல்லை. படிக்கல்லை தட்டி 'கிருஷ்ணா ரா...' என்று அழைத்து அன்னமிட்டு உயிர்குலத்திற்கே அன்னையாகும் மானிடப்பெண். அவளுக்கு மனித குழந்தையிலிருந்து

காக்கை, அணில் என்று அனைத்துமே கிருஷ்ணன் தான். தன் மகளில் இருந்து வெள்ளைக்கார பெண்,அணில்கள் வரை அனைத்து கர்பிணிகளும் அவளுக்கு மகள்களே. அண்டைவீட்டாரின் வலிகளுக்கு உதவ அவள் கரங்கள் நீண்டு கொண்டே இருக்கின்றன. எந்த எதிர்பார்ப்பும் அவளிடம் இல்லை. 'திக்குத் தெரியாத காட்டில்' பாடலை உருக்கமாக பாடக்கூடிய உள்ளுக்குள் தனிமை கூடிய அம்மா. தன் அருகில் இருப்பவர்களின் மீது அக்கறை கொண்ட மனுஷி. அடுத்தத் தலைமுறையின் விஷயங்களில் மூக்கை நுழைக்காது அவர்கள் சோர்ந்த நேரத்தில் கைக்கொடுப்பவள். அம்மா தனி மனுஷி இல்லை ஒரு ஸ்தாபனம் என்று மகள் ஒருமுறை சொல்வாள். குமுதாம்மா உணவின் மூலமும், சகமனிதன் மீது கொண்ட அக்கறை மூலமும் வாழ்வின் ருசியை மகளுக்கு உணர்த்துகிறார். அவள் வாழ்வின் வெறுமையை நீக்குகிறார். அன்பை துயரத்தின் பாதையாகவோ, மீட்பின் பாதையாகவோ ஆக்காமல், ஏமாற்றத்தின் வலியாகவோ காட்டாமல், வாழ்வின் ருசியாக மாற்றும் இந்தக்கதை மிக முக்கியமான கதை. இந்தக்கதை மேற்சொன்ன அத்தனை சாத்தியங்களும் கொண்ட கதை. ஒரு கதையில் படைப்பாளி எதைத் தன் தேடலாகக் கொள்கிறார் என்பதில் உள்ள ரகசியம் எப்போதும் பிடிபடாத ஒன்று.

அன்னங்களும் பட்சிகளும் நெய்யப்பட்ட ஒரு ரோஜா வண்ணப்புடவை என்ற கதை இந்திய பெண்குழந்தைகளை தத்தெடுக்கும் வெளிநாட்டுகாரர்கள் பற்றிய கதை. அவ்வாறு தத்தெடுக்கும் பெற்றோருக்கான ஒரு கூடல் விழா நடக்கிறது. அந்த பெற்றோரில் இந்திய பெண்ணான கீதாவும் வருகிறாள். இத்தனை பெண்குழந்தைகள் அனாதையாக வீசி எறியப்படுகிறார்களா என்ற திடுக்கிடலை அந்த விழாவில் உணர்கிறாள். தன் கையை பற்றிக்கொள்ளும் ஒரு குழந்தைக்கு தன் தாய் பயன்படுத்திய பட்டுப்புடவையின் முந்தானையை துண்டாக்கி போர்த்திவிடுகிறாள். அந்த புடவையில் அப்பாவின் காதல், கூட்டுக்குடும்ப நெருக்கடிகள், அம்மாவின் மகிழ்ச்சி, துயரம், இசை, பிரிவு, பிடித்தப் பாடல்கள் என்று வாழ்நாள் நினைவுகள் படிந்திருக்கின்றன. குழந்தையை தொடர்பு கொள்ள தொலைபேசி எண்ணை வாங்கிக்கொண்டு, அந்த முந்தானையை குழந்தைக்கு போர்த்துவதன் மூலம் அதனுடன் தன்னையும், பிறந்த மண்ணையும் பிணைக்கிறாள். இந்தக்கதையில் 'சில விஷயங்கள் அவளுள் அமிழ்ந்து போயிருந்தன. அவை கையால் தொடக்கூடியவை அல்ல' என்று கீதா நினைப்பாள். இவ்வாறு அம்பையின் கதைகளில் மனம் சார்ந்த விஷயங்கள் கவித்துவத்துடன் வெளிப்படுகின்றன.

ஒட்டகசவாரி என்ற கதை பாலைவனத்திலிருந்து கடற்கரைக்கு கேளிக்கை பொருளாக வரும் ஒட்டத்தை மையமாகக் கொண்டது. அவை உடல் தளர்ந்த காலத்தில் தெருக்களில் அனாதையாக துரத்திவிடப்படுகின்றன. திருநங்கைகளை வீட்டைவிட்டு வெளியேற்றி விடுவதையும் இணைத்து எழுதப்பட்ட கதை இது. இந்தக்கதை பயன்பாடு மட்டும் தான் அனைத்தையும் தீர்மானிக்கிறதா? என்ற கேள்வியை எழுப்புகிறது. விலங்குகளை பிணைக்கும் மூக்குக் கயிறும் பெண்களின் மூக்கணிகளும் கதையில் படிமங்களாகின்றன. ஆண்மைய சமூகம் தன்னால் அடக்க முடியாத ஒன்றை பிணைத்து வைத்து, அடங்க மறுக்கும் ஒவ்வொரு முறையும் பிணையை இறுக்கிக் காயப்படுத்தி பணிய வைப்பதை அம்பை சொல்லிச்செல்கிறார். உதாரணமாக ஒரு கதையில் மூக்கணியாக சொல்லப்படுவது அடுத்தக்கதையில் உடையாகிறது. இன்னொரு கதையில் சடங்காகிறது. ஒரு நாணயத்தின் இருபக்கத்தில் ஒன்றிற்கு இத்தனை ஒளியும், மறுபக்கத்திற்கு இத்தனை இருளும் ஏன் என்ற கேள்விகளால் ஆனது அம்பையின் படைப்புலகம்.

ஒருவர் மற்றொருவர் என்ற கதை ஹிப்பி வாழ்க்கை முறையின் சாயல் கொண்டது. ஓவியக்கலைஞர் ஒருவரின் வாழ்வையும், அமைதியான இறப்பையும் அவரின் சகாவின் நட்பை சொல்லும் கதை. கலைஞர்களில் வித்தியாசமான வாழ்க்கை முறையை,அவர்களின் மனப்போக்கை மையமாகக் கொண்ட கதை.

அம்பையின் கதைகளில் சமையல், தேநீரின் வித்தியாசமான மணங்கள், வெவ்வேறு பிரதேசங்களின் உணவுபண்டங்கள் பற்றிய தெளிவாக விவரணைகள் எப்போதும் உண்டு. அது கதைக்கு ஒரு நம்பகத்தன்மையை இயல்புத்தன்மையை அளிக்கிறது. மேலும் புடவைகளின் வண்ணங்கள், வேலைப்பாடுகள் பற்றிய நுணுக்கமான குறிப்புகள் இசை நுணுக்கங்கள் அளவுக்கே சொல்லப்படுகின்றன. அம்பை கதைகளில் இசைபற்றிய குறிப்பில்லாத கதைகள் அனேகமாக இல்லை. ராகங்களின் பெயர்கள், ஸ்ருதி, பாடல் வரிகள் என்று விவரணைகள் கதைகளில் உண்டு. இந்த சிறப்பம்சங்களே அம்பையின் கதைமொழியை தனித்துவமாக்குகின்றன. நீண்ட கதைகளாக இருப்பது அவரின் எழுத்துக்கு சாதகமாக அம்சம் என்று சொல்லலாம். இந்த அம்சம் நம்மை கதைக்குள் ஒன்றச்செய்கிறது.

அடவி என்ற கதை நாற்பது வயதிற்கு மேலான பெண்ணின் அலைகழிப்புகளை மையமாகக் கொண்டது. அதில் தன்னுடைய ராமாயணத்தையும் அம்பை இணைக்கிறார். அதில் ராவணர் மத்திம வயது சீதையின் நண்பனாவது அழகிய கற்பனை. மீண்டும் மீண்டும் காட்டிற்கு அனுப்பட்டு சோதிக்கப்படும் சீதை நம் ஆழ்மனப்படிமம். இந்தக் கதையின் நாயகியான செந்திரு தன் கணவனுடன் வியாபாரத்தை பெருக்குவதற்கு அவனை விட அதிகமாக உழைக்கிறாள். ஆனால் முதலாளி ஸ்தானத்தில் சமபங்கு அளிக்கப்படுவதில்லை என்பதால் மனம் கசந்து காட்டிற்கு பயணப்படுகிறாள். அவள் ராமாயணத்தை தன் போக்கில் எழுதிப்பார்க்கிறாள். அனைவருக்கும் காடு தேவைதான். மனதிற்குள்ளாவது ஒரு தனித்த காடு.

பெண்ணிற்கு ஆண் நண்பனாக இருக்கலாம் என்பதை இன்னமும் கூட சரியாக உள்வாங்கிக் கொள்ளாத ஒரு சமூகத்தின் படைப்பாளி அம்பை. இதிகாச ராவணனிலிருந்து, நேற்றைய ரிபோர்ட்டர் பெண்ணின் நண்பன் வரையான கதாப்பாத்திரங்களை அம்பை தன் கதைகளில் நண்பனாக கையாள்கிறார். ஆண் பெண் நட்பை வலுவாக முன் வைக்கும் படைப்பாளி அம்பை. ஆண் பெண் உறவை விஸ்தீரப்படுத்தியவர் என்றும் சொல்லலாம். அப்பாவுக்குப் பிள்ளை, கணவனுக்கு மனைவி, பிள்ளைக்குத்தாய் என்பதைக் கடந்து பெண்ணை தோழியாக மாற்றியவர். பாலியல் உறவோ,உறவுகளின் உரிமையாடலோ இல்லாத ஒரு நிலை. இந்த நட்பும் இவர் கதைகளின் ஆதாரத்தை சமனப்படுத்துவதில் பங்கெடுக்கிறது. திக்கு என்ற கதையில் விஷ்ணு உறங்கும் நேரத்தில் ஆதிஷேசன் உனக்கு என்னாச்சு லஷ்மி? என்று அவளின் வாடிய முகத்தை பார்த்துக் கேட்கிறான். விஷ்ணு எடுக்கும் அவதாரங்களில் எல்லாம் அவனுடைய வால் போல இருக்கிறேன். இவன் காலடியில் கிடந்து எனக்கு என்ன சுகம் ஆதி? ஒரு தனிப்படுக்கையாவது உண்டா என்று ஆதங்கப்படுகிறாள். உடனே ஆதி ஒரு தனி பாம்புப்படுக்கையை உருவாக்கித்தருகிறான். அதில் உடலை ஒடுக்காமல் தாராளமாக படுத்து உறங்குகிறாள். பெண்தெய்வத்தின் ஆதங்கங்களைக்கூட நண்பன் தான் புரிந்து கொள்கிறான். ஆண் பெண் நட்பு அம்பையின் அனைத்துத் தொகுப்புகளிலும் உள்ளன. முன்பு தந்தையை சொல்லியதைப் போலவே அம்பையின் படைப்புலகை நிகர் செய்து ஒருபக்கமாக சரியவிடாது ஆண் நண்பர்கள் சமனப்படுத்துகிறார்கள்.

ஆரம்பகாலக்கவிதை என்ற கதையில் பதின்வயது பெண்ணின் துறவு பற்றிய கனவுகள் கதையாக்கப்பட்டுள்ளது. இறைவன் பற்றிய கவிதைகளை

எழுதிப்பார்க்கிறாள். ஒரு நாள் அவள் கண்முன்பு எளிய பெண்ணை கணவன் அடித்து துன்புறுத்துவதை காணும் போது அதை தடுக்க இயலாத தெய்வ நம்பிக்கை அவளை விட்டு விலகுகிறது. பின் அவள் கவிதைகள் எழுதுவதில்லை. ஒரு இளம் பெண்ணின் லட்சியம் சார்ந்த அலைமோதல்களை கருவாகக் கொண்டக் கதை என்ற அளவில் தனித்தன்மை வாய்ந்த கதை.

கடற்கரையில் ஒரு காவிப்பிள்ளையார் என்ற கதையில் கடற்கரையின் அழகிற்கு இணையாக, கடலில் ராட்சச பிள்ளையாரை கரைக்கும் வழிபாட்டு முறை வருகிறது. நம் வழிபாடுகளுக்குள் ஆடம்பரங்கள் நுழையும் தருணங்களையும் அதனால் சிற்றுயிர்களுக்கு ஏற்படும் ஆதாரமான சிக்கல்களையும் மையமாகக் கொண்டக்கதை. இந்த கம்பியெல்லாம் மீனை புண்ணாக்காதா என்று ஒரு சிறுமி கேட்பாள். இது போன்ற சிலகதைகளை அம்பைக்குள் இருக்கும் சிறுமி எழுதியிருக்கக்கூடும்.

ஒரு எலி ஒரு குருவி என்ற கதையில் நகரத்து வீடும் வாழ்க்கையும் மானுடரை எந்த அளவிற்கு சிறுத்துப்போகச் செய்கிறது என்று எழுதியிருக்கிறார். எலி பொந்து, குருவிக்கூட்டை போன்ற ஒரு வீடும் இளம் தம்பதிகளும் கதையில் வருகிறார்கள். வலை தேவைப்படும் எலியும், மரக்கிளை தேவைப்படும் குருவியும் போல அவர்கள் அந்த நகரத்தின் நெருக்கத்தில் கசங்குகிறார்கள். இந்தத்தொகுப்பை வாசித்து முடித்ததும் இந்தக்கதையும் அடவிக்கதையும் இணைந்து கொண்டது. ஒரு காடே தேவைப்படும் மனிதனுக்கு நகரம் எத்தனை பெரிய நெருக்கடி.

இந்தத்தொகுப்பின் சிறப்பம்சம் ஆளுமைமிக்க பெண்கள். காவிய நாயகியான சீதையில் இருந்து, எழுத்தாளரான திரு, வணிகம் செய்யும் பெண்ணான செந்திரு, பேரன்னையின் வடிவமான குமுதாம்மா,பதின்வயது செந்தாமரை வரை அனைவரும் ஆளுமை மிக்கவர்களாக இருக்கிறார்கள். அவரவர் இருக்கும் இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப தன் ஆளுமை திறனுடன் கதாப்பாத்திரங்களை இந்தத்தொகுப்பில் அம்பை கையாண்டிருக்கிறார். எந்த நீரும் கங்கை என்பதைப்போல எந்தப் பதவியில்,எந்த நிலையில் இருந்தாலும் இந்தப்பெண்கள் தங்களுக்குரிய தனித்த ஆளுமையுடன் இந்தக்கதைகளில் வலம் வருகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குரிய பலகீனங்களை, பதட்டங்களை, சிக்கல்களை உடையவர்களாகவும் இருக்கிறார்கள். அவற்றை கடந்து

அவர்கள் நிற்கும் இடம் முக்கியமானது என்று நினைக்கிறேன். மீண்டும் மீண்டும் கதைகளில் இழையோடும் அம்பையின் மானுடத்தின் மீதான கரிசனமே கடைசியில் மனதில் ஒட்டி நிற்கிறது என்பதை இன்னொரு முறை பதிவு செய்கிறேன். அந்த ஆதாரமான அன்பிலிருந்து கிளைத்த படைப்பாளி அம்பை. அது சமூகத்தால் நசுக்கப்படுபவர்களின் பக்கம் நின்று பேசுவதால் தீவிரம் கொள்கிறது. அந்தத்தீவிரம் ஒரு உன்னதமான நிலையே தவிர பிரச்சாரம் அல்ல.

அந்தத்தீவிரம் மக்களிடையே மாரியம்மனுக்கும் கன்னிகா பரமேச்வரிக்கும் உள்ள ஏற்றத்தாழ்வை கண்டு புன்னகைக்கிறது. ஆணிற்கும் பெண்ணிற்கும் உள்ள ஏற்றதாழ்வை கேள்வி கேட்கிறது. குழந்தைகளின் மனநிலைகளின் மீது அக்கறை கொள்கிறது. விலங்குகள் மீது அதீத ப்ரியம் கொள்கிறது. ஐந்தறிவு ஜீவிகளுக்கும் ஆறறிவு ஜீவிகளுக்கும் உயிரில், வலியில் வேற்றுமை இல்லை என்று சீறுகிறது. அனைத்தையும் மானுட பயன்பாட்டுக்கு கொண்டு வந்து கீழிறக்குவதை அருவருக்கிறது. அல்லது இதெல்லாம் இயல்பு என்று நினைப்பவர்களிடம் இது இயல்பல்ல என்று உணர்த்த முற்படுகிறது.

அதற்காக அம்பையின் கதைகள் வாசிப்பின்பம் குறைந்தவை அல்ல. அந்த கதைக்களங்களுக்குள் கதைமொழிக்குள் செல்வதற்கு வாசகருக்கு முன் தடை எதுவும் இருக்கலாகாது. முன்முடிவுகள் இல்லாத வாசகர் உள்நுழையக்கூடிய காடு போன்றது அவரது புனைவுலகம். அங்கங்கே தென்படும் சில எளிய கதைகள் அவரின் மொத்த படைப்புலகின் பலகீனமாகாது. சிறந்த படைப்பாளிகள் அவ்வப்போது எளிய கதைகளையும் எழுதவே செய்கிறார்கள்.



எழுத்தாளர் கமலதேவி

அடவி என்ற கதையில் சூஃபி ஒருவருக்கும், கதை நாயகியான செந்திருக்கும் நடக்கும் உரையாடல்.

சூஃபி: “எல்லாமே சுருதி தான் இல்லயா... இங்கு எல்லாருமே அஸுர் தான். சுருதி சேர வேண்டும். அனைவருமே சுருதியை பிடிக்க ஓடுபவர்கள்”

செந்திரு: “அவ்வளவு சிரமமா சுருதி கூடுவதில்?”

சூஃபி: “அது பிடித்துப்போடும் விஷயம் இல்லையே? அலை அது. அடக்கி அதன் மேல் படகு ஓட்டும் போது கவிழ்த்து விடும். பெரிய அலையாய் எழும். பின் நுரையாய் போய்விடும். ஒரு சமயம் சேரும். பின் குழையும்...”

என்று இருவருக்கும் உரையாடல் நீளும். அம்பை ‘சுருதி கூடுதல்’ என்பதை பலக்கதைகளில் பலவிதங்களில் கையாண்டிருக்கிறார். ஆண் பெண் உறவிலிருந்து இயற்கை வரை. இறுதியாக அடவிக்கதையில் சீதை ராவணனிடம், ‘பல கைகள் பந்தாடிய வாழ்க்கை. நானாகவே கையில் எடுத்துக்கொள்கிறேன்’ என்கிறாள். அம்பை கதைகளின் கனவும் அதுவே.

அழியாச்சுடர்கள்

https://azhiyasudargal.wordpress.com/2011/04/30/%E0%AE%B5%E0%AF%86%E0%AE%B3%E0%AE%BF%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%9F%E0%AF%81-%E0%AE%85%E0%AE%AE%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%88/

வெளிப்பாடு – அம்பை

அந்தப் பேருந்து நிலையத்தை நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும் என்று தோன்றியது. அதன் ஓசைகளையும், பிம்பங்களையும் மனதில் உறைந்து போக வைத்துவிட வேண்டும். பின்னால் நினைவுகூற. முக்கலும், முனகலும், பெருமூச்சுமாய் ஒரு தமிழ் சினிமாப் பாட்டு. வீடியோ கோச்சுகளின் அழைப்பை விடுக்கும் கூவல்கள். அறிவிப்புகள். பாட்டின் அதிர்வுப் பின்னணியில், மடக்கிய ரவிக்கையிலிருந்து வெளிப்பட்ட ஒரு

முலை. காம்பு விறைத்து, பழுத்து. அதைச் சிறு சப்பலுடன் கவ்விய சிறு உதடுகள். நீலமும் சிவப்புமாய், கூச அடித்த பட்டுப் புடவையின் கழுத்துப்புற ஈரம். எண்ணெய் தடவி இறுக்கிப் பின்னிய தலையோடு ஒட்டிக்கொண்டிருந்த பின் தலையில் விரல்கள் நுழைத்த மல்லி, கதம்பம். கட்டணக் கழிப்பிடம் அருகேயே சுவரில் பீச்சியவனின் ஒரு கருத்த பிருஷ்டம். உள்நாக்குத் தெரிய, வாயைத் திறந்து கேவலின் உச்சக்கட்ட ஒலி செத்த நிலையில் ஒரு ரெட்டைக்குச்சிப் பின்னல் பெண்.

கண்டக்டரைச் சுற்றி இருந்த கூட்டத்தில் அவன் — சிதம்பரம் — மோதிக்கொண்டிருந்தான் அவளுக்காக. வேஷ்டியைக் கீழேயே விடமாட்டான் போலிருந்தது. அவள் காலையில் பார்த்ததிலிருந்து அது மடித்தே இருந்தது. ஒரு அரைக்கைச் சட்டை. காலில் ஒரு தேய்ந்த செருப்பு. காலையில் ரயில் நிலையத்துக்கும் இப்படித்தான் வந்தான். நொடியில் அவளை அடையாளம் கண்டு கொண்டுவிட்டான். சிறு பெட்டியை அவள் கையிலிருந்து வாங்கினான் முதலில். அவளால் பெட்டி தூக்க முடியாது; டிக்கெட் வாங்குதல் போன்ற விஷயங்களைச் செய்ய முடியாது என்பது பற்றித் தீர்மானமாக இருந்தான். ரயில் நிலையத்திலிருந்து வெளியே வந்து நடக்கத் தொடங்கியது, "ஏ யப்பா! இப்படி விறுவிறுன்னு நடக்கறீங்களே!" என்று வியந்தான். நடத்திக்கொண்டே போனான்.



"எங்கே போறோம்?"

"இதோ, இந்த முக்குவரிக்கும்தான். தாமிரவருணிக்கு. ஆத்துல குளிச்சிட்டுப் போயிடலாம்."

"ஐயோ! எனக்கு அங்கல்லாம் குளிக்க வராது."

"அய்ய! ஒண்ணுமில்லிங்க. எத்தன பேரு குளிக்கறாங்க பாருங்க."

மார்பில் பாதித் துணி. மீதி, கல்லில் பட் பட். நீர் தெறித்தது. மஞ்சள் கன்னங்களும், பாதங்களும், ஈரத் தொடைகளும். ஈரமுடி முதுகில். தலைப்பை வாயில் கவ்வி நொடியில் ரவிக்கை ஏறியது. மின்னல் மாதிரி இடையும், பின்பகுதியும் பளீரிட்டபின், மந்திரம் போட்டதுபோல் புடவை இடுப்பில்.

முடியாது. அவளுக்கு நிறைய விஷயங்கள் இருந்தன அணிந்துகொள்ள. எளிமையானவை அல்ல. திறந்தவெளியில் அவிழ்க்கவும் முடியாது.

"முடியாதுங்களா?"

"இல்ல. பழக்கமில்ல."

"இங்க வந்து தாமிரவருணி குளிக்காம போகலாமா?"

"இல்லல்ல. முடியாது."

மறுப்பால் சற்றுப் பாதிக்கப்பட்டான். “ஏங்க, ஆத்துல குளிக்கறது என்னங்க கஷ்டம்?” என்று முணுமுணுத்தான். “சரி வாங்க” என்று மீண்டும் நடத்தினான்.

ஒரு மரக்கதவின் முன் நின்று, “அண்ணி, அண்ணி” என்றான். கதவு திறந்தது. திறந்தவரிடம், “இவங்கதான்... நான் சொன்னேனே? ரிப்போர்ட் எழுதணுமாம். கிருஷ்ணமூர்த்தி உதவி பண்ணச் சொல்லிக் கடுதாசி போட்டிருந்தார். கணபதி இல்ல ஊர்ல. ஓட்டல்லே ரூம் போடலாம்னு பார்த்தேன். வேணாங்கறாங்க. அரை நாள்தானே இங்கன. அதான் கூட்டிட்டு வந்தேன்.”

”ஓட்டல் எதுக்கு நம்ம வீடு இருக்கச் சொல்ல? உள்ளாற வாங்க,” என்றார்.

உள்ளே, சமையலறையிலிருந்து ஒரு முகம் எட்டிப் பார்த்தது.

“குளிக்கணுமாம்.” என்று அறிவித்தான் செய்தி மாதிரி.

“என்ன?” என்றாள் அண்ணி.

“குளிக்கணுமாம்.”

“ஆத்துப் பக்கமா வரலியா?”

“வந்தமே. பளக்கம் இல்லியாம்.”

”இருக்கட்டும். இப்ப குளிக்கலாம்.” என்றாள்.

காப்பி வந்தது.

“வாங்க” என்றாள்.

சமையலறையின் முற்றத்தைக் காட்டி, “பக்கிட்டுல தண்ணி வெச்சிருக்கேன். ஊத்திக்கிடுங்க. கதவு சாத்த வேண்டாம். யாரும் வரமாட்டாங்க” என்றாள்.

அடுப்பில் பருப்பு மஞ்சள் வாசனையுடன் வெந்தது. இன்னொரு அடுப்பில் தோசைக்கல்.

“மஞ்சத்துண்டு பொறையில இருக்கு”. என்று விருக்கென்று உள்ளே வந்து தோசைக்கல் முன்னால் அமர்ந்தாள். அவள் அப்படி சர்வசாதாரணமாய்ப் புகுந்தது பாதிப்பதற்குமுன், தோசைக்கான மாவை ஊற்றினாள்.

ஜிவ்வென்று பசி வயிற்றைக் கவ்வியது. அம்மியில் சிதைந்த முதல் பச்சை மிளகாய் நெடி மூக்கில் ஏறித் தலையில் போதையாய் முட்டியது.

“முதுகு தேய்க்கணுமா?”

”இல்ல, இல்ல, வேண்டாம்.”

“கூச்சப்படுறீகளோ? பொம்பளைகளுக்குள்ள என்ன கூச்சம்?”

முதல் தோசை, பொன் நிற முறுகலாய் வாழை இலைமேல் விழுந்தது. இன்னொரு ‘சொய்’. கரண்டியால் ஒரு தேய் தேய்த்ததும் வட்டமாய் விரிந்தது.

“முடிக்கு எண்ணெய் தேக்க மாட்டீகளோ?”

”தேப்பனே.”

“பின்னே ஏன் இப்படி உதுந்துபோய்க் கிடக்கு? கரகரன்னுட்டு ரெண்டு கை எண்ணெய் தேய்ச்சு சீக்காய்ப் பொடி கொழச்சு தாமிரவருணில குளிச்சா முடி ஏன் வளராதுங்கேன்?”

அவள் தலையைப் பார்த்தாள். கருகருவென்று வெங்கலப் பானை மாதிரி முடிந்த தலைமயிர்.

”என் முடியைப் பாக்கீகளா? எனக்கு வயசு அம்பது. ஒரு முடி நரைக்கல. இன்னும் தூரம் போகலை.”

உனக்கு மறைக்க ஒன்றுமே இல்லையா? உன்னையும் என்னை மாதிரி அடக்கி அடக்கித்தான் – தலைப்பு ஏன் இப்படித் தொங்கறது? இடுப்பில் செருகு. வாசல் பக்கம் என்ன பண்றே? வாயை மூடு. கொரல் வெளில வரக்கூடாது. படிப்பு கிடக்கட்டும்; இந்தக் காயை நறுக்கித் தா. அப்புறம் தயிர் கடையலாம் – வளர்த்திருப்பார்கள். எந்த பலத்துடன் இப்படி வெள்ளையாய்ப் பேசுகிறாய்? சிரிக்கிறாய்?

“பதினாலு வயசிலே கல்யாணம். இவுகளுக்கு வயசு இருபது. அல்லு அசலு இல்ல. சொந்த மாமா பையன். பெறகு என்ன? சோறு வடிக்கிற ராச்சியந்தான். ரெண்டு பொட்டச்சிக. ஒரு மகன். கட்டிக் கொடுத்தாச்சு. அட, பேரன் எடுத்திட்டன்னா பாத்துக்குங்களேன்.”

இதுதான் உன் வாழ்க்கையின் கதையா? நாலு வரியில்?

உள்ளாடைகளை எப்படி அணிவது என்று யோசித்தாள்.

”தோசை வெச்சுட்டு வாரேன் அவுகளுக்கு. சாப்பிடச் சாப்பிட வெக்கணும். இல்லாட்டா மூக்கு மேல கோவம் புசுக்குன்னு ஒரு அறை வெச்சார்னா....”

சிரித்தாள். வெளியே விரைந்தாள் வாழை இலையுடன்.

வேகமாக உடைகளை அணிந்தாள். சரியாகத் துடைக்காத உடம்பில் ரவிக்கை சுலபமாக ஏறவில்லை. முழங்கை அருகே பிடித்தது.

”சாப்பிட வரீகளா? எனக்குப் பசிக்கி.”

“நான் தோசை சுடட்டுமா?”

“அட, தோசை சுடத் தெரியுமா?”

“ஏன், தெரியாதுன்னு நீனைச்சீங்களா? ஒங்களை மாதிரி அவ்வளவு அழகா வராது. ஆனா சுடுவேன்.”

“என்ன மாதிரின்னா, என் வயசு என்ன, உங்க வயசு என்ன? பத்து வயசு தொடங்கி சுடறேன். நாப்பது வருஷத்துல ஒரு நாளைக்கு இருபது மேனிக்கு எவ்வளவு தோசை... அம்மம்மா...”

ஒரு வருடத்துக்கு ஏழாயிரத்து முந்நூறு தோசைகள். நாற்பது வருடங்களில் இரண்டு லட்சத்துத் தொண்ணூற்றிரண்டாயிரம் தோசைகள். இது தவிர இட்லிகள், வடைகள், அப்பங்கள், பொரியல்கள், குழம்புகள். எவ்வளவு முறை சோறு வடித்திருப்பாள்? எவ்வளவு கிலோ அரிசி சமைத்திருப்பாள்? இவள் சிரிக்கிறாள்.

“என்னா ரிப்போர்டு எளுதணும்?”

“பொம்பளைங்க பத்தி.”

"பொம்பளைங்க பத்தி எழுத என்ன இருக்கு?"
"அதாவது அவங்க எப்படி வாழறாங்க என்னெல்லாம் வேலை செய்யறாங்க அவங்க தங்களோட வாழ்க்கையைப் பத்தி என்ன நெனைக்கிறாங்க..."
"என்ன நெனக்கிறாங்க? புள்ள பெறுதோம். ஆக்கிப் போடுதோம்."
"எப்பப் பாரு புள்ள பெறலியே? நடுவிலே ஏதாவது யோசிச்சிருப்பீங்க, இல்ல?"
"ஆமா, ரோசிச்சோம், போங்க."
மௌனமாகச் சாப்பிட்டார்கள்.
தோசை விள்ளலைச் சட்டினியில் தோய்த்தபின், வாயில் போடாமல் இவளைப் பார்த்தாள்.
"ஒரு பொஸ்தகமுங்க. எங்க வூட்டுல இருந்திச்சு. நான் சின்னப் புள்ளையா இருக்கச்சொல்ல. ஒரே போட்டோவுங்க. சமுத்திர போட்டோ, நொரையா அலை. செல போட்டோவுலே அப்படியே கண்ணாடி மாதிரி கெடக்கு சமுத்திரம். திருச்செந்தூர் கோயில் விளால நான் பாத்திருக்கேன் சமுத்திரம். ஒரு வாட்டி சொரம் வந்து சமுத்திரம் சமுத்திரமுன்னுட்டு பெனாத்தினேன். 'பயித்தியாரி, பயித்தியாரி'ன்னு இவுக ஒரே கோவம். அதென்னமோ வியாதிங்க. சமுத்திர சாபம். சமுத்திரம் பாக்கணுமே பாக்கணுமேன்னுட்டு பறப்பேன். இவுக ஒரு அறை வெப்பாக பாருங்க, அடங்கிடுவேன். முருக பக்தருங்க இவுக...."
ஒரு நகரத்தில் ஒரு சின்னப் பெண். அவள் வசித்த தெருவின் முனையில் ஒரு சிறு புத்தகக் கடை. கண்ணாடிச் சுவர்கள். இவள் மூக்கும் கண்களும் மட்டும் கண்ணாடிச் சுவர்வரை எட்டும் எம்பினால். ஒரு சுழல் அலமாரியின் பின்னால் அது இருந்தது. நீலக் கடலின் ஒரு ஓய்ந்த முனை. நிலாவின் ஒளிக்கதிர்கள் மெத்தென்று ஊடுருவியது ஒரு தையல்போல். ஒரு படகு, கடல், படகு, நிலா எல்லாம் ஒன்றோடொன்று கலந்திருந்தது நீலமாக. அவளுக்கு நீலம் பிடிக்கும், ரொம்ப. தெரு முனையை அடையும் போதெல்லாம் அவள் கண்களும் மூக்கும் கண்னாடியை அழுத்தும். அவர் பார்த்தார் ஒருநாள், கடைக்காரர்.
"என்ன பாப்பா?"
"சமுத்திரம்." இவள் காட்டினாள்.
"உள்ளே வா."
அவர் அதைக் கழற்றி அவளிடம் பார்க்கத் தந்தார். அது ஒரு ஐரோப்பிய ஓவியம். மோனேயா? நினைவில்லை. ஒருநாள் அதை அவளுக்குத் தந்தார். அவள் குழந்தை பருவத்தின் ஒரு மென்மையான பகுதி. ஓவியக் கடல்.
"என்ன டீச்சர், இவகிட்ட பேசறீங்களா? ஒண்ணும் தெரியாது இவளுக்கு. மீன் கொளம்பு வேணா நல்லா ஆக்குவா." சிரித்தார்.
இவள் நிமிர்ந்து அவளைப் பார்த்தாள். அவள் இவளை அரைக்கணம் பார்த்துவிட்டு இலையுடன் எழுந்து தன் கணவனைத் தாண்டிப் போனாள்.

கிளம்பும்போது, “அடுத்த வாட்டி ரெண்டு நாள் இருக்குற மாதிரி வாங்க டீச்சர். திருச்செந்தூர் போகலாம்,” என்றாள்.
”ஆமா, ஆமா, சாப்பாடெல்லாம் கட்டிட்டுப் போகலாம். நல்லாயிருக்கும் டீச்சர் முருகன் கோவில்,” என்றார் அவர்.
அவள் கன்னத்தை வருட வேண்டும் போலிருந்தது. இறுக்கி முடிந்திருந்த கூந்தலைக் கீழே தளரக் கொட்டிப் பார்க்க வேண்டும். கனத்த தங்கச் சங்கிலிகள் கிடந்த கறுத்த கழுத்தைத் தொட வேண்டும். ஆனால் ஸ்தூலமாகப் பகிர்ந்துகொண்டது தோசையை மட்டும்தான். அதனால், “உங்கள் கைதோசை சாப்பிட வருவேன் இன்னொரு தடவை” என்றாள்.
பஸ் டிக்கெட்டோடு வந்தான் அவன்.
“போயிடுவீங்க இல்ல? அங்க கணபதி வருவார். வேலை முடிஞ்சதும் அவரு வீட்டுக்கு வந்திடலாம். இப்ப அவரு இங்க இல்ல. அதனாலதான்... போயிடுவீங்க இல்ல?”
”டெல்லியிலேர்ந்து இங்க வரலியா? ஏன் போக முடியாது?”
“இல்ல.... ஒத்தையா....”
“அதெல்லாம் போயிடுவேன்.”
பஸ் கிளம்பும்முன் கண்டக்டரிடம், “அவுங்க புதுசு. கொஞ்சம் பாத்து எறக்கிவிடுங்கய்யா,” என்றான்.
மூச்சு முட்டியது. பாதுகாப்பும் ஒரு அடக்குமுறைதான். நீ வீட்டில் இருந்தால் உன்னை நான் காப்பாற்ற முடியும். வெளியே வந்து நான் சுவாசிக்கும் காற்றை நீ உள்ளுக்கு இழுத்தவுடனேயே அபாயம் உன்னைச் சூழ்கிறது. எட்டுத் திக்கும் வாயை அகல விரிக்கிறது உன்னை விழுங்க. என் கரிசனத்தைப் பார். எவ்வளவு அக்கறை பார் எனக்கு. கடல் வேண்டியிருந்தது அவளுக்கு. அலைகளை வீசி வீசிப் போட்டு அலையும் உதாசீனக் கடல்.
கணபதி வந்திருந்தார். வேலையை முடித்து பஸ் ஏறி அவர் வீட்டை அடையும்போது இரவு மணி ஒன்று. நீண்ட, கல்லால் ஆன ரேழியில் நடந்து வெளிமுற்றத்தைத் தாண்டிக் கதவை எட்டினார்கள். கதவைத் தட்டாமல் ‘சந்திரா, சந்திரா’ என்றார் சன்னமாக. சிரித்த முகத்துடன் ஒரு இருபது வயசுப் பெண் வந்தாள். மேல்புறம் இரும்புக்கம்பிகள் போட்ட கதவைத் திறந்தாள். கலைந்த தலை மயிரை ஒதுக்கியபடி “வாங்க” என்றாள்.
“அண்ணி மச்சுலே படுத்திருக்காங்க,” என்றாள் அவரிடம்.
“என் தங்கை” என்றார்.
சிரித்தாள். கூடத்தில் சமையலறையை ஒட்டி ஒரு சிறு பாயை விரித்தாள். “உட்காருங்க.”
ஸ்டவ் பற்றவைத்து, தோசைக்கல்லைப் போட்டாள். உள்ளே விறகடுப்பு கோலத்துடன் உட்கார்ந்திருந்தது.
இரண்டு வாழை இலைக் கீற்றுகளை விரித்தாள்.

தோசை விழுந்தது அதில். மிளகாய்ப் பொடி, நெய், சாப்பிட்டு முடிக்கும்முன் டம்ளரில் சுடச்சுடப் பால்.
காலையில் டீயுடன் எழுப்பினாள்.
“எப்படித் தெரியும் டீதான் சாப்பிடுவேன்னுட்டு?”
“அண்ணா சொன்னாரு, டெல்லிக்காரங்களுக்கு டீதான் பிடிக்கும்ன்னு”
“அப்புறம்?”
“விறுவிறுன்னு நடப்பீங்கன்னுட்டு, ஒத்தையா எல்லா இடத்துக்கும் போவீங்கன்னுட்டு.”
“நீ வரியா என்னோட?”
“நான் எப்பிடி? அனுப்ப மாட்டாக வெளில எல்லாம்.”
”போகவே மாட்டியா?”
“எப்பனாச்சும். கோயில், திருவிழா, அண்ணா அண்ணி அழைச்சிட்டுப் போனா சினிமா.”
“பின்ன வீட்டுல என்ன பண்ணுவ?”
”வேலை இருக்குமே. அம்மா ஒத்தையா எப்படி எல்லாம் செய்வாக? அண்ணியும் நானும் செய்வோம். மாட்டுக்குத் தீனி, தோசை மாவாட்டறது, சட்டினி, தொவையல் அரைக்கறது எல்லாம். துணி தோய்ப்பேன். சின்னண்ணா ஷர்ட்டு, பான்ட்டு தோச்சு, கஞ்சி போட்டு, பெட்டி போட்டு வைக்கணும். இல்லாட்டி ரொம்ப கோவிப்பான். மத்தியானம் நேரம் கெடச்சா பத்திரிகை படிப்பேன். தொடர்கதை....”
“டீ நல்லா இருக்கு”
“அந்த ‘சுரபி’ பத்திரிகைல வர கதேல அந்தாளு கூப்பிடுறான்னு இவ போயிருக்கா. தொடரும் போட்டுட்டாக. அவன் கெடுத்திடுவான்னு பயமா இருக்குது. இவ போகக் கூடாதில்ல?”
”உனக்கு வெளியே போகத் தோணாது?”
“போகலாமே. கல்யாணம் கட்டிட்டா மாப்பிள்ளையோட போகலாம். கடை, கண்ணி, சினிமா, வேத்தூரு எல்லாம். மாப்பிள்ளை பார்த்தாக. ஒண்ணும் கூடிவரல்ல.”
“எந்த மாதிரி புருஷன் வேணும் உனக்கு?”
”ஏன், மாப்பிள்ளை பாத்துத் தருவீகளோ?” குறும்பு கண்ணில்.
“நான் பார்க்கட்டுமா டெல்லி மாப்பிள்ளை? செக்கச் செவேல்ன்னுட்டு பஞ்சாபி மாப்பிள்ளை?”
“கேலி பேசுறீங்க”
”இல்லல்ல. நீ சொல்லேன்.”
“எப்படிப்பட்டவருன்னா? நல்லவரா இருக்கோணும்.”
“நல்லவர்ன்னா? சிகரெட்டு பிடிக்கக் கூடாதா? குடிக்கக் கூடாதா எப்படி?”
“கோவக்காரரா இருக்கக் கூடாது. கை நீட்டக் கூடாது.”
“ஏழையா பணக்காரரா?”

“நல்ல கொணமா இருக்கோணும். படிச்சவர்னா சம்பளம் நல்லாதானே இருக்கும்? நல்லா வெச்சுக்கிடணும்.”

ஒரு பேப்பரை எடுத்தாள். “கல்யாணம் கட்டிட்டு என்னெல்லாம் வேணும் சொல்லு. நான் பட்டியல் போடறேன்.”

“கேலியா?”

”சே, நிஜமாவே. சொல்லு”

ஊஞ்சல் சங்கிலியில் தலையைச் சாய்த்து, முழங்காலைப் பலகையில் ஊன்றி நின்றாள். கூந்தல் அலையாய் நெற்றியில் விழுந்தது. பாய்மர இமைகள் மேலெழுந்தன படகுக் கண்கள் மிதக்க. பட்டியல் அவளிடம் இருந்தது.

தெருவுல நடக்கணும் தெனம்.

ஓட்டல்ல பலகாரம் சாப்பிடணும்.

கடைக்குப் போய் நானே பொடவை எடுக்கணும்.

சினிமா போகணும்.

நெறைய ஊர் பாக்கணும்.

பின்கட்டு உலகில் பதியப் பதிய நடந்தாள். எருமை மாட்டை அடக்கினாள். தீனி போட்டாள். தீட்டானால் குளிக்கும் இருட்குகை ஸ்நான அறையைக் காட்டினாள். எட்டிப்பார்க்கும் போதெல்லாம் அடுப்படியில். தோசை சுடவா அக்கா? இட்டிலி ஊற்றித் தரட்டுமா? இரவில் புடவை விலகாமல் இரு கால்களையும் அடக்கி, மடக்கிப் படுத்தாள். யார் ஒரு தும்மல் போட்டாலும் எழுந்து மிளகு சீரகம் பொடித்த சுடுதண்ணி போட, விசை தட்டியவுடன் இயங்குபவள் போல் டாணென்று எழுந்தாள். இரவில் அவளுடைய கையை எடுத்து முகத்தில் வைத்துக்கொண்டாள். சோற்றுமணம் அடித்தது. பல யுகங்களின் சோற்று மணம்.

பெட்டியை மூடும்போது சொன்னாள்:

“நீங்க போயிட்டீங்கன்னா உங்களை ரொம்பத் தேடும் எனக்கு.”

“கல்யாணப் பத்திரிகை வெப்பே இல்ல எனக்கு?”

”பின்ன? வெக்காம?”

கணபதி பெட்டியை எடுத்துக்கொண்டார். முன்கட்டுச் சுவர்வரை வந்தாள். “அதுவரை வாயேன்” என்று தெருவை ஒட்டிய கதவைக் காட்டியதும் “ம்ஹூம்” என்றாள். சிரித்தாள். கத்திரிப்பூ நிறச் சேலை அணிந்திருந்தாள். தெருக்கதவை எட்டியபோது, “அக்காவுக்கு நம்ம ஊரு அல்வா வாங்கித்தர மறக்காதீக” என்று அவள் குரல் வந்தது. திரும்பிப் பார்த்தபோது அவள் கட்டியிருந்த கத்திரிப்பூ நிறச் சேலையின் தலைப்பு முனை மட்டும் தெரிந்தது.

கத்திரிப்பூ நிறத் துணியை மனதில் படரவிட்டாள். அது மடங்கி விரிந்து அலையாய்ச் சுழன்றது. கத்திரிப்பூ நிறக்கடல். அது சிறிது சிறிதாய் விஷ நீலமாகியது. பொங்கிப் பொங்கி வந்தது. கன்னத்தில் சொடுக்கும் அடியின் ஓசை வந்தது. முருக பக்தரின் அடி.

பஸ் நிறுத்தத்தில் சிதம்பரம் ஒரு பொட்டலத்தை நீட்டினான்.
"என்ன இது?"
"அந்த அண்ணிகிட்ட நீங்க கிளம்பறீங்கன்னுட்டு சொன்னேன். தோசை கட்டித் தந்தாங்க. வழியில சாப்பிட."
சந்திராவின் வேண்டுகோள்படி கணபதி அல்வாவுடன் வந்தார்மை இலையில் நெய்யுடன் வழுக்கிய அல்வா.



அம்பையின் "வீழ்தல்" சிறுகதை, இல்லற வாழ்க்கையின் நிறைவு மற்றும் சத்யா-கமலா தம்பதியரின் உறவுச் சிக்கல்களை, புரந்தரதாசரின் "நானேக்கே படவனு நானேக்கே பரதேசி" பாடலின் பெஹாக் ராகத்துடன் உணர்வுபூர்வமாக விவரிக்கும் ஒரு படைப்பாகும். இது சமூகத்தில் பெண்ணின் நிலை மற்றும் உறவுகளின் நுணுக்கங்களை அம்பையின் பாணியில் கிண்டலான தொனியுடன் வெளிப்படுத்துகிறது.

வீழ்தல் சிறுகதை பற்றிய முக்கிய அம்சங்கள்:

- **கதை மாந்தர்கள்:** சத்யா மற்றும் கமலா.
- **மையப்பொருள்:** மணவாழ்க்கையின் அர்த்தமுள்ள தருணங்கள் மற்றும் இடையில் ஏற்படும் உணர்வு ரீதியான 'வீழ்தல்' (உதிர்ந்து போதல்/உடைதல்).
- **இசை இணைப்பு:** புரந்தரதாசரின் பெஹாக் ராகப் பாடல் கதையின் உணர்வுகளை மேம்படுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ளது
- **கருப்பொருள்:** பெண்ணின் உணர்வுகள், உறவுச் சிக்கல்கள், கோபதாபங்கள் மற்றும் சமரசங்களை மையமாகக் கொண்டது.

அம்பை (சி.எஸ்.லட்சுமி) தமிழில் பெண்ணியம் சார்ந்து எழுதும் முதன்மைப் படைப்பாளிகளில் ஒருவராகக் கருதப்படுகிறார். இவரது கதைகள் பெரும்பாலும் பெண்களின் உலகத்தையும், அவர்கள் எதிர்கொள்ளும் சூழலையும் நுட்பமாக விவரிக்கின்றன.

அம்மா ஒரு கொலை செய்தாள்

https://www.sirukathaigal.com/%e0%ae%85%e0%ae%ae%e0%af%8d%e0%ae%ae%e0%ae%be-%e0%ae%92%e0%ae%b0%e0%af%81-%e0%ae%95%e0%af%8a%e0%ae%b2%e0%af%88-%e0%ae%9a%e0%af%86%e0%ae%af%e0%af%8d%e0%ae%a4%e0%ae%be%e0%ae%b3%e0%af%8d/

கதையாசிரியர்: அம்பை
தின/வார இதழ்: கசடதபற
கதைத்தொகுப்பு: குடும்பம் சிறந்த சிறுகதைகள் 100 (எஸ்.ரா.)
கதைப்பதிவு: August 13, 2012
பார்வையிட்டோர்: 18,902

அம்மா என்றதும் பளிச் பளிச்சென்று சில நிகழ்ச்சிகள் மட்டுமே நெஞ்சைக் குத்துகின்றன. அக்கா கல்யாணி அடிக்கடி மயக்கம் போட்டு விழுந்து கொண்டிருந்தாள். புரிந்து கொள்ளும் வயதில்லை எனக்கு. நான்கு வயது.

விடிகாலையில் கண் விழிக்கிறேன். ஏதோ தமுக்கு மாதிரி சத்தம் கேட்கிறது. கதவருகே சென்று பார்க்கிறேன். கல்யாணியைப் பலகையில் உட்கார்த்தி இருக்கிறார்கள். எதிரே எவனோ கொத்து இலையோட நிற்கிறான். ஆ ஊ வென்று சில மாதங்கள் மட்டுமே சிரிப்புக் காட்டிய தம்பிப் பாப்பா நான் இருந்த அறையிலேயே தொட்டிலில் இருக்கிறான்.

"நீரஜாட்சீ, போய்க் கொண்டு வா" என்கிறார்கள் யாரோ.

நான் அம்மாவைப் பார்க்கிறேன்.

கருநீலப் புடவை நினைவில் இருக்கிறது. தலைமயிரை முடிந்து கொண்டிருக்கிறாள். என் அறையை ஒட்டிய சின்ன அறையில் அம்மா நுழைகிறாள். தலைப்பை நீக்குகிறாள். கையில் இருந்த சிறு கிண்ணியில் மெல்ல தன் மார்பிலிருந்து பால் எடுக்கிறாள். கண்களில் நீர் கொட்டுகிறது.

விடிகாலை இருட்டோடு புதைக்கப்பட்டிருக்கும் தவலைக்கு அடியில் விறகு வைத்து வெந்நீர் காய்ச்ச அம்மா எழுந்திருக்கிறாள் தினமும்.

ஒருநாள் நான் அவளைப் பார்க்கிறேன். அம்மாவின் தலைமயிர் முடிச்சவிழ்ந்து தொங்குகிறது. குந்தி உட்கார்ந்திருக்கிறாள் அம்மா. கூந்தல் பாதி கன்னத்திலும் பாதி காதின் மேலும் விரிந்து கிடக்கிறது. அடுப்பு பற்றிக் கொண்டதும் குனிந்து பார்த்த அம்மாவின் பாதி முகத்தில் தீயின் செம்மை வீசுகிறது. அன்று அம்மா சிவப்புப் புடவை வேறு உடுத்தியிருக்கிறாள். உற்றுப் பார்த்துக் கொண்டே இருக்கையில் 'டக்'கென்று அவள் எழுந்து நிற்கிறாள். கூந்தல் முட்டுவரை தொங்குகிறது.

விலகியிருந்த தலைப்பினூடே ஊக்குகள் அவிழ்ந்த ரவிக்கை அடியே பச்சை நரம்போடிய வெளேரென்ற மார்பகங்கள் தெரிகின்றன. எங்கிருந்தோ பறந்து வந்து அங்கே நின்ற அக்கினியின் பெண்ணாய் அவள் தோன்றுகிறாள். அவள் அம்மாவா? அம்மா தானா?

"காளி காளி மகா காளி பத்ர காளி நமோஸ்துதே" என்ற ஸ்லோகம் ஏன் நினைவிற்கு வருகிறது?

"அம்மா.."

அம்மா தலையைத் திருப்பிப் பார்க்கிறாள்.

"இங்கே என்ன செய்யறாயடீ?"

பேச முடியவில்லை. உடம்பு வியர்க்கிறது.

வீட்டில் ஹோமம் நடக்கிறது. அம்மாவின் உதட்டின் சிவப்பாலோ, குங்குமத்தின் தீட்சண்யத்தாலோ கொழுந்து விட்டெரியும் ஜ்வாலையின் பிம்பம் அவளாகப் படுகிறது. "அக்னியே ஸ்வாஆஹா.." என்று ஸ்வாஹாவை நீட்டி முழக்கி நெருப்பில் நெய்யை ஊற்றுகிறார்கள். அந்த "ஸ்வாஹாஆ.." வின்போது பார்வை நெருப்பின் மீதும் அம்மாவின் மீதும் போகிறது.

எண்ணை தேய்த்துக் குளிப்பாட்டுகிறாள் அம்மா. புடவையைத் தூக்கிச் செருகியிருக்கிறாள். வெளுப்பாய், வழவழவென்று துடை தெரிகிறது. குனிந்து நிமிரும்போது பச்சை நரம்போடுகிறது.

"அம்மா நீ மாத்திரம் ஏம்மா இவ்வளவு வெளுப்பு? நான் ஏம்மா கருப்பு?"

சிரிப்பு.

"போடி உன் அழகு யாருக்கு வரும்?"

நிகழ்ச்சிகளில் ஒரு சம்பந்தமுமில்லை. அம்மா தான் அவற்றின் ராணி. அசுத்தங்களை எரித்துச் சுத்திகரிக்கும் நெருப்பு அவள். ஒரு சிரிப்பில் மனத்தில் கோடானுகோடி அழகுகளைத் தோரணமாட வைப்பவள் அவள். சிருஷ்டி கர்த்தா. அவள் மடியில் தலை வைத்துப் படுக்கும் போது நீண்ட மெல்லிய தண்ணென்ற விரல்களால் தடவி, “உனக்கு டான்ஸ் கத்துத் தரப் போறென். நல்ல வாகான உடம்பு” என்றோ, “என்ன அடர்த்தியடி மயிர்” என்றோ சர்வ சாதாரணமான ஒன்றைத் தான் சொல்வாள். ஆனால் மனத்தில் குல்லென்று எதுவோ மலரும்.

அம்மாவைப் பற்றிய இத்தகைய உணர்வுகளை அம்மாவே ஊட்டினாளா, நானே நினைத்தேனா தெரியவில்லை. என்னுள் பல அழகுகளுக்கு விதை ஊன்றியபோது தன்னுள் அவள் எதை ஸ்தாபித்துக் கொண்டாளோ தெரியவில்லை.

அப்போது பதிமூன்று வயது. பாவாடைகள் குட்டையாகப் போக ஆரம்பித்து விட்டன. அம்மா எல்லாவற்றையும் நீளமாக்குகிறாள்.

அம்மா மடியில் படுக்கும் மாலை வேளை ஒன்றில் எங்கோ படித்த வரிகள் திடீரென்று நினைவுவர அம்மாவைக் கேட்கிறேன்.

“அம்மா பருவம்னா என்னம்மா?”

மௌனம்.

நீண்டநேர மௌனம்.

திடீரென்று சொல்கிறாள்.

“நீ இப்படியே இருடீம்மா பாவாடைய அலைய விட்டுண்டு ஓடி ஆடிண்டு...”

சித்தி பெண் ராதுவைப் பெண் பார்க்க வருகிறார்களாம். அம்மா போய் விடுகிறாள் அங்கே. அந்த முக்கியமான நாளில் அம்மா இல்லை. கல்யாணி தான் தீபாவளி அன்று எண்ணெய் தேய்த்துத் தலை மயிரை அலசி விடுகிறாள். குளியலறையின் ஜன்னல் வழியாக இருள் கலையாத வானம் தெரிகிறது.

“கல்லுஸ்.. ரொம்ப சீக்கிரம் எழுப்பிட்டேடீ, பட்டாசு சத்தமே கேக்கலயே இன்னும்”

“உனக்கு எண்ணை தேய்ச்சுட்டு நானும் தேய்ச்சுக்க வேண்டாமா? வயசு பதிமூணு ஆறது. எண்ணை தேய்ச்சுக்க வராது உனக்கு. குனிடீ”

கல்யாணிக்கு பொறுமை கிடையாது. தேங்காய் நாரை உரிப்பது போல் தலையை வலிக்க வலிக்கத் தேய்க்கிறாள் கல்யாணி.

கத்தரிப்பூ ஸாடின் துணியில் அம்மா எனக்குப் பாவாடை தைத்திருக்கிறாள் அந்த தீபாவளிக்கு. வழுக்கிக் கொண்டு தையல் மிஷினில் ஓடும்போதே மனம் ஆசைப்பட்டது. அந்த முறை அளவு எடுத்து பாவாடை தைத்தாள் அம்மா.

“அளவு எடுக்கணும் வாடீ.. ஒசந்து போய்ட்டே நீ” அளவு எடுத்துவிட்டு நிமிர்கிறாள்.

“ரெண்டு இஞ்ச் பெரிசாய்டுத்து இந்தப் பொண்ணு”

கத்தரிப்பூ ஸாடின் பாவாடை மற்ற பாவாடைகள் மாதிரி குட்டையாக இருக்காது. வழுக்கிக் கொண்டு தரையை எட்டும்.

உலுக்கென்று எழுப்பி நிற்க வைத்துத் தலையத் துவட்டுகிறாள் கல்யாணி. ஷிம்மீஸை மாட்டிக் கொண்டு பூஜை அறைக்கு ஓட்டம். பலகை மேல் அடுக்கியிருந்த புதுத் துணிகளில் அப்பா என்னுடையதைத் தருகிறார்.

“இந்தாடி கறுப்பி…” அப்பா அப்படித் தான் கூப்பிடுவார்.

அப்பா அப்படிச் சொல்லும் போது சில சமயம் கூடத்தில் ஹா வென்று தொங்கும் கண்ணாடி முன் நின்றுகொண்டு பார்ப்பேன். அம்மா, காதில் “எத்தனை அழகு நீ” என்று கிசுகிசுப்பதைப் போல் இருக்கும்.

சரளா வீட்டில் உள்ள கண்ணாடிப் பெட்டியில் உள்ள மீன் மாதிரி வழுக்கிக் கொண்டு போகிறது பாவாடை. வெல்வெட் சட்டை. பொட்டு இட்டுக் கொண்டு அப்பா முன் போகிறேன்.

“அட பரவாயில்லையே!” என்கிறார் அப்பா.

பட்டாஸை எடுத்து முன் அறையில் வைத்து விட்டு சண்பக மரத்தில் ஏற ஓடுகிறேன். நித்தியம் காலையில் சண்பக மரத்தில் ஏறிப் பூப்பறிப்பது ஒரு வேலை. பூக்குடலையில் பூ நிரப்பி அம்மாவிடம் தந்தால், “கொள்ளை பூ” என்று கண்களை விரித்து அம்மா தன் விரல்களை அதில் அளைய விடுவாள். விரல்களே தெரியாது.

ஸாடின் பாவாடை வழுக்குகிறது. உச்சாணிக் கொம்பில் ஏற முடியவில்லை. இருட்டு வேறு. இறங்கும் தறுவாயில் படேர் என்று வெடிக்கிறது யார்

வீட்டிலோ ஒரு பட்டாஸ். உடம்பு நடுங்க மரத்திலிருந்து ஒரு குதி. வீட்டினுள் ஓட்டம். மூச்சு வாங்குகிறது.

ஆசுவாசப்படுத்திக் கொண்டு முன் அறைக்கு ஓடி என் பங்குப் பட்டாஸை வெடிக்கிறேன். அப்புறம் தான் பூக்குடலை நினைவு வருகிறது. விடிந்திருக்கிறது. பாவாடையைத் தூக்கிப் பிடித்தவாறே மரத்தினடியில் கிடந்த பூக்குடலையை எடுக்கக் குனிகிறேன். பூக்கள் சில சிதறியிருக்கின்றன. நன்றாகக் குனிந்து எடுக்கும்போது பாவாடை தரையில் விரிகிறது. புதுப்பாவாடையில் அங்கும் இங்கும் கறைகள். மரம் ஏறியதாலோ?

"கல்லூஸ்.." என்று அழைத்தவாறே உள்ளே வந்து "பாவாடை எல்லாம் அழுக்காக்கியுட்டேண்டி. அம்மா வைவாளா?" என்று கேட்டுக் கொண்டு பூக்குடலையுடன் அவள் முன் நிற்கிறேன். கல்யாணி ஒரு நிமிடம் வெறிக்கப் பார்த்துவிட்டு "அப்பா" என்று கூவிக் கொண்டே போகிறாள்.

கல்யாணியின் பார்வை, பூக்குடலையைக் கூட வாங்காமல் அவள் உள்ளே ஓடியது எல்லாமாக மனத்தில் கம்பளிப் பூச்சி நெளிகிறது. ஸாடின் பாவாடையைப் பார்க்கிறேன். வெல்வெட் சட்டையைத் தடவிப் பார்க்கிறேன். ஒன்றும் ஆகவில்லையே?

பகவானே, எனக்கு ஒன்றும் ஆகவில்லையே? என்னை நானே கேட்டுக் கொள்ளும் போதே தெரிகிறது ஏதோ ஆகிவிட்டதென்று. எங்கும் பட்டாஸ் ஒலிகள் கேட்டவாறிருக்கின்றன. கையில் பிடித்த பூக்குடலையுடன் வேகமாக மூச்சு விட்டவாறு உடம்பு பதற உதடுகள் துடிக்க நிற்கிறேன். ஹோ வென்று அழுகை வருகிறது.

அம்மாவைப் பார்க்க வேண்டும். சின்னாளப்பட்டு உடுத்திய தோளில் தலையை அழுத்திப் பதித்துக் கொள்ள வேண்டும். "பயமா இருக்கே" என்று வெட்கமில்லாமல் சொல்லி அழ வேண்டும். அம்மா தலையைத் தடவித் தருவாள். என்னவோ ஆகிவிட்டதே பயங்கரமாக...

முறுக்குப் பிழிய வரும் மொட்டைப் பாட்டியை எங்கிருந்தோ கூட்டிக் கொண்டு வருகிறாள் கல்யாணி. பாட்டி அருகில் வந்தாள்.

"என்னடீம்மா அழறே? என்னாய்டுத்து இப்போ? லோகத்துலே இல்லாதது ஆய்டுத்தா?"

பாட்டி சொன்னது ஒன்றும் புரியவில்லை. என் உணர்வு தான் எதையோ புரிந்து கொண்டு பயத்தில் சில்லிட்டதே ஒழிய அறிவுக்கு ஒன்றும் எட்டவில்லை. மனத்தின் ஆழத்திலிருந்து ஆறாத தாகமாய்க் கிளம்பிய ஒரே ஒரு அழைப்பு... "அம்மா"..

ஐந்து வயதில் ஒருமுறை காணாமல் போய் விட்டதை மீண்டும் நினைக்கிறேன். பெரிய பூங்கா ஒன்றில் நீள் இருள் கவிவது தெரியாமல் நடக்கிறேன். திடீரென்று இருளும், மரங்களும், ஓசைகளும், அமைதியும் மனத்தில் பயத்தை உண்டாக்குகின்றன. அப்பா தான் தேடிப் பிடிக்கிறார். ஆனால் அம்மாவைப் பார்த்ததும் தான் அழுகை பீறிடுகிறது.

அம்மா பக்கத்தில் போட்டுக் கொள்கிறாள். தடவித் தருகிறாள். :ஒன்னும் ஆகலியே. எல்லம் சரியாப் போயிடுத்தே" என்று மெல்லப் பேசுகிறாள். சிவந்த உதடுகள் நெருப்புக் கீற்றாய் ஜ்வலிக்க தன் முகத்தை என் முகத்தின் மீது வைக்கிறாள்.

இப்போதும் எங்கேயோ காணாமல் போய் விட்டதைப் போல அடித்துக் கொள்கிறது. கீழே உட்கார்ந்து முட்டங்காலில் தலை பதித்து அழுகிறேன். எதுவோ முடிந்து விட்டது போல் தோன்றுகிறது. தியேட்டரில் 'சுபம்' காட்டிய பிறகு எழுந்து வெளியே வருவதைப் போல், எதையோ விட்டுவிட்டு வந்தாற் போல் தோன்றுகிறது. அந்தச் சமயத்தில் உலக சரித்திரத்தில் எனக்கு ஒருத்திக்கு மட்டுமே அந்த துக்கம் சம்பவித்தது போல் படுகிறது. அத்தனை துக்கங்களையும் வெல்வெட் சட்டை அணிந்த மெல்லிய தோள்கள் மேல் சுமையாய்த் தாங்குவது போல் அழுகிறேன்.

இருவருமாக இருந்த மாலை வேளைகளில் அம்மா இது பற்றி ஏன் சொல்லவில்லை என்று நினைக்கிறேன். மனத்தை வியாபித்த உணர்வு பயம் மட்டுமே. புதுச் சூழ்நிலையில் புது மனிதர்களிடையே உண்டாகும் சாதாரண பயம் அல்ல. பாம்பைக் கண்டு அலறும் மிரளலில் அரண்டு போய் வாயடைத்துப் போகும் பதைப்பு. மன மூலைகளிலெல்லாம் பயம் சிலந்தி வலைகளாகத் தொங்குகிறது.

வெளுத்த உதடுகள் பிளந்து கிடக்கப் பார்த்த உருவம் மனத்தில் தோன்றுகிறது. மண்டை கல்லில் மோதிவிட்டது. என் முன்னே மென் சிவப்பாய் வழுக்கையாய் நடந்து கொண்டிருந்த தலை திடீரென்று குகை வாயாய்த் திறந்து கரும்சிவப்பாய் ரத்தம் பீறிட்டு வந்தது. நிமிடத்தில் ரத்தம் தலையில் கொட்டியது. ரத்தத்தையே வெறித்துப் பார்த்தேன். சிவப்பு எங்கும் படந்து கண்களிலேயே பாய்ந்து ஓடுவது போல் தோன்றியது. மனம்

மீண்டும் மீண்டும் அரற்றியது. “ஐயோ எத்தனை ரத்தம், எத்தனை ரத்தம்” வாயில் ஓசையே பிறக்கவில்லை. ரத்தப் படுக்கை. கிழவன் வாய் திறந்தது, கண்கள் வெறித்துப் போனது, நெஞ்சில் துருத்திக் கொண்டு நிற்கிறது.

ரத்தம் எத்தனை பயங்கரமானது... உதடுகள் வெளுக்க.. கை கால்கள் அசைவற்றுப் போக..

அம்மா தேவை. இருட்டைக் கண்டு பயந்ததும் அணைத்து ஆறுதல் சொல்வது போல், இந்த பயத்திலிருந்து மீள அம்மா வேண்டும் என்று மனம் ஏங்குகிறது. அம்மா ஜில்லென்று கரத்தைத் தோளில் வைத்து, “இதுவும் ஒரு அழகுதான்” என்கக் கூடாதா?

“எழுந்திரேண்டீ ப்ளீஸ்.. எத்தனை நாழிடீ அழுவாய்?” என்னுடன் கூட உட்கார்ந்து தானும் ஒரு குரல் அழுத கல்யாணி கெஞ்சுகிறாள்.

“அம்மா..”

“அம்மாதான் அடுத்த வாரம் வராளே. இப்போ தான் இதைப் பற்றி லெட்டர் போட்டேன். ராதுவுக்குப் பெண் பார்க்கிறது எல்லாம் முடிஞ்சப்புறம் வருவா. இப்போ நீ எழுந்திருடீ. சுத்த தலைவேதனை.” கல்யாணிக்கு கோபம் வர ஆரம்பிக்கிறது.

“எனக்கு என்னடீ ஆய்டுத்து?”

“உன் தலை மண்டை ஆய்டுத்து, எத்தனை தடவை சொல்லறது?

“இனிமே எல்லாம் நான் மரத்துலே ஏறக் கூடாதா?”

‘நறுக்’ என்று குட்டுகிறாள் கல்யாணி.

“தடிச்சி! அரை மணியா எழுந்திரு, பாவாடையை மாத்தறேன்னு கெஞ்சறேன். நீ கேள்வி வேற கேக்கறியா? அப்பா இவள் ரொம்பப் படுத்தறாப்பா” என்று அப்பாவுக்கு குரல் கொடுக்கிறாள்.

அப்பா வந்து “அசட்டுத்தனம் பண்ணக் கூடாது. கல்யாணி சொல்றபடி கேக்கனும்” என்கிறார்.

முறுக்குப் பாட்டி வேறு, “என்ன அடம்பிடிக்கிறாள்? எல்லாருக்கும் வர தலைவிதி தானே” என்கிறாள், அப்பா போன பிறகு.

ஏழுநாட்கள். அம்மா வர இன்னும் ஏழு நாட்கள்.ராதுவைப் பெண் பார்த்த பிறகு. இருட்டில் தடுமாறுவதைப் போல் ஏழு நாட்கள். அடுத்தகத்து மாமி, எதிர்வீட்டு மாமி எல்லோரும் வருகிறார்கள் ஒருநாள்.

“தாவணி போடலயாடி கல்யாணி?”

“எல்லாம் அம்மா வந்தப்புறம் தான் மாமி. இது அடங்காப் பிடாரி. அம்மா சொன்னால் தான் கேட்கும்”

“இனிமே எல்லாம் சரியாப் போய்டுவா. இனிமே அடக்க ஒடுக்கம் வந்துடும்”

“ஏன்?” இனிமேல் என்ன ஆகிவிடும்?

தாவணி ஏன் போட்டுக் கொள்ள வேண்டும்? அம்மா சொன்னாளே.. ‘இப்டியே இருடீம்மா..பாவாடைய அலைய விட்டுண்டு..’ நான் ஏன் மாற வேண்டும்? யாருமே விளக்குவதில்லை.

பொம்மை போல் என்னை உட்கார்த்தி வைத்துப் பேசுகிறார்கள். அப்பா வந்தால் தலைப்பைப் போர்த்திக் கொண்டு மெதுவாகப் பேசுகிறார்கள்.

ஐந்தாம் நாள் “நீயே எண்ணெய் தேய்ச்சிக்கோடி” என்னிடம் சுடச் சுட எண்ணையைக் கிண்ணியில் ஊற்றிக் கொடுக்கிறாள் கல்யாணி.

இடுப்பின் கீழ் நீண்ட கூந்தலுடன் அழுதவாறே போராடிவிட்டு ஷிம்மீஸுடன் கூடத்துக் கண்ணாடி முன் நிற்கிறேன்.

“இனிமே பாத்ரூமிலேயே டிரெஸ் பண்ணிக்கனும் தெரிஞ்சுதா” என்கிறார் அப்பா.

அப்பா போன பிறகு கதவைச் சாத்துகிறேன். ஷிம்மீஸைக் கழற்றிப் போடுகிறேன். கறுப்பு உடம்பை கண்ணாடி பிரதிபலிக்கிறது. முகத்தை விடச் சற்றே நிறம் மட்டமான தோள்கள், கைகள், மார்பு, இடை, மென்மையான துடைகளின் மேல் கை ஓடுகிறது. நான் அதே பெண் இல்லையா? அம்மா என்ன சொல்லப் போகிறாள்?

ஸ்கூல் யூனிபார்ம் போட்டுக் கொள்கிறேன். கதவைத் திறந்ததும் கல்யாணி வருகிறாள். “ஸ்கூல்லே ஏன் வரல்லேன்னு கேட்டா என்னடீ சொல்வே?”

கல்யாணியை வெறித்துப் பார்க்கிறேன். கூண்டிலிருந்து விடுபட்ட பட்சி போல் குதூகலத்துடன் ஸ்கூலுக்கு கிளம்ம்பிக் கொண்டிருந்த வேகம் குறைகிறது.

“ஒன்னும் சொல்லவேண்டாம். சும்மா இரு”

அன்று கேம்ஸ் பீரியடில் விளையாடவில்லை. அகன்ற மரம் ஒன்றின் பின் மறைந்து கொள்கிறேன். முன்பு ஒரு முறை அப்படி விளையாடாமல் இருந்திருக்கிறேன். மறுநாள் காலை மிஸ். லீலா மேனன் வகுப்பில் “நேற்று விளையாடாத முட்டாள்கள் யார்?” என்றாள். நான் எழுந்திருக்கவில்லை.

“நீ ஏன் எழுந்திருக்கவில்லை?” என்றாள்.

“நான் முட்டாள் இல்லையே மிஸ்” என்றேன். ப்ரோக்ரஸ் ரிப்போர்ட்டில் எழுதி விட்டாள் இம்பர்டினண்ட் என்று.

அன்று மிஸ்.லீலா மேனன் திட்டு பற்றிக் கூட மனம் பயப்படவில்லை. இப்போது எனக்கு ஆகியிருக்கும் ஒன்றைவிட வேறு எதுவும் எப்போதும் என்னை பாதிக்காது என்று படுகிறது. மரத்தடியே உட்கார்ந்து வழக்கம் போல எனிட் ப்ளைடன் படிப்பதில்லை. கீழே வெட்டப்பட்டிருந்த குழியில் உதிர்ந்தவாறிருக்கும் பழுத்த இலைகளிடம் நான் கேட்கிறேன். “எனக்கு என்ன தான் ஆகித் தொலைந்து விட்டது?”

கூண்டிலிருக்கும் கைதி நீதிபதியின் வாயைப் பார்ப்பது போல் அம்மாவின் சொல் ஒன்றுக்காக மட்டுமே மனம் எதிர்பார்க்கிறது. கண்களைத் தாழ்த்தி என்னைப் பார்த்தவாறே, “உனக்கு ஆகியிருக்கும் இதுவும் அழகு தான்” என்பாளா அம்மா? பயமுறுத்திய முறுக்குப் பாட்டி, கல்யாணி எல்லோரையும் புன்னகையின் ஒரு தீப்பொறியில் அவள் ஒதுக்கித் தள்ளி விடுவாள். அம்மா வித்தியாசமானவள். அவள் நிற்கும் இடத்தில் வேண்டாதவை அழிந்து வெறும் அழகு மட்டுமே ஆட்சி செலுத்தும். அவளுக்கு எல்லாமே அழகு தான்.

அம்மா ரொம்பத் தேவையாக இருக்கிறாள். ஏதோ ஒன்று விளக்கப்பட வேண்டும். கத்தரிப்பூ ஸாடின் பாவாடையை நினைத்தாலே உடம்பு வியர்த்துப் போய் நடுங்குகிறதே. நாக்கு தடித்துப் போய் மரக்கட்டையாய் வாயில் லொட்டென்று படுத்து விடுகிறதே. திடீரென்று இருட்டு கவிந்து கொள்கிற மாதிரியும் திரும்பிப் பார்ப்பதற்குள் ‘ணங்’கென்ற சத்தமும், ரத்தப் பெருக்கும் நீண்டு கட்டையாய்ப் போன உடலும் அந்த இருட்டில் தோன்றுவது போல இருக்கிறதே, அதை மென்மையான வார்த்தைகளால் யாராவது விளக்க வேண்டும்.

நான் யாருமே இல்லாமல் இருப்பது போல் உணர்கிறேன். தோட்டக்காரன் எழுப்பியபின் மெல்ல வீட்டுக்குப் போகிறேன்.

"ஏண்டீ இவ்ளோ லேட்? எங்கே போனே?"

"எங்கேயும் போகல.. மரத்தடியிலே உட்கார்ந்திருந்தேன்"

"தனியாவா?"

"உம்"

"ஏண்டீ நீ என்ன இன்னும் சின்னப் பொண்ணா? ஏதாவது ஆகிவைத்தால்?"

ஸ்கூல் பையை விட்டெறிகிறேன். முகம் எல்லாம் சூடேறுகிறது. செவிகளைக் கையால் மூடிக் கொண்டு வீறிட்டுக் கத்துகிறேன்.

"நான் அப்படித்தஅன் உட்காருவேன். எனக்கு ஒன்னும் ஆகலை"

ஒவ்வொரு வார்த்தையையும் நீட்டி, அழுத்தி வெறிக்கத்தலாய்க் கத்துகிறேன். அப்பாவும் கல்யாணியும் அதிர்ந்து போய் நிற்கின்றனர். நான் கோபித்துக் கொண்டு மொட்டை மாடிக்குப் போய் உட்காருகிறேன். சண்பக மரத்தின் வாசனையோடு அங்கேயே இருக்கலாம். கல்யாணியும் அப்பாவும் இங்கே வரக் கூடாது. நானும் சண்பக மர வாசனையும் மட்டுமே. ஒன்றும் பேசாத, தொடாத அந்த வாசனை வீட்டு மனிதர்களை விட நெருங்கிய ஒன்றாகப் படுகிறது. இவர்கள் பேசாமல் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அம்மா மாதிரி விழிகளை விரித்துச் சிரிப்பு.

அம்மா அப்படி பார்த்தால் நெஞ்சினுள் ஏதோ செய்யும். வாய்விட்டு சிரிக்கத் தோன்றும். பாடத் தோன்றும். அம்மா சிருஷ்டிப்பவள். ஆனந்தத்தை, உத்ஸாகத்தை, அழகை எல்லாம் தலையைத் திருப்பி ஒரு புன்னகையால் ஜாலம் செய்து வரவழைப்பவள்.

கல்யாணி மேலே வருகிறாள்.

"சாப்பிட வாடீம்மா சின்ன ராணி, அம்மா உன்னைச் செல்லம் கொடுத்து குட்டிச் சுவராக்கிட்டா"

அலட்சியமாக உதட்டைப் பிதுக்கியவாறே எழுந்து கொள்கிறேன்.

மறுநாள் காலை அம்மா வருகிறாள். டாக்ஸியின் கதவைத் திறந்து கரும்பச்சைப் பட்டுபுடவை கசங்கியிருக்க, அம்மா வீட்டிற்குள் வருகிறாள்.

"என்ன ஆச்சு?" என்கிறார் அப்பா.

"பொண்ணு கறுப்பாம். வேண்டாம்னுட்டான் கடங்காரன்"

“உன் தங்கை என்ன சொல்றா”

“வருத்தப்படறா பாவம்”

“நமக்கும் ஒரு கறுப்புப் பொண்ணு உண்டு”

மொட்டென்று அம்மா முன் போய் நிற்கிறேன். கல்யாணி லெட்டரில் எழுதியதை விட விளக்கமாய் நானே சொல்ல வேண்டும் என்று தோன்றுகிறது. மெல்ல அவள் கழுத்துப் பதிவில் உதடுகள் நடுங்க மென்குரலில் எல்லாவற்றையும் அரற்ற வேண்டும் போல் படுகிறது. நெஞ்சில் நெளியும் பயத்தைக் கூற வேண்டும் என்று அடித்துக் கொள்கிறது.

ஏதோ மர்மமான ஒன்றை – இரவு படுத்துக் கொண்டதும் தொண்டையை அடைத்துக் கொள்ள வைக்கும் உணர்வை, என் உடம்பே எனக்கு மாறுதலாகப் படும் தவிப்பை – அம்மா விளக்கப் போகிறாள் மெல்ல என்று அவள் முகத்தையே பார்க்கிறேன். வாழைத்தண்டு போல் நீண்ட கரங்களால் அவள் என்னை அணைக்கப் போகிறாள். நான் அழப் போகிறேன் உரக்க. அம்மாவின் கூந்தலில் விரல்களைத் துளைத்துப் பெருத்த கேவல்களுடன் அழப் போகிறேன்.

அம்மா என்னைப் பார்க்கிறாள். நான் ஒரு கணம் அவள் கண்முன் ராதுவாய் மாறுகிறேனா என்று தெரியவில்லை.

“உனக்கு இந்த இழவுக்கு என்னடீ அவசரம்? இதுவேற இனிமே ஒரு பாரம்” சுளீரென்று கேள்வி.

யாரைக் குற்றம் சாட்டுகிறாள்?

ஒலியில்லாக் கேவல்கள் நெஞ்சை முட்டுகின்றன.

அம்மாவின் உதடுகளும், நாசியும், நெற்றிக் குங்குமமும், மூக்குப் பொட்டும், கண்களும் ரத்த நிற ஜ்வாலையை உமிழ்வது போல் தோன்றுகிறது. அந்த நெருப்பில் அவள் மேல் போர்த்தியிருந்த தேவ ஸ்வரூபம் அவிழ்ந்து விழ நிர்வாணமான வெறும் மனித அம்மாவாய் அவள் படுகிறாள். அந்த ஈரமில்லாச் சொற்கள் பட்டாக் கத்தியாய் எழுந்து முன்பு முளைவிட்டிருந்த அத்தனை அழகுகளையும் குருட்டுத் தனமாக ஹதம் செய்கிறது. தீராத பயங்கள் கரும் சித்திரங்களாய் நெஞ்சில் ஒட்டிக் கொள்கின்றன.

அக்னியே ஸ்வாஆஆஹா... அசுத்தங்கள் மட்டும் எரிக்கப்படவில்லை. மொட்டுக்களும் மலர்களும் கூட கருகிப் போயின.


அம்பையின் படைப்பில் குடும்ப உறவுகள்

https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-oct25/48692-ampaiyin-pataippil-kutumpa-uravukal

"அம்பையின் கதை மொழியும் கதையைக் கட்டமைக்கும் விதமும் தமிழ்ச் சிறுகதைகளுக்கு மிகவும் புதியது. அதன் காரணமாகவே அவர் ஆழ்ந்து வாசிக்கப்பட்டார். இன்றும் கொண்டாடப்படுகிறார்"

- எஸ். ராமகிருஷ்ணன்

அம்பை தமிழ் இலக்கியப் படைப்புலகில் பெண்ணிய எழுத்தாளராக பலராலும் அறியப்பட்டவர். அம்பை தனது படைப்புகளில் மட்டும் பெண்ணியம் பேசாமல் அவரது செயல்பாடுகளின் வழியாகவும் பெண்களுக்காகப் போராடி வருபவர். அவர் ஸ்பேரோ (SPARROW - SOUND & PICTURE ARCHIVES FOR RESEARCH ON WOMEN) என்ற ஆவணக் காப்பகத்தின் மூலம் பெண்களின் வாழ்க்கையும், சரித்திரத்தையும் ஆவணப் படுத்தி வருகிறார். ஸ்பேரோ இந்தியாவில் பெண்களுக்கான ஒரே ஆவணக் காப்பகமாக செயல்பட்டு வருகிறது. சிறுகதைகளின் வழியே குடும்ப அமைப்பில் பெண்களின் நிலையை அம்பை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார். அவரது பல சிறுகதைகள் குடும்ப உறவுகளின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்துபவைகளாக அமைந்துள்ளன. அம்பையின் 'காட்டில் ஒரு மான்' என்ற சிறுகதைத் தொகுப்பில் அமைந்துள்ள 'பிரசுரிக்கப்படாத கைப்பிரதி' என்ற சிறுகதையில் அமைந்துள்ள குடும்ப உறவுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.



குடும்ப உறவுகள் :

குடும்பம் என்பது மனித சமுதாயத்தின் முக்கியமானதொரு அங்கமாகும். குடும்பமானது கணவன், மனைவி, குழந்தைகள், தாத்தா, பாட்டி மற்றும் பிற உறவுகளை உள்ளடக்கிய அமைப்பாகத் திகழ்கிறது. "அன்பு வளர்வதற்கும், தன்னலம் குறைந்து பொதுநலம் பெருகுவதற்கும், இன்றளவும் சமுதாய வாழ்வில் ஒழுங்கு, கட்டுப்பாடு போன்றவற்றைக் காப்பதற்கு மிகப் பெரிய காரணமாக இருக்கும் அமைப்பு குடும்பம்" (ந. பிச்சமுத்து - 1988 - ப.210). இத்தகைய குடும்பத்தில் உள்ள உறவுகள் தான் மனித வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்குகின்றன.

குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒற்றுமையுடன் வாழும் போது குடும்ப உறவுகள் சிறக்கின்றன.

கணவன் - மனைவி உறவு :

திருமணம் என்னும் பந்தத்தால் ஒன்றுசேரும் கணவன்- மனைவி உறவானது குடும்ப உறவுகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. அம்பையின் 'பிரசுரிக்கப்படாத கைப்பிரதி' என்ற சிறுகதையில் திருமகள்

முத்துக்குமரனை விரும்பி திருமணம் செய்து கொண்டாலும் அவளது உணர்வுகளை மதிக்கத் தெரியாத கணவனாக அவன் இருப்பதால் அவர்கள் உறவில் பிரச்சனைகள் எழத் தொடங்குகிறது. திருமணத்திற்குப் பின்பு சமைப்பதும், விருந்தோம்புவதும் மட்டுமே பெண்களுக்கான வேலை. படிப்பதும், எழுதுவதும் ஆண்களுக்கான வேலை என்ற எண்ணம் கொண்டவனாக முத்துக்குமரன் இருப்பதை திருமகளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. "எப்பப் பாத்தாலும் என்ன டைப் ரைட்டர் முன்னால வேல? நான் கவிதை எழுதுறவன் நான் அப்பிடி உக்காந்தா சரி, நீ என்னனுட்டு எழுதி கிழிக்கறே" என்று முத்துக்குமரன் திருமகளிடம் கேட்பதிலிருந்து ஆணாதிக்கச் சிந்தனை கொண்ட கணவனாக அவன் இருப்பதை அறியமுடிகிறது. திருமண உறவில் பெண்ணானவள் எத்தகைய நிலைக்கு தள்ளப்படுகிறாள் என்பதை திருமகள் "உங்க தமிழ்ப் பண்பாட்டுல ஒரு பொண்ணுக்கு படுத்துத் தூங்க வேளை, பொழுது உண்டில்லையா?" என்று முத்துக்குமரனின் நண்பர்களிடம் ஆதங்கப்படுவதிலிருந்து உணர முடிகிறது.

முத்துக்குமரனின் அளவு கடந்த ஆதிக்கத்தாலும், தாக்குதல்களாலும் பாதிக்கப்படும் திருமகள் ஒரு கட்டத்தில் அவனுக்கு மனைவி என்ற உறவிலிருந்து தன்னை விலக்கிக்கொண்டு தன் மகளுக்கு தாயாக மட்டும் வாழ்க்கையை தொடர தீர்மானிப்பதால் அவர்களுக்கு இடையேயான கணவன் - மனைவி உறவானது முடிவுக்கு வருகிறது. ஆனால் திருமகளின் தந்தையான ராமசாமி அவர் மனைவிக்கு நல்ல கணவர். விதவையை திருமணம் செய்வது என்பது மறுவாழ்வு கொடுப்பது கிடையாது என்ற தூய்மையான எண்ணத்துடன் அவர் மனைவியை திருமணம் செய்துகொண்டவர். திருமணத்திற்கு முன்பு அவரது மனைவி படிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்காக திருமணம் முடிந்ததும் ஆசிரியர் பயிற்சியில் மனைவியை சேர்த்துவிட்ட பின்பு மலேயாவுக்கு புறப்பட்டுச் சென்றவர். மனைவியின் பிறந்த தினத்தை உணவு மற்றும் இனிப்புடனும், இறந்த தினத்தை 'வாராய் நீ வாராய்' என்ற பாட்டுடனும் நினைவு கூர்ந்து மனைவியின் நினைவுகளில் வாழும் கணவராக ராமசாமி இருப்பதையும் அம்பையின் பிரசுரிக்கப்படாத கைப்பிரதி என்ற சிறுகதை பதிவு செய்துள்ளது. (அம்பை - 2000 - பக்.83-104)

தாய் - மகள் உறவு :

முத்துக்குமரனை பிரிந்து காசிக்குச் சென்றபிறகு பல்கலைக்கழகத்தில் பேராசிரியையாகப் பணிபுரியும் திருமகள் அதிகப்படியான வேலைகளுக்கு மத்தியிலும் மகள் செந்தாமரையின் மீது அதிக அன்பும், பாசமும் காட்டும் தாயாகவே இருக்கிறாள். தாயைப் புரிந்துகொண்ட மகளாகவே செந்தாமரையும் பள்ளியிலிருந்து வந்ததும் திருமகளுக்காக டீ போட்டுக் கொடுப்பது, அகராதியில் சொற்களை பார்ப்பது, தட்டச்சுப் பொறியின் நாடாவை மாற்றுவது, புத்தகங்களில் மேற்கோள்களைத் தேடுவது என அம்மாவுக்கு உதவி புரிகிறாள். திருமகளுடன் வாழ விரும்புவதாகக் கூறும் மோஹன் குப்தாவுக்கு "நானும் என் மகளும் கூடிய இந்த உலகை உருவாக்க நான் நிரம்பச் சிரமப்பட்டேன் மோஹன். அதை உன்னால் கற்பனை கூட செய்ய முடியாது. அது உன் நாடகங்களை விட அதிக நாடகத் தன்மையுடையது. முத்துக்குமரன் இல்லாத இந்த வீட்டை அமைக்க நான்... நான்... பைத்தியக்கார ஆஸ்பத்திரியில்..." என்று அவள் பதில் அளித்ததிலிருந்து மகளுக்காக வாழ்க்கையை அர்ப்பணித்த தாயாகவே திருமகளை அம்பையின் படைப்பில் காண முடிகிறது. திருமகளுக்கு மூன்று வயதாக இருக்கும் போதே அவளது தாய் இறந்து விட்டதால் அவர்களின் உறவு கதையில் பெரிதாக பேசப்படவில்லை.(அம்பை - 2000 - பக்.83-104)

தந்தை - மகள் உறவு :

மனைவி இறந்த பிறகு மூன்று வயதான மகளை மலேயாவில் இருந்து தமிழ்நாட்டுக்கு அழைத்து வந்த ராமசாமி தனி ஆளாகவே திருமகளை வளர்த்து ஆளாக்குகிறார். ராமசாமி "நீ படிம்மா. இப்பதான் படிக்க முடியும்" என்று திருமகளிடம் சொல்வதுடன் மகள் படிக்க வேண்டும் என்பதற்காக எல்லா வேலைகளையும் அவரே ஏற்றுச் செய்யும் பாசமிகு தந்தையாகவும் இருக்கிறார். திருமகள் முத்துக்குமரனை விரும்புவதாகச் சொன்னபோது மறுப்பு சொல்லாத தந்தையாக ராமசாமி இருப்பதையும், தந்தை இறந்த பிறகும் அவரின் கொள்கைகளை பின்பற்றும் மகளாக திருமகள் இருப்பதையும் கதையின் வழி அறியமுடிகிறது. செந்தாமரை குழந்தையாக இருந்தபோதே அவளுக்கும் முத்துக்குமரனுக்கும் இடைவெளி ஏற்பட்டு விட்டாலும் குழந்தையாக அவள் தந்தையின் கையில் இருந்த புகைப்படத்தின் வழியே அவர்களின் தந்தை - மகள் உறவினை கதையில் காண முடிகிறது. (அம்பை - 2000 - பக்.83-104)

பிற உறவுகள்

செந்தாமரை பிறந்த ஆறாம் மாதம் அவள் ராமசாமியின் படுக்கையையும், சட்டையின் ஒரு பகுதியையும் நனைத்துவிட்டு அவர் சட்டைக் காலரை இழுத்தவாறு கிடக்க ராமசாமி இறந்து போவதாக அவர்களின் தாத்தா - பேத்தி உறவு நிறைவு பெறுகிறது. ராமசாமி இறந்து அவரைக் கொண்டு போன போது முத்துக்குமரன் அதிகமாக அழுததிலிருந்து இருவருக்கும் இடையேயான மாமனார் - மருமகன் உறவை புரிந்துகொள்ள முடிகிறது. ராமசாமி வீட்டுக்கு வரும் தூரத்து உறவினர்களும் பெயரளவு குடும்ப உறவுகளாக கதையில் இடம்பெற்றுள்ளனர்.(அம்பை -2000 - பக்.83 - 104)

தொகுப்புரை

* தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தில் குடும்ப உறவுகளின் பல்வேறு விதமான பரிமாணங்களை அடையாளப் படுத்துவதில் அம்பை முக்கியப் பங்கு வகித்திருப்பதை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

* அம்பையின் படைப்பில் கணவன் - மனைவி உறவானது இரு வேறு கருத்தாக்கங்களைக் கொண்டு அமைந்துள்ளது. ஆணாதிக்கச் சிந்தனைகள் கொண்ட கணவனாக மனைவியிடம் நடந்து கொள்ளும்போது அவர்களுக்கு இடையேயான உறவு சிதைந்து விடுவதையும், மனைவியின் உணர்வுகளை மதிக்கத் தெரிந்த கணவனால் கணவன் - மனைவி உறவானது வலுப்படுவதையும் அறியமுடிகிறது.

* மகளுக்காக வாழ்க்கையை அர்ப்பணித்த தாய், தாயைப் புரிந்துகொண்ட மகள் என தாய் - மகள் உறவானது படைக்கப்பட்டுள்ளது.

* தந்தை - மகள் உறவானது தந்தைக்கு மகள் மீதான அன்பின் அடிப்படையிலும், மகளுக்கு தந்தை மீதான புரிதல் அடிப்படையிலும் அமைந்துள்ளது.

* பேத்தி மீது அளவு கடந்த அன்பு வைத்திருக்கும் தாத்தாவின் இறுதி தருணங்களும் பேத்தியுடனே அமைந்து விடுவதையும், மாமனாரின்

இழப்பைத் தாங்க முடியாத மருமகளின் துயரம் போன்றவற்றையும் பிற உறவுகளின் வழியே அறிந்துகொள்ள முடிகிறது.

பார்வை நூல்கள் :

1. அம்பை - காட்டில் ஒரு மான், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட், 668, கே.பி சாலை, நாகர்கோவில் - 629001

2. பிச்சமுத்து, ந. - மு. வ. நாவல்களில் சமுதாய மறுமலர்ச்சியின் தாக்கம், சக்தி புத்தக நிலையம், சென்னை

- **வெ.சந்தியா,** முனைவர் பட்ட ஆய்வாளர், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு,வேலூர் - 632115.

& **முனைவர் நா. சிவகுரு,** இணைப்பேராசிரியர், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632115

காணொளிகள்

01] எழுத்தாளர் அம்பையின் சிறுகதைகள் குறித்து எழுத்தாளர் டாக்டர் ஜி.ராமானுஜத்தின் சிறப்புரை
https://www.youtube.com/watch?v=VT1Va_iGM-w [1:23:13]

02] 'அம்பை படைப்புகள் குறித்து' - நாயகி 2026 | தி பரமேசுவரி
https://www.youtube.com/watch?v=KxuA6yIiFC8 [39:39]

03] வீட்டின் மூலையில் ஒரு சமையலறை - அம்பை – சிறுகதை
https://www.youtube.com/watch?v=D9MN9ORmMlo [42:46]

04] அறைக்குள்ளிருந்தவன் - அம்பை சிறுகதை
https://www.youtube.com/watch?v=CgUG7K4MreU [25:38]

05] அம்பை சிறுகதைகள் | அம்மா ஒரு கொலை செய்தாள்
https://www.youtube.com/watch?v=Cn6Jvn-1S6I [27:01]

06] காட்டில் ஒரு மான் - அம்பை, நூல் அறிமுகம்
https://www.youtube.com/watch?v=vAojHVHDPXY [25:43]

(😊)(😊) அம்பை (😊)(😊)